பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 11 சனிக்கிழமை (24.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 149

# 37 அமைச்சர்கள், 39 பிரதி அமைச்சர்கள்

# நேற்று ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்

கொழும்பு,ஏப்ரல் 24

**முப்பத்தியேழு உறுப்பினர்களைக்கொண்ட அமைச்சரவை நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றது.**

**மேலும், முப்பத்தி ஒன்பது பிரதி அமைச்சர்களும் நேற்றுப் பதவியேற்றனர்.**

நேற்றைய பதவியேற்பு வைபவத்தில் பதவியேற்கத் தவறிய ஒரு சிலரின் இடங்கள் நிரப்பப்படும் போது அமைச்சர்களின் எண்ணிக்கை நாற்பதாகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை நாற்பதாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய வெளிவிவகார அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி, ஊடகத்துறை, பாதுகாப்புத்துறை, சமுர்த்தி, அரசமைப்பு விவகாரம் போன்றவற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்வசமே வைத்திருக்கிறார்.

அமைச்சர்கள் பதவியேற்பு வைபவம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நேற்று அமைச்சுப் பதவிகளை ஏற்காத அரசுத் தரப்பு முக்கியஸ்தர்களில் எஸ்.பி. திஸநாயக்கா, சரத் அமுனுகம, மஹிந்தானந்த அளுத்கமகே, பைஸர் முஸ்தபா ஆகியோரும் அடங்குவர். இவர்களின் தேர்தல் மாவட்டமான கண்டியில், நாவலப்பிட்டியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறை

(24ஆம் பக்கம் பார்க்க)

**அமைச்சரவை உள்ளே**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட புதிய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் விவரம் உள்ளே 21ஆம் பக்கத்தில்.

## ஒருமித்த இலங்கைக்குள் தீர்வுத் திட்டம்: சம்பந்தனின் கருத்துக்கு அரசு வரவேற்பு

### சார்க் மாநாட்டின் பின்னர் இது குறித்து பேச்சு என்கிறார் டலஸ்

கொழும்பு,ஏப்.24

ஒருமித்த இலங்கைக்குள் தீர்வுத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடத் தயாராக இருக்கின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளமையை அரசு வரவேற்றுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும இக்கருத்தை வெளியிட்டார்.

தமிழ்த் தரப்பிலிருந்து கடந்த 30 - 40 வருடங்களில் கிடைக்கபெற்ற சிறந்த சமிக்ஞை இதுவெனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் டலஸ் அழகப்பெரும, அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துமாறு கட்சியின் சிரேஷ்ட

(24ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல் சம்பவத்தில் கைதான மூவரையும் தடுத்து வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்.24

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இருவர் கடத்தப்பட்டு கப்பம் கோரிய சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரும் ஒருமாத தடுப்புக் காவல் உத்தரவில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மகேந்திரன், நவாலியைச் சேர்ந்த மகேஸ்வரன் ஆகியோர் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்டதையடுத்து மானிப்பாய் பொலிஸார் சாதுரியமாக எடுத்த நடவடிக்கையின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையினர் ஏழு பேருக்கு அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள்

கொழும்பு,ஏப்.24

மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் இம்முறை சிறுபான்மை இனப் பிரதிநிதிகள் ஏழு பேர் மாத்திரம் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் நான்கு முஸ்லிம்களும், மூன்று தமிழர்களும் அடங்குகின்றனர்.

ஏ.எச்.எம்.பௌஸி, ஏ.எல்.எம்.அதாவுல்லா, ரிஷாத் பதியுதீன் ஆகியோர் முழு அமைச்சர்களாகவும், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டக்ளஸ் தேவானந்தா முழு அமைச்சராகவும், முத்து சிவலிங்கம் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகியோர் பிரதி அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு இம்முறை ஒரு பிரதி அமைச்சர் பதவி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. அக்கட்சியின் செயலாளர் நாயகம் ஆறுமுகன் தொண்டமான் நேற்று அமைச்சுப் பதவி எதனையும் ஏற்கவில்லை. (அ-சி)

## புலி உறுப்பினர்களை மலேஷியா இலங்கைக்கு நாடு கடத்தியது

### இப்போது ஒப்புக்கொள்கிறது அந்த நாடு

கொழும்பு,ஏப்.24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கடந்த ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் மலேஷியாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனரென அந்நாட்டு அரசு பகிரங்கமாக நேற்று அறிவித்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் அந்த இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரையும் தாங்கள் கைது செய்து நாடு கடத்தி உள்ளார்களென மலேஷிய உள்துறை அமைச்சர் ஹிஸாமுடீன் குஷெய்ன் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கும் மார்ச் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏராளமான புலிகளைத் தாங்கள் கைதுசெய்து நாடு கடத்தினர் எனவும், மலேஷிய அரசின் இந்நடவடிக்கையை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பெரிதும் பாராட்டினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## நளினிக்கு கைத்தொலைபேசி வாங்கிக் கொடுத்த ரவி கைது!

சென்னை,ஏப்.24

ராஜீவ் கொலைக் கைதி நளினிக்கு, கைத்தொலைபேசி வாங்கிக் கொடுத்த ரவி என்பவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் நேற்று நண்பகல் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதி காலை 6 மணியளவில் வேலூர் மகளிர் சிறையில் அதிகாரிகள் வழக்கமான சோதனை செய்தபோது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினியின் அறைக்கும் சென்றிருக்கிறார்கள்.

அதிகாரிகளைப் பார்த்ததும் நளினி வைத்திருந்த ஒரு துணிப்பையை எடுத்து வெளியே வீச முயன்றிருக்கிறார். அதைப் பொலிஸார் கைப்பற்றி பார்த்ததில் அதற்குள் ஒரு கைத்தொலைபேசி இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

2009ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி இந்தக் கைத்தொலைபேசி இயங்க ஆரம்பித்திருக்கிறது.

வேலூர் காட்பாடியை அடுத்த கனக சமுத்திரம் ஊரைச்சேர்ந்த ரவி என்கிற மேஸ்திரி பெயரில்தான் இந்த கைத்தொலைபேசி வாங்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

நளினி கைத்தொலைபேசி மூலம் இலங்கை, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு பேசியமை தெரிய வந்திருக்கிறது என சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

இதையடுத்து நளினிக்கு கைத்தொலைபேசி வாங்கிக் கொடுத்த ரவியைக் கைது செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இவர் நேற்று மதியம் கைது செய்யப்பட்டார். பொலிஸார் இவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(அ-சி)

## ஜீ.எஸ்.பி. சலுகையைப் பெற்றுக் கொள்வது இலங்கையின் கைகளிலேயே தங்கியுள்ளது

### ஐரோப்பிய ஒன்றியம் சொல்கிறது

கண்டி,ஏப். 24

ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைத் திட்டத்தை மீண்டும் நீடிப்பது இலங்கையின் கைகளிலேயே தங்கியிருகிறது என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை அரசு கையொப்பமிட்டுள்ள மனித உரிமைப் பிரகடனங்கள் அனைத்தையும் அமுல்படுத்தும் பட்சத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்கத் தாயார் என ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான பிரதிநிதி போர்னாட் சாவேஜ் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களை சந்தித்து உரையாற்றியபோது, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பேர்னாட் சாவேஜ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக வடக்கில் பாதிப்புக்களை எதிர்நோக்கி வரும் மக்களுக்கான உதவிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் முக்கிய மனித உரிமைப் பிரகடனங்களை இலங்கை அரசு பூர்த்தி செய்யத் தவறியதாலேயே வரிச்சலுகை நிறுத்தப்பட்டது. (அ-சி-120)

## இலங்கை அகதிகளை ஏமாற்றிவிட்டது இந்தோனேஷியா; இப்போது அவர்கள் அங்குள்ள சிறைச்சாலைகளில்!

கொழும்பு,ஏப். 24

இந்தோனேஷிய அதிகாரிகள் இலங்கை அகதிகளை ஏமாற்றியுள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்படுகிறது.

கடந்த ஆறு மாத காலமாக 'ஓசியானிக் விக்கிங்' கப்பலில் அடைக்கலம் புகுந்திருந்த அகதிகளை இந்தோனேஷிய அரசு ஏமாற்றியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைகளில் அடைக்கப் போவதில்லை என வாக்குறுதி அளித்து குறித்த கப்பலிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட அகதிகள் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷிய அதிகாரிகள் தம்மை சித்திரவதை செய்கின்றனர் என அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போதியளவு தண்ணீர் கூட வழங்கப்படுவதில்லை என அகதிகள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

## திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற அதிபர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)



எமது பாடசாலை ஆசிரியரான நவலோகநாதனின் அன்பு மாமியாராகிய திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், கல்விசார ஊழியர், மாணவர்கள்.
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி. (97412)

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் சதாசிவம்



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சதாசிவம் 19.04.2010 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்- வள்ளிநாச்சி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற ஆபிரகாம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவரான சத்தியநிர்மலன் மற்றும் சத்தியசுதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வவியின் பாசமிகு மாமனாரும், சபிதா, சரீனா, சுஜான் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், மங்களம், பீதாம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, செல்வச்சந்திரன், ஜெகநாதன், ஜீவாநந்தன், தேவிகாராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2010) பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிறிஸ்ரினா, நெல்லியடி வடக்கு,
கரவெட்டி. (96539)

தகவல்
மனைவி, மகன்.

## புளோரன்ஸ் அமிர்தமலர் கஸ்பேசன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புளோரன்ஸ் அமிர்தமலர் கஸ்பேசன் நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி S.R.கஸ்பேசன் அவர்களின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தாவீது கிருபைரட்ணம் கஸ்பேசன், எமிலி அற்புதமலர் கஸ்பேசன் மற்றும் கிறவுதர் திரவியரத்தினம் கஸ்பேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயசூரியன் (கனடா), ஜெயச்சந் திரன் (கொழும்பு), தேவபாலன் (கனடா), வி.நோயல்விஜயரூபன் (USA), வி.டானியல் ஜெயரூபன் (ஆசிரிய மாணவன், பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி), றூத்ஜெயரூபி, ஏபிரகாம் தேவபாலன், ஏஞ்சலின் தேவமலர், யஸ்ரின் ஜெபதர்சன் (பிரான்ஸ்), டானியல் தயானந் (மன்னார்), சாம் (பிரான்ஸ்), யூலி, யூலியன் (ஜேர்மனி) ஆகி யோரின் பாசமிகு மாமியாரும், V.G.கனகசிங்கம், வண.V.N. தர்மகுலசிங்கம் (மன்னார்), யோவேல் இராஜசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான எலிசபேத் ஜெயராணி, விஜயதாசன், ஜோய்ஸ், அதிசயராணி தவராஜா, V.G.பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2010) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை சேமக் காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னவாசா",
யாழ்.வீதி, உடுப்பிட்டி.
தொ.பே. 0213734270, 0777865512. (97423)

தகவல்:
C.T.கஸ்பேசன் -
சகோதரன்.

## திருமதி செல்லையா கௌரீஸ்வரி

(புதுறோட், காரைநகர்)



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், சிவன்கோயிலடி, சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா கௌரீஸ்வரி நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், செல்லையாவின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரி (பிரான்ஸ்), திருக்குமரன் (ஆசிரியர், யா/வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாலி, சிவனுஜன், ரவீந்திரன் ஆகியோரின் மாமியாரும், பாலாம்பிகை, சிவபாதம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்கவி (யாழ்ப்பாணக்கல்லூரி), புரட்சிகன், இராகவி, டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யோகேஸ்வரி (ஆசிரியர், வ/கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம், வவுனியா), யோகராஜா, யோகமலர், மதிவண்ணன், சிவகுமாரன்-ஜெயந்தி, சிவராணி, குகதாசன், சித்திரகலா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், பரராஜசிங்கம், நல்லலிங்கம், மரகதவல்லி, தம்பு, கந்தசாமி, பத்தினிப்பிள்ளை, மாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலடி,
சித்தன்கேணி. தொ.பே.0217912075. (97422)

தகவல்:
சி.திருக்குமார்
(மகன்).

## தேர்தல் குறித்து பகிரங்கக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். ஆய்வறிவாளர் அணியம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் ''நாடாளுமன்றத் தேர்தல் 2010 ''ஒரு மீள்பார்வை'' என்ற தலைப்பில் பகிரங்கக் கலந்துரையாடல் இன்று மாலை 4.30 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளரும் சமூக ஆய்வாளருமான செல்வி திருச்சந்திரன் அதிதி ஆய்வாளராகக் கலந்துகொள்வார். (ஒ-1)

## தீயணைப்புச் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனத்தில் அவசரத் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மறு அறிவித்தல் வரை அதனது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (ஒ-1)

## பௌர்ணமி தின ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் பௌர்ணமி தினமான புதன்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று, காலை 8.45 மணிக்குப் போயா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தொடர்ந்து ஓங்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, மதிய போசனம் என்பவற்றுடன் மதியம் 12.30 மணிக்கு நிகழ்வுகள் நிறைவுபெறும். (ஒ)

## நாளை சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ். மிட்ரவுண் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் ''அஞ்சானி 10'' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை முற்பகல் 10 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் றோட்டறிக் கழகத்தின் தலைவர் திருமதி என். தர்மகுலசிங்கம் பிரதம விருந்தினராகவும் மக்கள் வங்கி பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் ஏ. சத்தியமூர்த்தி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி எம். இராஜரத்தினம் சஞ்சிகை விமர்சனம் செய்வார். (ஒ-1)


### உடன் விற்பனைக்கு

JF xxxx தொடர் இலக்கத்தை உடைய Bajaj Boxer அலுமினியக் கலர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 0772247481

### விற்பனைக்கு

புடைவைக் கடைக்கு அல்லது பலசரக்கு, Fancy கடைக்குரிய மரத்திலான அலுமாரிகள் விற்பனைக்குண்டு. நேரிலும் வந்து பார்வையிடலாம். தொடர்பு: 222 2063
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


## சமூக சேவகியின் நினைவு நிகழ்வு

வட்டு - மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தின் ஏற்பாட்டில் சமூக சேவகி வேதவல்லி கந்தையாவின் 22ஆவது நினைவுதின நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீகணேசா வாசி கசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டு மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தின் மகளிர் குழுத் தலைவி திருமதி செல்வலட் சுமி மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர் ''மாறி வரும் சூழலில் சமூகப் பிரச்சினைகள்'' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். மற்றும் பலர் ஞாபகர்த்த உரைகளை நிகழ்த்தவுள்ளனர். மற்றும் பலர் ஞாபகார்த்த உரைகளை நிகழ்த்துவர்.

## 'அனிமேஷன்' கற்கை நெறிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக இந்தியாவின் 'ஸ்லாற்' அக்கடமியினரால் 'அனிமேஷன்' கற்கைநெறி ஆரம்பிக்கப் படுவதை ஒட்டி விசேட கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள 'அனிமேஷன்' துறையின் வல்லுநர்கள் கருத்துரை வழங்குவர். யாழ்ப்பாணத்தில் இக் கற்கைநெறியை மக்நெற் அக்கடமி 'ஸ்லாற்' நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இரத்தினம் மணிவண்ணன்

பிறப்பு
02.11.1976

இறப்பு
05.05.2009

வருடம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும்
அப்பா உங்களுக்கு ஈடாகுமா?
ஆலமரம் சாய்ந்து போனதே - ஆனாலும்
விழுதுகளின் விழிகளில்
ஈரம் இன்னும் காயவில்லை.

காரைக்கால் றோட்,
இணுவில் கிழக்கு. (97412)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## Niru Business College

*Kandy Road, Nunavil Center.*
*Chavakachcheri.*

சாவகச்சேரியில்
ஓர் புதிய உதயம்

A/L வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்புக்களும் மற்றும் மாணவர்கள், வேலை செய்பவர்கள், இல்லத்தரசிகள் ஆகியோருக்கான ஆங்கில வகுப்புக்களும் மற்றும் Spoken Sinhala, AAT, IAB, Banking Course போன்ற வகுப்புக்களும் யாழ்., கொழும்பு ஆசிரியர்களால் இணைந்து நடத்தப்படும். (24.04.2010) காலை 9 இருந்து மாலை 5 வரை அனுமதி வழங்கப்படும்.

மேலும் வெளிநாடுகளில்
மேற்படிப்பைத் தொடர
விரும்புபவர்களுக்கான
விசா ஒழுங்குகளும்
செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
451, கண்டி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி
தொ.பே: 0217200213, 0773570511

## யாழ் நகரில்

### British College of Higher Studies

ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

### இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**
**சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்**

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உரிய செயற்றிட்டத்தை வகுத்து கூட்டமைப்பு செயற்பட வேண்டும்

தெரிந்தோ, தெரியாமலோ - சரியோ,பிழையோ - தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் கடந்த தேர்தல் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

தாயகத் தமிழ் மக்கள் உள்ளதற்குள் வள்ளிசானதாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகளவில் வாக்களித்து - அதனைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்பது சரிதான். ஆனால் பதிலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தரப்புத்தானே என்பதை உறுதிப்படுத்தும் பிரதிபலிப்பை - சமிஞ்ஞையை - இன்னும் காத்திரமாக வெளிப்படுத்தத் தொடங்கவில்லை.

தமிழ்க் கூட்டமைப்பு என்பது பல்வேறு தனித்தனித் தமிழ்க் கட்சிகளின் கதம்பம் என்பது வாஸ்தவம்தான். ஆனாலும் ஒட்டுமொத்தமாக ஒரு கூட்டமைப்பாக - கட்டுக்கோப்பான கட்டமைப்பாக - அது செயற்பட்டாக வேண்டும். சொல்லிலும், செயலிலும், கருத்திலும் கூட அந்த ஐக்கியம் வெளிப்படுத்தப்பட - வெளிப்பட - வேண்டும். அது வரலாற்றுப் பொறுப்பாகும்.

ஆனால் அதுவே கேள்விக்குறியாக நீடிப்பதுதான் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்று துக்ககரமான நிலையாகும்.

கூட்டமைப்பின் தலைமையில் வலிமையாக சம்பந்தர் இருந்தாலும், ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று இன்று கருதப்படும் அதன் எஞ்சிய பதின்மூன்று எம்.பிக்களும் கொள்கை ரீதியாகவும், கருத்தியல் போக்கிலும், சிந்தனை எண்ணவோட்டத்திலும் அவருடன் ஒத்திசைவாக இருக்கின்றார்களா என்றால் அது இல்லை என்றுதான் பலருக்கும் தோன்றுகின்றது ; தோற்றுகின்றது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தை - இடியப்பச் சிக்கலான அந்த விடயத்தை - எப்படி முன்கொண்டு செல்வது என்பதில் கூட்டமைப்புக்குள் ஒத்திசைவும் இல்லை; ஒருங்கிணைவும் இல்லை. இன்னும் விவரமாகக் கூறுவதானால் இது விடயத்தில் தெளிவான சிந்தனைப் போக்கோ, வலிதான செயற்றிட்டமோ, கூர்மையான பார்வையோ, தீர்க்கதரிசனம் மிக்க உத்தியோ கூட்டமைப்பிடம் இருப்பதாகவோ அல்லது அதனை வகுப்பதற்கான உத்தேசம் காணப்படுவதாகவோ கூடத் தெரியவில்லை.

ஒரு சாரார் அரசுடன் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் - ஒத்துப்போக வேண்டும் என்கின்றனர். அவர்கள் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே டக்ளஸ் தேவானந்தாவையும், ரிஷாட் பதியுதீனையும் முன்னுதாரணங்களாகக் காட்டுகின்றார்கள்.

இந்திய ஊடுருவல் நபர்களாக இருப்பார்களோ என்று பலராலும் சந்தேகிக்கப்பட்டவர்களோ திடீரென நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஏகவசனத்தில் இந்தியாவைத் திட்டித் தீர்த்து, தங்களைச் சுத்தமானவர்களாகக் காட்ட முயற்சிக்கின்றார்கள். இந்தியாவை நம்பாதீர்கள் என்று கூட்டமைப்பு எம்.பிக்களும் ஆலோசனையும் கூறுகின்றார்கள்.

போதாக்குறைக்கு புதிய நாடாளுமன்றின் கன்னி அமர்வின் போது புதிய சபாநாயகரை வரவேற்று, பாராட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் உரையாற்றிய அதன் தலைவர் இரா.சம்பந்தன், யுத்தத்தை அரசு வெற்றிகரமாக முடித்தமைக்குத் தமது பாராட்டை அந்த உரையில் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டு கூட்டமைப்பின் மற்றொரு எம்.பிக்கள் குழு சினந்துகொண்டிருக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை ஒட்டி கொள்கைகள், கோட்பாடுகள், கருத்து நிலைகள் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழர்கள் பக்கத்தில் பல பிரதான தரப்புகள் பிய்த்து உதறியமையையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி கிளப்பிய சந்தேகங்களை அடுத்தே இந்த விடயம் அதிகமாக - ஆழமாக - அலசப்பட்டது.

ஆனால் இப்போது தேர்தல் முடிந்ததும் கொள்கை நிலைப்பாடு பற்றிய சிந்தனைத் தெளிவும் அடங்கிவிட்டதோ என்று சந்தேகப்படும் சூழல் உருவாகியுள்ளது.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை முன்னெடுப்பது தொடர்பில், அரசுத் தரப்பின் நடவடிக்கைகளைப் பார்த்து அதற்கேற்ப தனது உத்திகளையும், திட்டங்களையும், தந்திரோபாயங்களையும் வகுக்கலாம் எனத் தமிழ்க் கூட்டமைப்பு காத்திருப்பதில் அர்த்தமில்லை.

தனக்கென்று ஒரு தெளிவான திட்டத்தை - நிகழ்ச்சி நிரலை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரைந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னோடியாகத் தனது கொள்கைத் திட்டத்தை - கோட்பாட்டு வரையறைகளை - கூட்டமைப்பு வகுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கோட்பாட்டுத் திட்டத்துக்குள் நின்று செயற்படுபவர்களாகக் கூட்டமைப்பினர் தங்களைத் தெளிவுபடுத்தி நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் இங்கு நடந்தவையாகவோ, நடப்பவையாகவோ தெரியவில்லை. இப்படி அசமந்தமாக இருப்பது ஆரோக்கியமானதல்ல. மிக நெருக்கடியான காலகட்டத்தில் - ஆளும் தரப்பு கட்டுமட்டில்லா வலிமை பெற்றுள்ள இந்தத் தருணத்தில் - வரலாற்றுத் திருப்புமுனைக் கட்டத்தில் - தமிழ் மக்களின் தலைமை என்று உரிமை கோரிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்படிப் பொறுப்பின்றிச் செயற்படுகின்றமை விபரீதங்களுக்கு வித்தாகிவிடும்.

## குடாநாட்டில் புற்றுநோயின் தாக்கம் அதிகரிப்பு; மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கண்காட்சி

### செவ்வாயன்று யாழ்.இந்துவில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப்.24

குடாநாட்டில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்த நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கண்காட்சி ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று காலை 9மணி முதல் மாலை 4மணிவரை கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இக்கண்காட்சி இடம்பெறும்.

யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி தொடர்பாக தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் புற்றுநோயின் தாக்கத்தினாலும், மக்களுக்கு இந்த நோய் பற்றிய தெளிவான அறிவின்மையாலும் யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவிற்கு அனுமதிக்கப்படும் உள்ளக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

ஆரம்பத்திலேயே வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதின் மூலம் நோயின் தாக்கம் மேலும் பரவாமல் நோயினைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்த நோய் ஏற்படும் காரணங்கள், சூழலியல் காரணிகளை மக்களுக்கு தெளிவாக தெரியப்படுத்தும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அனைத்து மக்களும் மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றீர்கள் - என்றுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு டாக்டர் என்.ஜெயக்குமாரன் 0212222261 இணைப்பு 126;0212228001 அல்லது டாக்டர் ரி.சுசிதரன் 0773506526

(1)

## கணனித்துறையினருக்குத் தேசிய சான்றிதழ்; விரைவில் பரீட்சை நடத்தப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 24

கணனி சாரதி அனுமதிப்பத்திரம் (Computer Driving Licence), கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (Computer Hardwere Technician) ஆகிய துறைகளில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களைத் தத்தமது பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலர்களிடம் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் குறித்த தொழிலில் ஒரு வருடத்திற்கு அதிக அனுபவம் உள்ளதைக் கிராம அலுவலர் அல்லது தொழில்புரியும் நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்தும் சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/- ஐ பிரதேச செயலகத்தில் மக்கள் வங்கியின் நுகேகொட கிளை கணக்கு இல. 0174-1010089204 இற்கு வைப்பிடும் வகையில் பற்றுச்சீட்டு பெறுமாறும் யாழ்.அரச அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார்.(1-207)

## சேமலாப நிதிப்பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம்,ஏப். 24

மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் நடமாடும் சேவைகள் அடுத்த மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இச்சேவைகளில் முதலாம் நாள் அமர்வில் ஊழியர் சேமலாப நிதிப்பிரச்சினை தொடர்பாகவும் அதனை எப்படித் தீர்த்தல் என்பது பற்றியும் ஆராய்வதுடன் ஊழியர் சேமலாப நிதியில் இலத்திரனியல் உபகரணப் பிரயோகம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் அமர்வின்போது ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் முன்வைக்கப்படவுள்ளன.

எனவே இச்செயலமர்வுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் கணனி அறிவுடைய ஒருவருடன் கலந்து கொள்ளுமாறு யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரன் கேட்டுள்ளார்.

அத்துடன் இதுவரை ஊழியர்சேமலாப நிதிக்கு விண்ணப்பித்துக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்களும் இச்செயலமர்வில் கலந்துகொண்டு பயனடையுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-16)

## கைதடி புனர்வாழ்வு நிலையத்திலிருந்து யுவதி உட்பட மூவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

கைதடி பனை ஆராய்ச்சி நிலைய புனர்வாழ்வு முகாமில் தங்கியிருந்த யுவதி உட்பட மூன்று பேர் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மூன்று பேரும் நீதிவானின் உத்திரவின் பேரின் இவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இந்த மூவரில் ஜெயலோகநாதன் ஜெரோஜன், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அவர்களின் பெற்றோரிடமும் கைதடி இரட்சணிய சேனையில் வைக்கப்பட்டிருந்த சண்முகநாதன் தர்சினி குமாரி நேற்றும் அவரது பெற்றோரிடமும் நீதிமன்றால் கையளிக்கப்பட்டனர்.

கடந்த வருடம் வன்னிப் பகுதியில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் படையினரிடம் சரணடைந்ததாக கூறப்படும் இந்த மூவரும் கைதடி நலன்புரி புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## பணநிரம்பல் வீழ்ச்சி அடைவதால் உள்நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடையும்

### மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு,ஏப்.24

பண நிரம்பல் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருவதால் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சி இவ்வாண்டில் உத்வேகமடையும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் 2010 மார்ச்சில் 6.3 சதவீதத்திற்கு மிதமானளவிற்கு அதிகரித்தது. பல்வேறு முக்கிய உணவுப் பொருள் விலைகளிலான வீழ்ச்சி ஆண்டுக்கு பணவீக்கத்திலான வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. நிரம்பல் நிலைப்பாடுகளிலான தொடர்ச்சியான மேம்பாடு பணவீக்க அழுத்தங்களினை மாற்றமடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாணயக் கூட்டுக்களிலான விரிவாக்கம் மெதுவடையத் தொடங்கியுள்ளது. 2009 இல் இறுதியளவில் உயர்வடைந்த விரிந்த பணநிரம்பலிலான வளர்ச்சி 2010 பெப்ரவரியில் 17.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார் துறைக்காக கொடுகடனின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2009 ஒக்ரோபரில் மேல் நோக்கி நகர்ந்து அதன் பின்னர் உண்மை நியதிகளில் வளர்ச்சியடைந்து வருகின்றமை பொருளாதார செயற்பாட்டின் படிப்படியான மீட்சியினைப் பிரதிபலிக்கின்றது. இது உலகப் பொருளாதாரத்தின் மீட்சி, தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலை மற்றும் அதிகரித்த முதலீட்டாளரது நம்பிக்கை போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது. இத்தகைய சாதகமான நிலைப்பாடுகளினால் ஆதரவளிக்கப்பட்டு உள்நாட்டு பொருளாதாரத்தின் வளர்ச்சி இவ்வாண்டில் உத்வேகமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2009 இறுதிக் காலாண்டிலிருந்து ஒதுக்குப்பணம் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்து வருகின்றது. இந்த விரிவாக்கம் முக்கியமாக 2010 இன் தொடக்கப்பகுதியில் நடத்தப்பட்ட இரு தேர்தல்கள் காரணமாக சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அதிகரிப்புடன் சேர்ந்து நாணயத்திற்கான பருவகாலக் கேள்வியால் ஏற்பட்டதாகும். மிதமிஞ்சிய திரவத்தன்மை தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுவதால் வங்கி பணச் சந்தையிலான அபிவிருத்திகளையும் கண்காணித்து வருகின்றது. எனினும் பண்டிகைக் காலத்தினைத் தொடர்ந்து ஒதுக்குப்பணம் சுருக்கமடையத் தொடங்கியுள்ளது. வங்கி நாணயக் கூட்டுக்களிலான நகர்வுகளை தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன் தேவையேற் படின் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

இத்தகைய அபிவிருத்திகளைக் கருத்தில் கொண்டு நாணயச் சபை 2010 ஏப்ரல் 21 இல் நடத்தப்பட்ட அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றிப் பேணுவதற்கு தீர்மானித்தது.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2010 மே 20 ஆம் நாளில் வெளியிடப்படும் - என்றுள்ளது.

(1-10)

### நாளை

| | | |
|---|---|---|
| சித்திரை | : 12 | 25.04.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : துவாதசி | |
| | | மு.இ. 11.49 வரை |
| நட்சத்திரம் | : பூரம் | |
| | | மு.ப.08.54 வரை |
| [illegible] | : 09.00-10.30 வரை | |
| ராகுகாலம் | : 04.30-6.00 வரை | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒளிமயமான எதிர்காலத்துக்கான நுழைவாயில்

சர்வதேசத் தரம்மிக்க சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்

**Diploma in Office Management**
- Intro. to IT & Windows OS
- Microsoft Word
- Microsoft Excel
- Microsoft Access
- Microsoft PowerPoint

Course Fee 2500/= only

**Diploma in Desktop Publishing**
- Adobe Photoshop
- Adobe Pagemaker
- Corel DRAW
- Corel PHOTOPAINT

Course Fee 3500/= only

**Certificate Courses**
- Hardware & PC Assembling
- Network & Routing
- Web Designing
- Internet & E-mail
- Accounting Package

Course Fee 1250/= only (per Module)



**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25,28.04.2010**

**காலை 10 மணி மற்றும் பி.ப 3.00 மணி**

மேலதிக விபரங்களுக்கு :

Approved Test Centre

**GATEWAY LANGUAGE AND ICT CENTRE JAFFNA**

347, Kasthuriyar Road, Jaffna

Phone : 021 567 5555, 021 222 7967
E-Mail : gatewayjfn@sltnet.lk



## T.V க்கள் விற்பனைக்கு

புதிய SONY WEGA 21"-24000/=, G21Q,-14000/= புதிய பனசோனிக் Flat 21"-17000/=, SONY 14"-10000/= ரேடியோக்கள், குளிர்சாதனப் பெட்டிகள்மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771393670.
இ.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி),
சீனிப்புளியடி ஆர்பாபா சாலை அருகில், K.K.S. வீதி, இணுவில். (97344)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33வயதுடைய இஞ்சினியர்மணமகனுக்கு பெற்றோர் வைத்திய or B.Sc பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறார்கள். தொடர்பு: 0770426232

## காணிவிற்பனைக்கு

நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு மிக சமீபமாக 1¾பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771737172 (97413)

## தங்குமிட வசதி உண்டு

சுற்றுலாப்பயணிகள் தங்குவதற்கான இடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0777427777, 0213001000 (சி/567158)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P-4 Computers, Monitor மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன்விற்பனைக்குண்டு. (விலை 14750/= மட்டுமே).
தொடர்பு: **SKY Computer System,**
162, Main street, Jaffna.
T.P: 0212221417 (சி/567148)


## மரண அறிவித்தல்

### திருமதி இர்ராஜதுரை சோதிமலர்



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜதுரை சோதிமலர் 22.04.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி-அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், இரஞ்சித், இரமணன், இராஜினி, இரகுனன், இராகுலன், ஈசன் ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் கோபாலசிங்கம் (ராசு), லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தீபன், கஜன், அனுசியா, பார்த்தி, சுதா, கௌரி ஆகியோரின் பெரியதாயாரும், நந்தினி, சாந்தினி, வனஜா, கோமதி, ஜெயரமணி, யோகன், பிரசன்னா, தர்சா, யாழினி, திருச்செல்வம், சரிதா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜன், அபி, அஸ்ணா, ஜினு, வினோத், வோஜி, கரோலின், சுவர்ணன், றாமிகா, அஸ்வின், றக்சிகா, தனியா, திவியா, சரணியா, திபோசன், ஷியா, அஸ்விதா, சௌமிகா, லேயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.04.2010 புதன்கிழமை 71, Rud des Rondesux 75020, Paris (Metro - Gambetta) என்னும் இடத்தில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டுப் பின்னர் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 555/20,
பருத்தித்துறை வீதி,
நல்லூர். (97411)

இரஞ்சித் :- 0620567972
இரமணன் :- 0609463662
இரகுனன் :- 0659031415
இராகுலன் :- 0609463774

தகவல்:
சகோதரர்கள்.
(ராசு, தங்கச்சி).


## Land Maark Resort WANTED

We are looking for experienced person to fill the post of **Administrative Officer.**
- * Must be fluent in English & Sinhala.
- * Retired person preferable.
- * Previous Experience would be an advantage.

Walk - in interview on 25th (Sunday) April 10.00am at.
**Land Maark Resort**
**No. 237, K.K.S Road, Kokuvil, Jaffna.** (97410)

## தேவை

வல்வெட்டித்துறையில் வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
கவர்ச்சியான சம்பளம் தரப்படும்.
தொடர்பு கொள்க: தொ.பே. 0771996912 (சி/567143)


### மணல் ஏற்றிவந்த சாரதிக்கு 25ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.24

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த 3வாகனங் களின் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 25ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு தனித்தனியாக எடுக்கப்பட்ட போது சாரதிகளுக்கு தலா 25ஆயிரம் ரூபா விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரணசிறைத் தண்டனை அனுபவிக்குமாறும்.

மணல் ஏற்றி வந்த வாகனங்களை தலா 5லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இது தொடர்பான விளக்கங்கள் ஜூன் முதலாம் திகதி நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது.(1-209)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி சிவசுப்பிரமணியம்



[அச்சுவேலி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும், கோத்தணி அதிபரும், வலிகாமம் கிழக்கு மத்தியஸ்தர்சபை உறுப்பினரும், அச்சுவேலி தோப்பு மீனாட்சி அம்மன் ஆலயப் பரிபாலன சபைத் தலைவருமாவார்]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி சிவசுப்பிரமணியம் 20.04.2010 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி-இராசமணியம்மா தம்பதியினரின் மூத்தபுதல்வரும் யோகநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-நல்லமுத்து தம்பதியரின் மருமகனும் சிவஞானசுந்தரம் (கனடா), சிவபாலசுந்தரம் (அவுஸ்திரேலியா), சிவாஈஸ்வரி, அமரர் சிவஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் முகுந்தன் (நோர்வே), நிருபன் (கனடா), பிரதீபா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வமணி, ஜெகதாம்பிகை, நவரத்தினம், இராசகுல வீரசிங்கம், திருச்செல்வம், விஜயலக்சுமி, காலஞ்சென்றவர் களாகிய தர்மலிங்கம், ஐயாத்துரை, நாகரத்தினம், இராசம்மா, நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சுபாசினி, செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவேதா, கவிஷான் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10மணியளவில் அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு முன்பாக,
அச்சுவேலி தெற்கு. (97416)

தகவல்:
வே.நவரத்தினம்
(மைத்துனர்).

### திருமதி மங்கையர்க்கரசி இராசதுரை



தொக்குவில், சொர்ணவடலியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி இராசதுரை நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கமலம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், அமரர் இராசதுரையின் அன்பு மனைவியும், தங்கத்துரை (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி), அமரர் பவளத்துரை (தொழில்நுட்பவியலாளர், கட்டடத் திணைக்களம், மட்டக்களப்பு), பவளராணி (மலேசியா), தங்கராணி (சங்கானை), இராசராணி (பிரான்ஸ்), தேவராணி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), அருமைத்துரை, கைலாசதுரை (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாதேவா (மலேசியா), சுந்தரமூர்த்தி (சங்கானை), தங்கவேலு (பிரான்ஸ்), பேரின்பராசா, இந்திராதேவி, அமரர் ஜெயலக்ஷ்மி (மட்டக்களப்பு), நந்தினி, சாந்தினி (கனடா) ஆகியோரின் மாமியும், கண்ணன், ஹரிகரன் (மலேசியா), விவேகானந்தி (திருநெல்வேலி), அமுதா, முரளிதரன், ஈசன் (பிரான்ஸ்), மதிகரன், துவாகரன், அபிராமி (மட்டக்களப்பு), டினேஸ் (கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்), ஆர்த்தி, ஆரணி, ஆருயன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2010) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். தொ.பே. 0217901141. (97417)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அமிர்தலிங்கம்

(ஓய்வு பெற்ற விமானப்படை உத்தியோகத்தர், கட்டுநாயக்கா, கொழும்பு)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 125/2, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் துரை அமிர்தலிங்கம் நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், தவயோகராஜா, ஆனந்தராஜா, இரட்ணராஜா, செந்தில்ராஜா, சிவானந்தராஜா, சாந்தி, நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரவீந்திரன், செல்வமுருகன், பவானந்தி, வினரஜா, சுபத்திரா, சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் கமலாதேவி, பற்குணசிங்கம், பரமேஸ்வரி, கனகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், அன்னலட்சுமி, தனலட்சுமி, தனேஸ்வரி, பரமேஸ்வரி, ஜெயரட்ணம் (பாப்பையா), குணசேகரம், பேரின்பநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

125/2, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (97149)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி.கிழக்குப் பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் சுகவாழ்வு நிலைய இயக்குநர் வண.பிதா அருட்தந்தை எம்.எஸ்.பெரேரா மங்கள விளக்கேற்றுவதையும், தலைமை உரையை மேற்படி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ச.பிரேமினி நிகழ்த்துவதையும் முதலிரு படங்களிலும்-
பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய்ப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் உரைநிகழ்த்துவதை அடுத்த இரண்டு படங்களிலும் நிகழ்வில், கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரை இறுதிப் படதிலும் காணலாம்.
(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)

## விழிப்புலனற்றோர் தொழிற் பூங்காவில் மா அரைக்கும் ஆலை

யாழ்ப்பாணம், ஏப்.24

கைதடியில் உள்ள விழிப்புலனற்றோர் தொழிற் பூங்காவில் மா அரைக்கும் ஆலையொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

'சோ ஆ' நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மா ஆலையில், தொழிற்பூங்காவில் தங்கியிருக்கும் 20 வரையிலான விழிப்புலனற்றோரின் உதவியுடன் அரிசிமா பொதிசெய்யப்பட்டு சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-224)


## சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி மக்கள் வங்கிக் கிளைகளில் மின் கட்டணம் செலுத்தலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மின்பாவனையாளர்கள் தமது மின்பட்டியலுக்கான கட்டணங்களை சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளினூடாக(ஒன் லைன் மூலம்) செலுத்தக் கூடிய வசதிகள் மேற்கொண்டிருப்பதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பிரதேச மக்களின் வசதிகருதி மக்கள் வங்கியும் இலங்கை மின்சாரசபையும் இணைந்து இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும், இதனால் தூரப்பிரதேச மக்கள் யாழ்.நகருக்கு வந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படாது எனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இச்சேவை உத்தியோகபூர்வமாக இந்த மூன்று கிளைகளிலும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (50-16)




## கோப்பாய் பிரதேசத்திற்கு தொலைபேசி இணைப்புக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.24

'ரெலிக்கொம்' நிறுவனம் இன்னும் ஒரு மாத காலத்தில் கோப்பாய் பிரதேசத்திற்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போப்பாய்ச் சந்திக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பரிவர்த்தனை நிலையத்தினூடாகவே இந்த இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாக கோப்பாய்ச் சந்தியை அண்மித்த பகுதிகளுக்கு முதலில் 100 இணைப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-224)

## அறுவடை செய்யப்பட்ட நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை

### நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை

கோப்பாய்,ஏப்.24

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அண்மையில் அறுவடை செய்யப்பட்ட நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமையினால் தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது நெல்மூடையொன்று 2 ஆயிரம் ரூபா முதல் 2 ஆயிரத்து 500 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுவதாகவும், கடந்த காலங்களில் மூடை ஒன்று 4 ஆயிரத்து 500 ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

குறைந்தபட்சம் ஒரு மூடை நெல் 3 ஆயிரம் ரூபா வரை விலை போனால் தமக்கு நட்டம் ஏற்படாது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது குடாநாட்டில் உள்ள நெல் குற்றும் ஆலைகளுக்கு தென்னிலங்கை மற்றும் மன்னார், வவுனியா பிரதேசங்களிலிருந்து பெருமளவு நெல் எடுத்துவரப்படுவதால் உள்ளூர் உற்பத்தியாளர் பெருமளவு பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் இப்பிரதேச விவசாயிகளிடம் உள்ள நெல்லைக் கொள்வனவாளர்கள் குறைந்த விலைக்குக் கேட்பதாகவும் விலையைக் குறைக்காவிட்டால் நெல்லைக் கொள்வனவு செய்யாமல் வியாபாரிகள் விட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பல விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை உரிய சந்தை வாய்ப்பின்றித் தமது வீடுகளில் முடக்கி வைத்திருப்பதாகவும் கூறப்பட்டது. (50-72)

## மூன்று பாடசாலைகளின் ஆய்வுகூடங்களை அமைக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.மாவட்டத்தின் மூன்று பாடசாலைகளின் கட்டிமுடிக்கப்படாத ஆய்வு கூடங்களை மீளவும் கட்டும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இப்பணிகளை மேற்கொள்வதற்கு கல்வியமைச்சு நிதியை ஒதுக்கியுள்ளது. யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் விஞ்ஞான ஆய்வு கூடங்களின் கட்டுமானப் பணிகளே இவ்வாறு மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பணிகளை மேற்கொள்வதற்காக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

(50-6-224)

## 'செந்தாமரை' மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், ஏப்.24

'செந்தாமரை' பயணிகள் படகு திருத்தப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் இந்த பயணிகள் படகுச்சேவை தினமும் நடைபெற்று வருவதாகப் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பழுதடைந்திருந்த இந்தப் படகு திருத்த வேலைகள் முடிவுற்றதையடுத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## சுற்றுலாப் பயணிகளை மயக்கும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம்

யாழ்ப்பாணம், ஏப்.24

கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தைக் கொள்வனவு செய்வதில் இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது மாம்பழ, பலாப்பழ 'சீசன்' ஆரம்பமாகியுள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் இவற்றை நாட ஆரம்பித்துள்ளனர். அதிலும் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தின் தனி ருசி அவர்களைக் கவர்ந்துள்ளதால் என்ன விலை கொடுத்தும் அதனை வாங்குவதற்கு அவர்கள் முன்வருகின்றனர். இதனால் சந்தைகளில் இந்தவகை மாம்பழத்தின் விலை பழமொன்றுக்கு 50 ரூபாவரை உயர்ந்துள்ளது.

பனம் பொருள்கள், திராட்சைப் பழம் போன்றவற்றின் வரிசையில் தற்போது கறுத்தக் கொழும்பான் மாம்பழமும் இணைந்து யாழ்.வாசிகளுக்கு எட்டாக் கனியாகவே மாறியுள்ளதாக இங்குள்ள பலரும் தமது ஆதங்கத்தைத் வெளிப்படுத்தியுள்ளனர். (க-224)

## பழக்கடைகள் விரைவில் யாழ்-மணிக்கூட்டு வீதிக்கு

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். மத்திய நிலையத்துக்கு அருகில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் நடைபாதைக் கடைகளை பொருத்தமான வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாநகரசபை மேற்கொள்ளும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மாநகர சபை ஆணையாளர் மு.சரவணபவ.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தைச் சூழ அமைக்கப்பட்டிருக்கும் நடைபாதைக் கடைகள் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக இருப்பதனைப் பலரும் யாழ் மாநகரசபையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள நிலையில் ஆணையாளரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் அனைத்து நடைபாதைக் கடைகளும் அகற்றப்பட்டு, பொருத்தமான வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகவும், இதன் முதற்கட்டமாக பழக்கடைகள் மணிக்கூட்டு வீதிக்கு மாற்றப்படுமெனவும், ஏனைய கடைகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-16)

A/L , O/L
மாணவர்களே!
City & Guilds UK
Dec. 2010
FAST TRACK PROGRAMME 6 MONTHS
Be a British Qualified
Chartered Engineering / Quantity Surveyor
Dec. 2010 பரீட்சைக்கான வகுப்புகள் May 23 ம் திகதி கொழும்பிலும் யாழ் நகரிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
விரும்பும் மாணவர்கள் தங்கள் தகுதியுடன் விரும்பும் நகரத்தை தெரிவுசெய்து மே 10ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.
COURSES
• Telecommunication Systems
• Electrical and Electronics
• Civil Engineering
• Quantity Surveying
நுழைவுத்தகுதி
DIPLOMA
G.C.E. A/L (Maths/ Bio)
G.C.E. O/L கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் பாடங்களில் திறமைச்சித்தி
ADVANCED DIPLOMA
HNDE/ NDT/ IET/ NCT/ Open University/ Physical Science மாணவர்கள்
APSS INTERNATIONAL APPROVED CENTRE
No: 05, Harmers Avenue, Colombo 06. Tel: 011 2361587
Hotline: 077 2306642, 077 3867695
யாழ் நகரில் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு Course fee யில் 25% Discount வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பாதுகாப்புப் படையினரின் புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

சாவகச்சேரி பாதுகாப்புப் படையினர் வடமராட்சி, தென்மராட்சி பிரதேச மக்களுக்கான தமிழ், சிங்கள புத்தாண்டுதின விளையாட்டுப் போட்டிகளை நாளை மறு தினம் திங்கட்கிழமை முதல் எதிர் வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை வரை நடத்தவுள்ளனர்.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு ஆர்வலர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் சாவகச்சேரி டச் வீதியில் உள்ள நித்தி - சண் கொம் நிறுவனத்தில் பெயரினைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-207)

# பிரிவுபசார வைபவம்

காரைநகர், ஏப். 24

இலங்கைப் போக்குவரத்துச்சபை காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் க.நரேந்திரனுக்கான பிரிவுபசார வைபவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு காரைநகர் சாலையில் நடைபெற வுள்ளது.

காரைநகர் சாலையின் தற்போதைய முகாமையாளர் கே.சீ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் போக்குவரத்துச்சபை தலைமை அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் ஜே. எக்ஸ். சேவியர் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக வட பிராந்திய முகாமையாளர் எஸ். கணேசபிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளார்.

(50-250)

## வீடு வாடகைக்கு

கோயில் வீதி, நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலிற்கு அருகாமையில் 6 அறைகள், 2 வரவேற்பு மண்டபம் மற்றும் 2 இணைந்த குளியலறை, வாகனதரிப்பிட வசதிகளுடன் அலுவல பாவனைக்கு மட்டும் (NGO விரும்பத்தக்கது) வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு 077-6307106

## உதவியாளர் தேவை

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் (கோப்பாய் கந்தசுவாமி கோயில்) நிர்வாகத்துக்கு உதவியாளர் தேவை. மூன்று நேர பூசை வேளையின் போதும் சமுகமளிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித்தீர்க்கப்படும். 05.05.2010 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

சோ. விஸ்வலிங்கம்
'துர்க்கா துளபம்'
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது உறவினர்

**கணபதிப்பிள்ளை அருளம்பலம்**

அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது குடும்பத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ.பரராசசிங்கம் குடும்பம் (கனடா)





உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701360074 முதல் 701375301 வரை. சீட்டிழுப்பு இல. 641 திகதி 22-04-2010

வெற்றி எண்கள்

02 33 41 43 T

ஜக்பொட் பரிசு ரூ. 16,530,370/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,530,370/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 05 | 2,000/= | 10,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 323 | 1,000/= | 323,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 532 | 1,000/= | 532,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12947 | 60/= | 776,820/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6280 | 40/= | 251,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 152468 | 20/= | 3,049,360/= |
| | | மொத்தம் ரூ. | 5.342.380/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - M.B. ஹிரன்தி கோகிலா - அவிசாவளை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - A.H.T. டி அல்விஸ் - ஆண்டியம்பலம.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 701368421-2-00 |
| வவுனியா | 701360257-6-14 |
| கம்பஹா | 701365496-7-15 |
| குருணாகல் | 701371225-7-09 |
| கொழும்பு | 701361854-9-13 |
| மொணராகலை | 701366731-7-12 |
| மட்டக்களப்பு | 701368016-4-48 |
| யாழ்ப்பாணம் | 701371964-9-29 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 5,742,380/=


எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 16,943,680/=

தொடர் இல. 601418641 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 26 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7


## நினைவஞ்சலிகள்




**கனகரட்ணம் செல்வராஜா**

மலர்வு 04.06.1944 உதிர்வு 16.04.2008

**செல்வராஜா பேபி சரோஜா**

மலர்வு 03.07.1954 உதிர்வு 01.01.1997

ஆண்டுகள் சில கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமாய் இருந்த நீங்களும்
உங்கள் நினைவுகளும் எம்மை விட்டு அகலா.

மஞ்சத்தடி,
இணுவில்.

பிரிவால் துயருறும்:
கோகுலராஜ் (பெறாமகன்).

(97342)

## கட்டாயக்கல்வி விழிப்புணர்வு ஆவணப்பட வெளியீடும் - செயலமர்வும்

இடம் : யா/ இராமநாதன் கல்லூரி
காலம் : இன்று (24.04.2010) காலை 9 மணி
தலைவர் : திரு. ப.விக்னேஸ்வரன்
(கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

★முதற்பிரதி பெறும் விருந்தினர் : வைத்திய கலாநிதி லயன்.வை. தியாகராசா
★வெளியீட்டுரை: கலாநிதி த.கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்)


வழிகாட்டல்
ப.விக்னேஸ்வரன்


நெறிப்படுத்தல்
ச.சிவசக்திதேவி


படப்பிடிப்பு-ஒளிப்பதிவு
க.ரட்ணேஸ்வரன்




'விடியல்'
"Dawn"


எண்ணம்-எழுத்துரு
பா.தனபாலன்


நெறிப்படுத்தல்
க.இ.கமலநாதன்


இசை
அ.கேதீஸ்

ஆர்வலர்களைஅன்புடன் அழைக்கின்றோம்.

முறைசாராக்கல்விப் பிரிவு
வலிகாமம் கல்வி வலயம்.

விளம்பர அனுசரணை - லயன்ஸ் கழகம், கோப்பாய்.
ஆவணப்பட அனுசரணை - ஆசிரியவாண்மை விருத்தி நிறுவக ஒலி-ஒளி ஊடகப்பிரிவு


MAY 2 இல் சாவகச்சேரியில் புதிய BBS ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை ஆரம்பம்.
(சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகில்)

8TH Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years | Pre School 4-5 Years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

BBS இன்
பாலர் விளையாட்டுப்போட்டி
யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை
25.04.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
அனைவரும் வருக.....!

விசேட பாலர் நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா, ஒளிவிழா, பட்டமளிப்பு விழா, மாணவர் சித்திரம், கைவேலை, கண்காட்சி, Sports Meet.

Contact : 021 2225796, 0776646357.

BRITISH BUSINESS SCHOOL

| | |
|---|---|
| நல்லூர் | : NO: 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். |
| கோப்பாய் | : பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில்). |
| சாவகச்சேரி | : சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகாமையில், சாவகச்சேரி. |
| சுன்னாகம் | : Lakshmi Cottage ( Near the New Court), கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| மானிப்பாய் | :252, ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| புலோலி | :ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |

வேறு கிளைகளில் புதிய தவணைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்ளன.

விரைவில்...! நீர்வேலியிலும், உடுப்பிட்டியிலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்கள் தரும் பதிவுகள்



வல்வெட்டித்துறை மக்கள் வங்கியினால் உடுப்பிட்டி வடக்குக் கம்பர்மலை விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்திக் கடன் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். இதில் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் பயனாளி ஒருவருக்குக் கடன் பத்திரத்தைக் கையளிப்பதையும் அருகில் கிளை முகாமையாளர் எஸ்.கிருஷ்ணானந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் - மூர்த்தி)



நல்லூர் மங்கையற்க்கரசி வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களுக்கான கால் கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அபயாகரம் குமாரசாமி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (16)




ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பூ.பூபாலசிங்கம் வள்ளியில் அகால மரணமடைந்ததையிட்டு செலிங்கோ நெல்லியடிக் கிளையில் இழப்பீட்டுத் தொகை (ஜீபா சமுத்திரம்) ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை இறந்தவரின் பெற்றோரிடம் விற்பனை உதவி அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிரோஜன் வழங்குவதையும் நெல்லியடிக்கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன் மற்றும் விற்பனை நிறைவேற்று அதிகாரி ரி.இராஜகோபால், விற்பனை நிறைவேற்றுநர் ரி.சோபா நிற்பதையும் படத்தில் காணலாம். (253)



உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் வங்கி முகாமையாளர் செ.சோமசுந்தரம் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் - கண்ணன்)



2008 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் பசுமைப் புரட்சி சேவையை முழுமையாக மேற்கொண்டதற்காக சட்டத்தரணியும், மாவட்ட நீதிபதியுமான இரா.வசந்தசேனன் பசுமைப் புரட்சியாளர் வை.செகரராஜசிங்கத்தினை பாராட்டி பாராட்டு பத்திரம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: இரா.சுதா)



அராலி கிழக்கு செம்பாடு வைரவர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டில் 'ஆலய மகிமை' எனும் தலைப்பில் உரையாற்றிய வலி.மேற்கு பிரதேசசபை நிர்வாக அதிகாரி பாலபண்டிதர் க.பாலசுப்பிரமணியத்துக்கு நிர்வாக சபைத் தலைவர் நா.சிதம்பரப்பிள்ளை மலர் மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: இரா.சுதா)




யாழ்.எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள்விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

இதில் தீவக கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.தனிநாயகம் மங்கள விளக்கேற்றுவதைப்படத்தில் காணலாம். (16)



மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது விளையாட்டு மைதானத்துக்கான காணியை கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் காணி உறுதியை மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய ஸ்தாபகர் பரம்பரையைச் சேர்ந்த திரு. திருமதி கா.சிவஞானசுந்தரம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ... ளிப்பதையும் அருகில் சிவஞானசுந்தரத்தின் சகோதரர் கா... ...ரியம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளவாலை திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் மேடையேற்றப்பட்ட 'பலிக் களம்' ஆற்றுகையை நெறியாள்கை செய்த இளவாலை திருமறைக் கலாமன்ற இணைப் பாளர் ஏ.ஆர்.விஜயகுமாருக்கு இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி ஏ.பி. தேவசகாயம் அடிகளார் 'கலை அன்பன்' பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பணி யேசுதாசன் அடிகள் நிற்பதையும் முத லாவது படத்திலும் 'பலிக்களம்' ஆற்றுகையின் ஒரு காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மனிதநேயமிக்க அதிபராகத் திகழ்ந்தவர்



ஹாட்லிக் கல்லூரியின் மாணவனாகவும், வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் அதிபராகவும் இருந்த பெருமகன் அமரர் சின்னையா தேவராசா அவர்கள் இன்று எம்முடன் இல்லை இறையடி கலந்து விட்டார். அவரின் பிரிவு எமக்கெல்லாம் பேரிழப்பாகும். கிறிஸ்துவுக்கு தொண்டாற்றும் சிறந்த கிறிஸ் தவராக இருந்து கொண்டே மிக உன்னதமான இந்துக்களின் கல் லூரியான பருத்தித்துறை வேலா யுதம் மகா வித்தியாலயத்தின் சிறந்த அதிபராகச் சேவையாற்றி, பாடசாலைச் சமூகமும் சுற்ற மும் போற்ற வாழ்ந்து வெற்றி கண்ட பெருந்தகை ஆவார். அவ ரின் கல்விச் சேவை மிக உயர்ந்த சேவையாகும்.

எம்மை நல்வழிப்படுத்தும் ஆசிரியனாகவும், அதிபராகவும் ஒருபொக்கிஷமாக வாழ்ந்தவர் அமரர் சின்னையா தேவராசா. அவர் எப்பொழுதும் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ற மனிதநேயம் உள்ளவர்.

மாணவச் செல்வங்களது அறிவைக்கட்டி எழுப்பும் கைங்கரியத்தில் தோள் கொடுத்து அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பாடசாலையின் வளர்ச்சிக்காகச் செயற படும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் என்றும் அறிவுடைய மக்கள் சமூ கம் போற்றும்.

ஆசிரியன் தமது அறிவையும் திறமைகளையும் மனப்பாங்குகளையும் மாணவர் மத்தியிலே விதைத்து நல்ல அறுவடையைத் தருபவன். அவனே குரு ஆவான்.

**நீத்தார் நயப்புரை**

பருத்தித்துறை மலாயன் 'பெஞ்சனியர்' திரு சின்னையா திருமதி இராசம்மா சின்னையா தம்பதிகளின் மகனாக தேவராசா 24.06.1934 இல் பிறந்தார். இவருக்கு அன்பிற்குரிய தேவராணி, நல்லராணி ஆகிய இரு சகோதரிகள் இருக்கின்றார்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை மலேசியா விலும் இடை நிலைக்கல்வியை பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியில் சிறந்த கிறிஸ்தவ மாணவனாக - சமய ஒழுக்கங் களுடன் கல்வி கற்றார். பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தின் தொண்டு களிலும் இளவயதில் இருந்தே ஈடுபட்டார்.

அமரர் சி.தேவராசா அவர்கள் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் சிலகாலம் கல்வி கற்பித்து பின்பு 01.07.1979 முதல் உதவி ஆசிரியராக வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு வந்தார். அவர் உயர்தர வகுப்பில் சிறந்த 'தாவரவியல்' ஆசிரியராகச் சேவையாற்றினார். அமரர் சி.தேவராசா அவர்கள் இலங்கையில் புகழ் பூத்த அதிபர் K.P.பூரணம்பிள்ளையினால் வளர்க்கப்பட்ட மிகச் சிறந்த மாணவன் என்பதை தனது கடமைகளின் செயற்பாட்டின் மூலம் நிரூபித்துள்ளார்.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் உப அதிபராக 1988 இல் இருந்து 07.07.1991 வரை கடமையாற்றி 1991 இல் அதிபர் திரு சே.ஏகாம்பரநாதன் அவர்கள் வடமராட்சிக் கல்விக் கோட்டத்திற்கு கல்வி அதிகாரியாகச் சென்ற வேளை யில் சி.தேவராசா அவர்கள் வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பதவி ஏற்றார். பொறுமையைத் தனது அணிகலனாக எப்பொழுதும் கொண்டு கல்வி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனை வரையும் தனது அன்புப் பிடிக்குள் வைத்து தனது நிர்வாகத்தைச் சிறப்பாகக் கொண்டு நடத்தியவர். கல்லூரியின் எல்லா மாணவர்களையும் தனது சொந்தப் பிள்ளைகள் போல் அரவணைத்து வளர்த்து மேம்படுத்தினார் என்றால் மிகையாகாது. பாட சாலை வளர்ச்சியில் அதிக அக்கறையுடையவராக 1994 ஓய்வு பெறும் வரை செயற் பட்டார். எப்பொழுதும் மாணவர்களை மகிழ்விக்கக் கூடியவர். கல்லூரி விழாக்களில் பழைய இனிய பாடல்களை இனிய தனது 'மவுத்ஓகன்' (mouth organ) இசையினால் மகிழ்விப்பார்.

சி.தேவராசா அவர்கள் தனது வாழ்க்கைத் துணைவியாக திருமதி ஜெயபாக் கியம் தேவராசா அவர்களைப் பெற்றமையால் தனது சீரிய கடமைகளை ஆற்றக் கூடியதாக இருந்தது. திருமதி ஜெயபாக்கியம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் சிறந்த ஆசிரியையாகவும், உப அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். இவரும் மிகச் சிறந்த விளையாட்டு வீராங்கனையாவார்.

சிவா.கிருஷ்ணமூர்த்தி J.P.

ஓய்வுபெற்ற உப அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு - 4

# புத்தக சாலை

## குடமுழுக்கு விழாமலர்




வட்டுர் வீயோடை இலுப்பையடி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான ''குடமுழுக்கு விழா மலர்'' வெளி யிடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்கள் மற்றும் மகாகும் பாபிஷேகத்தின் நிகழ்வுப் படங்கள், ஸ்ரீமுத்துமாரி அம் மனின் திருவருளை வியந்து பாடும் பக்திப்பாமாலைகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந் துள்ளது.

## மாருதம்




வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடான '' மாருதம்'' எனும் சமூக, கல்வி, கலை இலக்கிய சஞ்சிகை வெளிவந்துள்ளது.

'ஆதரவற்று அலறிப்புடைத்து அகதிகளாயினோம். அநாதைகள் ஆகினோம். ஆயினும் தொடர்வோம். எம் வாழ்வு...'' என்கின்ற நம்பிக்கைத் தூறலுடன் ''மாருதம்'' சமூகம், கல்வி, கலை, இலக்கியம்சார் விடயதானங்களைப் பரப்பி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்



சிவத்திரு வ.குமாரசாமி ஐயர் பிரபல சமயச் சொற் பொழிவாளர்; ஆன்மீக எழுத்தாளர். மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் பல தொடர் சொற்பொழிவுகளை அவர் ஆற்றியுள்ளார். மகாபாரதச் சொற்பொழிவுகளில் நீண்ட அனுபவம் பெற்ற அவர் சந்நிதியான் ஆச்சிரம வெளியீடான 'ஞானச்சுடர்' சஞ்சிகையில் 'மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்' என்ற தலைப்பில் எழுதியவற்றில் 45 பகுதிகள் முதலாம் பாக மாக நூலாய் வெளியிடப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்ட இந்நூலில் எளிய தமிழில் யாவருக்கும் விளங்கும் வண்ணம் மகாபாரதக் கருத்துக்கள் கதைவழியாகச் சொல்லப்பட்டுள்ளன. மகாபாரதத்தை எழுதிய வியாசரின் சரிதத்தை ஆரம்பமாகக் கொண்டு பாண்டவர் களது வனவாச இறுதி நாள்கள் வரையான விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

எட்டு ஆண்டுகள் ஞானச் சுடரில் வெளிவந்த 100 கட்டுரைகள் கொண்ட இத் தொடரின் அடுத்த பாகமும் வெளிவந்துள்ளது. இந்நூல் நூலாசிரியரது ஆழமான சமய அறிவையும்,அழகிய மொழி நடையில் வெளிப்பாடடையவைக்கும் அவ ரது திறனையும் துலாம்பரப்படுத்துகிறது. இந்நூல் மகாபாரதம் கற்க விரும்பு வோருக்கு அருமையான பொக்கிஷமாகும்.

## உயிரியல் பகுதி (புதிய பாடத்திட்டம்)




புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக தரம் 10 இல் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்னும் பாடம் விஞ்ஞானம் என மாற் றப்பட்டு அதன் உள்ளடக்கம் தரம்10, 11 விஞ்ஞான பாடத் தில் உயிரியல், இரசாயவியல், பௌதிகவியல் எனும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது (modular curriculum ).

இந்நூல் ஆசிரியர் தரம் 10,11 விஞ்ஞான பாடத்தின் உயிரி யல் பகுதியை வினாவிடை முறையில் தொகுத்துள்ளார்.

இந்நூலினைப் பற்றி நோக்கும் போது தரம் 10,11 விஞ் ஞான பாட உயிரியல் விடயங்கள் ஓரளவு முழுமையாக உள் ளடக்கப்பட்டிருப்பதால் பரீட்சைக்கு ஆயத்தமான மாணவன் தான் கற்றவற்றை மீண்டும் நினைவு கூர (recall) பொருத்தமாகவும் சுருக்கமாகவும் இந் நூல் அமைந் துள்ளது. அதாவது இந்நூல் கற்றவற்றை ஞாபகப்படுத்தக்கூடிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

தற்போதைய கருத்திட்டம் செயற்பாடுகளை உள்ளடக்கிய தேர்ச்சி மையக் காலைத்திட்டமாகும். இதற்கமைவாக கடந்த இரு ஆண்டுகள் க.பொ.த (சா/த) பரீட்சை வினாத்தாள் அமைந்திருந்தது. மாணவர்களின் பாட அறிவுமட்டம் உயர் வாக இருந்த போதிலும் பரீட்சைப் பெறுபேறு வீழ்ச்சி அடைந்து செல்வதற் கு முக்கிய காரணம் வகுப்பறைகளில் முக்கிய செயற்பாடு ரீதியிலான கற்றல் கற்பித் தலை ஊக்குவிப்பதுடன் தற்போதைய பரீட்சை வினாத்தாள் மாதிரியைத் தழுவிய தாகவும் அமைந்திருந்தால் இந்நூலின் மாணவரின் நாட்டம் மேலும் அதிகரிக்கும்.

## ஆற்றுகை (நாடக அரங்கியலுக்கான இதழ்)




திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடான 'ஆற்றுகை' சஞ்சிகை வெளிவந்துள்ளது.

நாடகம் தொடர்பான ஆற்றுகைக் குறிப்புகளை கட்டு ரைகளாகவும் சிறு குறிப்புகளாகவும் ஆற்றுகை சஞ்சிகை யின் பதிவுகளாகப் பொதிந்துள்ளது.

வைதேகி செல்மர்எமில் எழுதிய அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகப்படம் ஒருபார்வை; யோன்சன் ராஜ்குமார் எழுதிய யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக் கூத்து மரபு, மரிய சேவியர் அடிகளார் எழுதிய நாம் அனைவரும் அரங்கே'' மற்றும் பா.ரகுபரன் எழுதிய யாழ்.பல்கலைக்கழகத்தின் 7 நாடகங்களின் ஆற்றுகைகள் சில கருத்துகள், க.விமலேந் திரகுமார் எழுதிய காலத்தின் சோகத்திற்கு ஒத்தடம் கொடுத்த கல்வாரியாகம், சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய முருகையனின் நாடகவாக்க முயற்சிகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி ஆற்றுகை வெளிவந்துள்ளது.

சாதாரணதர, உயர்தர வகுப்புக்களில் நாடகபாடத்தினை கற்கும் மாணவர் கள் அதிகரித்து வரும் வேளையிலும், நாடகத்துறைசார் ஆற்றுகையை வெளிப் படுத்தாத நூல்கள் இதுவரை வெளிவராத போதும், திருமறைக்கலாமன்றம் ''ஆற் றுகைச் சஞ்சிகையினை வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அத்துடன் காலத் தின் தேவையும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் இந்த ஆணையைப் பயன்படுத்தி சமூகத்தின் காயங்களை ஆற்ற முயலுங்கள்!

## இலங்கை அரசுக்கு அமெரிக்கா அறிவுரை

வாஷிங்டன், ஏப்.24

இலங்கையில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த தேர்தல் மூலம் பெற்ற மக்கள் ஆணையை இலங்கை அரசு சமூகத்தின் காயத்தை ஆற்றுவதற்குப் பயன்படுத்த வேண்டுமென அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாஷிங்டனில் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் பிலிப். ஜே.குரோலி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கை தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கைக்கான எமது முக்கியமான செய்தி என்னவென்றால் - நடந்து முடிந்த தேர்தல் மூலம் குறிப்பிடத்தக்க மக்கள் ஆணை வெளியாகியுள்ளது என்பதாகும்.

இலங்கையின் சமூகத்தின் மத்தியில் காணப்படும் காயத்தை ஆற்றும் நடவடிக்கையைத் தொடர்வதற்கு அரசு இந்த மக்கள் ஆணையைப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கை கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு முன்நோக்கி நகர்வதற்கும் இதனை அரசு பயன்படுத்த வேண்டும்.

சமீபத்திய தேர்தல் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தை சிறந்த முறையில் பயன்படுத்துமாறும் இலங்கை அரசை அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தும் - என அவர் தெரிவித்தார்.

# பிரான்ஸ் பிரஜை ஓமந்தையில் கைது

கொழும்பு, ஏப். 24

ஓமந்தை சோதனைச் சாவடியில் பிரான்ஸ் நாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ - 9 வீதியூடாக யாழ்ப்பாணம் செல்வதற்கு முயன்ற அவரிடம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரமொன்று இருந்ததெனினும் அது போலியானதெனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். அவர் பயணம் செய்த ஓட்டோவையும் பொலிஸார் கைப்பற்றினர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.க. உறவை முறித்துக் கொண்டது மனோ கணேசனின் ஜக்கிய மக்கள் முன்னணி

கொழும்பு, ஏப். 24

தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பாக உருவான கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகிக் கொண்டுள்ளது.

தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் தங்களுக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பட்டியலில் ஒருதலைபட்சமாக மாற்றங்களைச் செய்ததாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விரைவில் எமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்போம். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இணைந்திருப்பதற்கு எக்காரணமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அரசு ஜனநாயக மக்கள் முன்னணியைத் தன்னுடன் இணைந்துகொள்ளுமாறு அழைத்துள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கூறப்பட்டது.

# தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம்: வீரவன்ஸவுக்கு அரசு மீது அதிருப்தி!

கொழும்பு, ஏப்.24

தேசியப் பட்டியல் எம்.பி.நியமன விவகாரத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், அதில் இடம்பெற்றுள்ள விமல் வீரவன்ஸவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ இம்முறுகல் நிலை குறித்து ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் பகிரங்க விளக்கமளித்தார்.

இம்மாநாடு பத்திரமுல்லையிலுள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

''ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தேசியப் பட்டியல் எம்.பிக்கள் நியமனம் மகிழ்ச்சி தரவில்லை. தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இருவருக்கு தேசியப் பட்டியல் எம்.பிக்கள் நியமனத்தில் இடமளிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது. எமக்கு இரு தேசியப் பட்டியல் எம்.பிக்கள் நியமனம் தரப்பட வேண்டும். வெறுமனே ஒரு தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைத் தருவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் எமது தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த அச்சல சுரங்க ஜாகொடவை தேசியப் பட்டியல் எம்.பியாக்கி உள்ளனர்.

ஆனால் முன்பு வாக்களித்திருந்தபடி முஹமட் முஸாமிலுக்கு தேசியப் பட்டியல் எம்.பி.பதவியை வழங்கத் தவறிவிட்டனர். - என்றார் அவர்.

(சி)

# யாழ். நகரின் சகல நடைபாதைக கடைகளும் விரைவில் வேறு இடங்களுக்கு மாற்றப்படும்

## யாழ்.மாநகர ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். மாநகர சபை உரிய முன் அறிவித்தலை வழங்கி, யாழ் நகரில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் சகல நடைபாதைக் கடைகள் மற்றும் அங்காடிகள் அனைத்தையும் அகற்றத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகிறது.

இவ்வாறு அறிவித்துள்ளார் யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள நடைபாதைக் கடைகளை அகற்ற வேண்டியது அவசியமானது - அது அவசரமான தேவையும் கூட.

எனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய இடங்களை ஒதுக்குவதற்கான ஆலோசனைகளை நாம் இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்.

அதேசமயம் யாழ். பஸ் நிலையப் பகுதியிலுள்ள பழக்கடைகளுக்கு மட்டும் மணிக்கூட்டுக் கோபுர வீதியை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதேபோல் ஏனைய நடைபாதை அங்காடிக் கடைகளும் உரிய இடங்களை ஒதுக்கித் தருவது தொடர்பாகவும் நாம் கலந்துரையாடல்களை நடத்தி ஆராய்ந்து முடிவுகளை அறிவிக்கவுள்ளோம் - என்றார்.

(ஒ-16)

# தனித்து இயங்குவாராம் திகாம்பரம் அறிவிப்பு!

கொழும்பு, ஏப்.23

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் திகாம்பரம் நாடாளுமன்றில் தனித்துச் செயற்படப்போகிறார் என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அவரது கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றைத் தருவதாகக் கூறி ஐக்கிய தேசிய முன்னணி ஏமாற்றிவிட்டதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் குறை கூறினார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துக்கூறி நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நுவரெலியா மாவட்ட மக்கள் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்கே வாக்களித்தனர். அக்கட்சியின் ஊடாகவே அம்மக்கள் என்னையும் தெரிவுசெய்தனர்.

எனது கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்று தருவதாக ஐக்கிய தேசிய முன்னணி கூறி இறுதியில் ஏமாற்றிவிட்டது. இனி எமது கட்சி நாடாளுமன்றில் தனித்தே செயற்படும்.

மலையக மக்கள் தொடர்பாக அரசு கொண்டுவரும் நல்ல திட்டங்களுக்கு நான் ஆதரவு வழங்குவேன். பிழையானவற்றை எதிர்ப்பேன். - என்றார்.

# புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருகின்றதாம்

## பிரேஸிலுக்கான இலங்கைத் தூதர் குற்றச்சாட்டுகிறார்

கொழும்பு, ஏப் .24

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் அழிக்கப்பட்ட போதிலும், சர்வதேச வலையமைப்பின் நடவடிக்கைகள் தொடர்கின்றன - என்று இலங்கை அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ச்சியாக இயங்கி வருகிறது என பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எம்.ஜே.சாதீக் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்குச் சொந்தமான கப்பல்கள் சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மூன்று முதல் 500 கோடி அமெரிக்க டொலர்கள் வரையில் காணப்படலாம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புலிகளின் சர்வதேச சொத்துக்களை முடக்குவதற்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணத்தைக் கொண்டு பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்க முடியும் என்றும் அவர் யோசனை தெரிவித்தார். (அ-சி)

# புதிய சபாநாயகரான சமலை வாழ்த்தவில்லையாம் விமல்

கொழும்பு, ஏப்.24

இலங்கையின் 7 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் சமல் ராஜபக்ஷவுக்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் வீமல் வீரவன்ஸ சபையில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை என்று தெரியவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷ சபாநாயகராக நேற்றுமுன்தினம் ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதையடுத்து கட்சிகளின் தலைவர்கள் அவரை நாடாளுமன்றத்தில் பாராட்டி வாழ்த்தினார்கள்.

ஆனால் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சி எனக் கூறப்படும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ, புதிய சபாநாயகரை விதந்து பேசவும் இல்லை, பாராட்டி வாழ்த்தவும் இல்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பி.நியமன விவகாரத்தால் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையே இதன் பின்னணி என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாகவும் எவரும் புதிய சபாநாயகரைப் பாராட்டிப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (சி)

# ஊடகவியலாளரைக் கண்டுபிடித்துத் தரக் கோரி நாடாளுமன்று முன் துண்டுப்பிரசுரம் விநியோகம்

கொழும்பு, ஏப்.24

கடந்த ஜனவரி 24 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருக்கும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலி கொட்டவை கண்டுபிடித்துத் தருமாறு கோரி அவரின் குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தின் நுழைவாயில் முன்பாக நின்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

நேற்றுமுன்தினம்காலை 7 ஆவது நாடாளுமன்றம் கூடியது அப்போது நாடாளுமன்ற நுழைவாயில் முன்பாக காத்திருந்த இவர்கள் பிரகீத் எக்னலி கொடவை கண்டுபிடித்துத்தர வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

இவரைக் கண்டுபிடித்துத் தருவதற்கு பொலிஸார் உட்பட அரசுத் தரப்பினர் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அவர்கள் அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

எதிர்க்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று அவர்கள் அதில் கோரி உள்ளார்கள்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பிரதேச செயலகக் கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உடுவில் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட தேசியகலை இலக்கிய போட்டி முடிவுகள் வருமாறு:- கட்டுரை கனிஷ்ட பிரிவு-முதலாம் இடம்-அ.சாம்பவி (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி), 2ஆம் இடம்-பா.விதுர்சிகா (இணுவில் மத்திய கல்லூரி), 3ஆம்இடம்- சா.கோபிகா (ஸ்கந்தவரோதயக்கல்லூரி), சிரேஷ்ட பிரிவு, முதலாம்இடம்- செ.சர்வகா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி), 2ஆம் இடம்-த. சயந்தன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம்-ச.சஞ்சிதா (ஸ்கந்தரோதயக் கல்லூரி), கவிதை கனிஷ்ட பிரிவு- முதலாம் இடம்-வ.டிலக்சன் (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி), 2 ஆம் இடம்-பு. நிரோஷாந் (கந்தரோடை தமிழ்கந்தையா வித்தி), 3ஆம் இடம்-யோ.யதுர்சனா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி), கனிஷ்ட பிரிவு, முதலாம் இடம்- த.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி), 2ஆம் இடம்-ச.சக்திதர்சினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம்- வி.வானதி (இணுவில் மத்திய கல்லூரி), பாடலாக்கம்-சிரேஷ்ட பிரிவு- முதலாம் இடம்- வி.சுலக்ஷன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2ஆம் இடம்-சி.சுஜிபன் (இணுவில் மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- வி.வானதி (இணுவில் மத்திய கல்லூரி), சிறுகதை- கனிஷ்ட பிரிவு-முதலாம் இடம்-கு. தயாளினி (இணுவில் மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- இ.லக்ஷன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம்-க.யாழினி (இணுவில் மத்திய கல்லூரி), சிறுகதை சிரேஷ்ட பிரிவு- முதலாம் இடம்-ச.கோபிகா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2ஆம் இடம்-செ.சங்கீர்த்தனா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம்-ஜ. நிலோஜினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சிறுகதை- திறந்தபோட்டி- முதலாம் இடம்- நி.நிஷாந்தி (மானிப்பாய்வீதி, இணுவில் மேற்கு), 2ஆம்இடம்-பா.பாலச்சந்திரன் (சண்முகபவளம் மயிலனி, சுன்னாகம்), 3ஆம் இடம்-வே.கிரிசா (வங்கியடி, இணுவில் கிழக்கு), கவிதை திறந்த போட்டி- முதலாம் இடம்- ஜெ.தர்மிளா (சங்குவேலி வடக்கு, மானிப்பாய்), 2ஆம் இடம்-பா.பாலச்சந்திரன் (சண்முகபவளம் மயிலணி, சுன்னாகம்), 3ஆம் இடம்- செ.பரமநாதன் (மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில்), பாடலாக்கம்- 1ஆம் இடம்- செ.பரமநாதன்(மானிப்பாய்வீதி, தாவடி கொக்குவில்), 2 ஆம்இடம்-அ.நேதிகா (வரதராச வீதி, இணுவில் மேற்கு), 3ஆம் இடம்- ச.நளாயினி (இல,81 மயிலணி, சுன்னாகம்), ஆங்கிலக் கவிதை- திறந்த பிரிவு- முதலாம் இடம்- பா.பாலச்சந்திரன் (சண்முகபவளம் மயிலணி, சுன்னாகம்), ஆங்கிலப்பாடலாக்கம்- முதலாம்இடம்- பா.பாலச்சந்திரன் (சண்முகபவளம் மயிலணி, சுன்னாகம்). (04-201)


## திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

### கண்டிய நடனம்

இலவச சான்றிதழ் கற்கைநெறி
ஆரம்பம்:01.05.2010 சனிக்கிழமை
மு.ப.10 மணி

கண்டிய நடன இலவச கற்கை நெறியில் பயில விரும்பும் ஆர்வமுடையோர் 30.04.2010 வெள்ளிக் கிழமைக்கு முன்பாக தங்களது பெயர் விவரங்களை பின்வரும் இடங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.

**கலைத்தூது அழகியல் கல்லூரி,**
128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.0212229419.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.0212222393.
(567128)



## திறப்பு விழா

ஜெயாஸ் டிஜிற்றல் வீடியோ & போட்டோ

இன்று (24.04.2010) சனிக்கிழமை
நேரம் 12.00 - 1.00 மங்களகரமாகத் திறந்து
வைக்கப்படுகின்றது.

உரிமையாளர்: கா.ஜெயதாஸ்,
203/5, கண்டி வீதி, அரியாலை,
0776154069

தபால்கட்டைச் சந்தி,
கண்டி வீதி, அரியாலை.
(97325)



ANCHOR
Royal Gold
Re-live the golden era



தரமானதும் SLSI
தரச்சான்றிதழ்
பெற்றதுமான அங்கர்
மின்விசிறிகள்
தற்பொழுது
யாழ்ப்பாணத்திலும்.....

Anchor
Air force
The power to blast off heat !

Certified By
American Quality Assessors
ISO 9001 : 2000
CERTIFIED COMPANY

Anchor Fans pioneered the use of
aero dynamic techonology in India

ANCHOR
**Anchor Electrical PVT LTD.**
Mumbai, India.
Member of
**Panasonic**

Imported by:
**Abbe (PVT) LTD.**
14,1/1, Daya Road, Colombo - 06
Sales Point:
67A, Wolfendhal Street, Colombo -13.
T.P: 0112439993

விற்பனைக்குப் பிந்திய சேவை
"பரம்பரனை மின்னகம"
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5766


## அறிவித்தல்



கோப்பாயில் வசிக்கும் அன்னைதெரெசா மடக் கன்னியர்கள் அல்லது அன்புபரப்புசபை கன்னியர்கள் என அழைக்கப்படும் நாங்கள், எங்கள் பெயரிலோ அல்லது அனாதைகள், ஏழைகளின் பெயரிலோ நன்கொடை வசூலிக்க யாரையும் அனுப்பவில்லை; அனுப்புவதுமில்லை. எனவே எங்கள் பெயரில் எந்த உதவியும் செய்யவேண்டாம் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அப்படி யாராவது வசூலித்தால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவும்.

021 222 3702

அன்னை தெரெசா
மடக் கன்னியர்கள், கோப்பாய்.

## 7ஆம் ஆண்டு நினைவுகளுடன்

அன்னை மடியில்
20 ★ 05 ★ 1920



ஆண்டவன் அடியில்
24 ★ 04 ★ 2003

### அமரர் தொம்மை பிலிப்பு

ஆண்டுகள் ஏழு ஆனதோ பப்பா
அன்பான உம் திருவதனம் கண்டு
அவனியில் நாம் உயர்வடைய
அயராது பாடுபட்டுழைத்த எம் தந்தையை
நன்றி உணர்வுடனே நினைக்கின்றோம் -இந்நாளில்
நித்தமும் எம் மனதில் நிலை பெற்றிருக்கும்
நின் அன்பான வார்த்தைகளை எண்ணி
நெஞ்சுருகி வாழ்கின்றோம்
நின் ஆன்மா ஆண்டவரில் அமைதி பெற
இறையருள் வேண்டுகிறோம்.

கச்சாய்வீதி,
கொடிகாமம்.
(97319)

நீங்காத நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அன்பாலே எமை அரவணைத்து பண்பாலே எமை வழிநடத்தி நிலையான வாழ்வு தேடிச் சென்றீரே!

அராலிமத்தி,
வட்டுக்கோட்டை.
(97315)

க.நவரத்தினம்
(சின்னண்ணை).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தே.ஜீவானந்,
ஜீ.ஆன் லொலின்,
ஜீ.ஜீவனா,
ஜீ.அர்ச்சனா

உதிர்வு: 25.04.2009

எம் குடும்பத்தின் குலதீபங்களே, நீங்களில்லாத எமதில்லம்
ஒளிஇழந்து ஓராண்டு ஆனதுவே!
அன்பின், பண்பின், அறிவின் இருப்பிடங்களாய் பேரோடும், புகழோடும் பார்போற்ற வாழ்ந்தீர்கள்
கண்பட்டதோவென ஷெல்பட்டிறந்த போது அம்மா கதறியழ, அப்பா பரிதவிக்க
அண்ணா குடும்பம் கேள்வியுற்று தவியாய் தவிக்க
உற்றார், உறவினர் கவலையுற எமைவிட்டு எங்கு சென்றீர்கள்-இல்லை
எம்மிதயங்களில் என்றும் வாழ்கின்றீர்கள்.

வலித்தூண்டல், கீரிமலை.

துயருறும்:
அப்பா, அம்மம்மா,
அண்ணா, அண்ணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொமர்ஷல் வங்கிக்கிளை மானிப்பாயில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில், கொமர்ஷல் வங்கித் தலைவர் எம்.ஜெ.சி.அமரசூரிய, பிராந்திய முகாமையாளர் ஆர்.ரவீந்திரா, மானிப்பாய் கிளை முகாமையாளர் கே.குணசிங்கம் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் எம்.ஜெ.சி.அமரசூரிய, வைபவரீதியாக நாடாவெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதையும் வங்கியில் பணத்தைப்பெற்று முதல் வைப்பை ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: ரட்ணம்)*

# எவருமே திரும்பியும் பார்க்காத நிலையில் கொடிகாமம் பஸ் நிலையம் ஓய்வில்!

## நடுவீதியில் நின்று பயணிகள் அந்தரிப்பு!!

யாழ்ப்பாணம்,ஏப்.24

கொடிகாமம் நகரில் உள்ள பொது பஸ் நிலையத்தை எவரும் திரும்பிப் பார்ப்பார் இல்லை. அந்த பஸ் நிலையம் நீண்டநாள் 'ஓய்வில்' இருக்கிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வெகு சுறுசுறுப்பாகக் காணப்பட்ட அந்த பஸ் நிலையம் எவரது கவனிப்பும் இன்றி வெறிச்சோடிப் போயுள்ளது.

போக்குவரத்துச்சபை பஸ்களும், தனியார் மினி பஸ்களும் தரித்துச் செல்லும் பொது பஸ்நிலையமாகக் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் அந்த நிலையம் அமைந்துள்ளது. ஆனால் அங்கு எந்தவொரு பஸ்ஸும் செல்வதில்லை.

யாழ். நகரில் இருந்து கிளிநொச்சி, வவுனியா,திருகோணமலை,மன்னார், கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள், மினிபஸ்கள் அனைத்தும் பிரதான வீதியில் (ஏ-9 வீதியில்) பயணிகளை இறக்கிவிட்டு அல்லது ஏற்றிக்கொண்டு பறந்து விடுகின்றன.

போக்குவரத்துச் சபையினருக்கோ தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினருக்கோ அங்கு பஸ் நிலையம் ஒன்று இருப்பது நினைவில் இல்லைப் போலும்.

அனைத்துப் பஸ்களும் பஸ் நிலையத்துக்குச் செல்ல பின்னடிப்பதால், பயணிகள் பிரதான வீதியில் கொளுத்தும் வெயிலில் காத்திருக்க வேண்டியுள்ளது. தற்போது தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பஸ்கள் மற்றும் பல்வேறு வாகனங்களும் பிரதான வீதியை அடிக்கடி கடந்து செல்வதால், பயணிகள் அங்கு காத்திருப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

பயணிகளின் சிரமங்கள் - அசௌகரியங்களைக் கருத்தில் எடுத்து இனியென்றாலும் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியிலுள்ள பஸ் நிலையத்திற்கு பஸ்களை திருப்பி விட்டு, அங்கு ஓரிரு நிமிடங்கள் தரித்துச் சென்றால் என்ன?

போக்குவரத்துச் சபையினரும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரும் இதனைக் கவனத்தில் எடுப்பார்கள் என்று பயணிகள் எதிர்பார்க்கின்றனர். (ஒ)

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

வண்.மேற்கு காட்டுத்துறை பகவதி மாரியம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கிறது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 9.30 -11 மணிவரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெறும். தொடர்ந்து அம்பாளின் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகும். (ஒ)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி,ஏப்.24

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறுதோறும் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'மாமுனிவரும் நாமும்' என்னும் தலைப்பில் சுவாமி சித்ருபானந்தாவின் சொற்பொழிவு நடைபெறும். (50-236)




## தந்தை செல்வாவின் 33 ஆவது நினைவு தினம்

கொழும்புத்துறை,ஏப்.24

தந்தை செல்வாவின் 33 ஆவது நினைவு தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தந்தை செல்வா சதுக்கத்திலுள்ள நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவல் குழுவின் ஏற்பாட்டில் அன்று காலை 9.30 மணிக்கு அறங்காவல் குழுத் தலைவர் பேரருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

அறங்காவல் குழுவின் செயலாளர் பேராசிரியர் சு.சத்தியசீலனின் வரவேற்புரையும், பிரமுகர்களின் நினைவுரைகளும் இடம்பெறும்.

அஞ்சலி உரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அருட்பணி ஏ.எவ்.ஜெயசேகரம் அடிகள், மௌலவி மஃமுத் ஆலி ஆகியோர் நிகழ்த்துவார்கள். (50-135)

# சுற்றுலாப் பயணிகளைச் சுண்டியிழுக்கும் ஒடியல் கூழ்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தெற்கிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் பனை அபிவிருத்திச் சபையால் தயாரித்து வழங்கப்படும் ஒடியல் கூழையும் விட்டு வைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்துக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகள் ஒடியல் கூழைத் தயாரித்து தமக்கு வழங்குமாறு கேட்டதாகவும், சபையினரால் உடனடியாகவே கூழ் தயாரிக்கப்பட்டு இவர்களுக்குச் சுடச்சுட வழங்கப்பட்டதாகவும், இதனைப் பெற்றுக் கொண்ட சுற்றுலாப்பயணிகள் மிகவும் விரும்பி அருந்தியதாகவும் மேலும் தெரியவருகின்றது.

அத்துடன் சபையினர் ஒடியல் கூழைப் பெருமளவில் தயாரித்து யாழ்.சத்திரச் சந்திக்கு அருகாமையிலுள்ள கற்பகம் கட்டடத் தொகுதியில் வைத்து விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-224)

# கிளிநொச்சி மாவட்டச் சிக்கனக் கடனுதவி கூ.சங்கங்களின் சமாசப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

கிளிநொச்சி மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தற்போது கிளிநொச்சியில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் கிளி.மாவட்ட கூட்டுறவுச் சபையின் அலுவலகக் கட்டடத்திலேயே இந்த சமாசம் தற்போது இயங்கி வருகின்றதென அங்கத்துவச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்க வங்கி வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல அங்கத்துவச் சங்கங்களையும் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், தங்கள் சங்க அங்கத்தவர்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், வைப்புக்கள், கடன்மீதிகள் தொடர்பாக தம்மிடமுள்ள ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் சமாசத் தலைவர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (50-14)

# குடாநாட்டு மகளிருக்கு சுயதொழில் வாய்ப்புக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.24

பெரளையிலுள்ள வரையறுக்கப் பட்ட இலங்கை மகளிர் அபிவிருத்திச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில், பெண்களின் சுயதொழில் முயற்சி தொடர்பான ஆரம்பக் கூட்டம் இன்றும், நாளையும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுதுமலை கிழக்கு கிராம அலுவலகர் அலுவலகத்திலும் பிற்பகல் 4 மணிக்கு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோயிலாக்கண்டி கிராமத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மகளிர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முக்கியஸ்தர்களும், கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சுதுமலை, கைதடி, கோயிலாக்கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெண்களும் ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களும் பயன்பெறும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகச் சங்கச் செயலாளர் ஆர். அனோமா [illegible] ஜெயசிங்ஹ தெரிவித்தார். (1-14)

## பாலர் பாடசாலையின் ஆண்டு விழா

காரைநகர், ஏப்.24

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலை ஆண்டு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

காரை கிட்ஸ் பார்க் முன்றிலில் பிற்பகல் 3 மணிக்கு கிட்ஸ் பார்க் அமைப்பின் தலைவரும் காரைநகர் பாலாவோடை சி.த.க. பாடசாலை ஆசிரியருமான க. நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணனும்,சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக பணிப்பாளருமான பா.தனபாலன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரட்ணம், தொழிலதிபர் எஸ். இராஜகுமாரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் மழலைகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (50-250)

## குடத்தனைக்கு மீண்டும் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 24

குடத்தனை நன்னீர் விநியோகத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் வடமராட்சிப் பிரதேசத்துக்கான குதண்ணீர் பிரச்சினை முற்றிலுமாகத் தீர்த்து வைக்கப்பட்டுவிடும் என்றும்,இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-224)

## பூர்த்தி செய்த படிவங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.24

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு படிவங்கள் பெற்ற தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பூர்த்திசெய்த படிவங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர். (ப-207)

## இதுவரை புனரமைக்கப்படாத கந்தன்காடு மயானம்

யாழ்ப்பாணம், ஏப். 24

கோப்பாய், கைதடி வீதியிலுள்ள கந்தன் காடு மயானம் நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பு வேலைகளுமின்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த மயானத்திலுள்ள மண்டபங்கள் யாவும் சேதமுற்றிருப்பதாகவும், இதன் காரணமாக உடல்களைத் தகனம் செய்வதில் பல சிரமங்களை எதிர் கொள்ள நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது.

வெயில் காலங்களிலும் மழை காலங்களிலும் தகனக்கிரியைகளுக்காக வரும் மக்கள் தங்கி நிற்பதற்கு வசதியாக கந்தன் காடு மயானத்தை மீள புனரமைத்துத் தரும்படி பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி ஊடறுக்கும் ஒரு கோயில் நகரம்; அறிவீனத்துக்கும், அசட்டை செய்தலுக்கும் பலியாகுமா?

நகரத்திட்டமிடல் என்பது சமூக, பண்பாட்டுப் பொருளாதார, அரசியல் நிலைமைகளின் பின்னணியில் நிலத்தைக் கையாளும் ஒரு செயற்பாடு என்று கூறுவார்கள். ஒவ்வொரு காலத்தின் தேவைகளும் நிலைமைகளும் இதனை வடிவமைக்கின்றன எனக்கூறும் நகரவியல் ஆய்வாளர்கள் பொதுப்படையாகப் பண்டைய மேற்கத்தைய நகர அமைப்பு பெரியளவில் பொருளியல் அடிப்படையிலானது எனவும் பண்டைய ஆசிய நகர அமைப்புக்கள் கூடுதலாக பண்பாட்டு அரசியல் பின்னணியை உடையன எனவும் எடுத்துக் காட்டுகின்றார்கள்.

'கோயில் நகரம்' என்பது பண்டைய நகர அமைப்பு வடிவங்களுள் ஒன்றாக எடுத்துக் காட்டப்படுவதும் பல இடங் களில் அவற்றின் காலத் தொன்மை, பண்பாட்டு முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஓரமைப்பாக இவை உள்ளன. குறிப்பாக தென்னிந்தியாவின் பண்டைய மத்திய காலத்து நகரங்கள் கோயில் நகரங்களாகவே அமைந்திருப்பதை இன்றும் பார்க்கலாம். ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை போன்றவை இன்றும் வாழும் - நம்மவர்கள் பார்த்தறிந்திருக்கக் கூடிய மையங்களாகவுள்ளன. பெரும்பாலான இத்தகைய தென்னிந்திய நகரங்கள் பெரும்பாலும் 'வாஸ்த்து சாஸ்திரம்' எனக் கூறப்படும் நிலங்கள் - கட்டுமானங்கள் தொடர்பான பாரம்பரிய வடிவமைப்புக்களை எடுத்துக் காட்டும் நூல்கள் வழியாக கட்டப்பட்டவை என பாரம்பரிய தென்னிந்திய நகர வடிவமைப்புப் பற்றிய ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். 'வாஸ்த்து சாஸ்திரம்' கூறும் நகர வடிவமைப்பில்



கோயிலே அதன் மையம் - கோயிலிருந்தே நகரம் விரிகிறது அல்லது எல்லா நகரத்தின் பகுதிகளும் கோயிலில் முடிகின்றன அல்லது 'ஒடுங்குகின்றன' சதுர / நீள் சதுர முதன்மைப் பண்புடைய 'திராவிட வகைக் கோயில்களில் இருந்து புறப்படும் நகர வடிவமைப்பு கோயிலைச் சூழ அடுத்த, அடுத்த சதுர/ நீள் சதுர பண்பு சற்று மேலோங்குமாறு வீதிகளையும் குடியிருப்பு - வர்த்தக மையங்களையும் அடுக்கிச் செல்கிறது. எனவே, நகரத்தினைச் சுற்றி வருதல் என்பது கோயிலையும் சுற்றுவதாக அமைந்தது.


இத்தகைய ஒரு கோயில் நகர மையம் அதிஷ்டகரமாக இன்றும் கூட நம் மிடையே வாழுகிறது என்பது எம்மில் பலருக்குத் தெரியாது என்பது மிகவும் கவலைக்கிடமானது. வண்ணார் பண்ணையை மையமாகக் கொண்ட இவ்வடிவமைப்பு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. தென்னிந்தியா போல மத்தியகாலத்திற்குரியதாக அல்லாது விடினும் ஒல்லாந்த காலனிய காலத்தில் போர்த்துக்கேயரது சுதேசிய கோயில் அழிப்புகளுக்குப் பின்பு தோன்றிய யாழ்ப்பாணத்தின் கோயில் வரிசையைச் சேர்ந்த இக்கோயில் (1790) மேற்படி கோயில் நகர அமைப்பினை உடையது. பரிவாரக் கோயில்கள்/ எல்லைக் கோயில்கள், கைவினைஞர் குடியிருப்புக்கள், மாலைகட்டுவோர், இசை வேளாளர் ஒரு காலத்தில் தேவரடியார் குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள் சகிதமாக அமைந்துள்ள இக் கோயில் நகரம் நமது பண்டைய மரபுரிமைச் சின்னமாக - இடமாக இன்றும் காணப்படுகின்றது.

இவ்வாறான மையங்கள் நமக்குப் பரிச்சயமான தென்னிந்தியாவில் கூட இயன்றவரை பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. புதிய கட்டு மானங்களால் - மாற்றங்களால் அவற்றின் தனித்துவமும் - அடையாளமும் சீர் குலைக்கப்படவில்லை. பதிலாக அவற்றை அவ்வாறே பேணியபடி புதிய மாற்றங்களை அவர்கள் செய்துள்ளனர். ஒன்றில் பழைய நகரத்தை அவ்வாறே வைத்தபடி (இலங்கையில் அனுராதபுரம் நல்ல உதாரணம் பழைய அனுராதபுரம்' பேணப்பட்டபடி 'புதிய அனுராதபுர நகரம்' உருவாக்கப்பட்டுள்ளது) புதிய நகரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அல்லது குறைந்த பட்சம் மேற்படி மையங்கள் கெடாமல் அவற்றை ஊடறுத்தோ - மாற்றியோ மாற்றங்களை செய்யாமல் புதிய செயற்பாடுகளை அவற்றை விலத்தி - விலக்கிச்செல்வதன் மூலமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆனால் கே.கே.எஸ். வீதி அகலமாக்கப்படும் போது, முழு இலங்கையிலுமேயுள்ள ஒரேயொரு இந்துக் கோயில் நகரம் பாதிக்கப்படப் போகிறது என்பது பற்றி எமக்கு ஏதேனும் விசனம் உள்ளதா? எஞ்சியுள்ள பண்டைய பெருமைகளை எல்லாம் அழியவும் - அழிக்கவும் செய்யும் - கூசாமல் அவற்றில் பங்கெடுக்கும் எமக்கு இது பற்றியெல்லாம் என்ன கவலை?

பலர் சுட்டிக் காட்டியபடி இந்தக் கோயில் நகரமையமே - சைவ மறுமலர்ச்சியின் மையமுமாகும். அது சார்ந்துருவாகிய, சிலவேளை இக்கருத்து நிலையை கேள்விக்குள்ளாக்கிய (கில்னர் மண்டபம்) மையங்களும் கூட இந்த நகரத்தோடு தான் ஒட்டப்பட்டுள்ளன. முன்யோசனை இன்றி - சரியான திட்டமிடல் இன்றி இதன் மேல் நிகழ்ந்துள்ள - நிகழும் - நிகழப்போகவுள்ள அனைத்தும் பேணப்பட வேண்டிய இந்த மரபுரிமை இடத்தினை (Heritage site) பாழடித்துவிடும்.

இவ்வாறு கூறுவதை முன்னொரு கட்டுரையாளர் கூறியபடி வீதியை



லாஸ்துசாஸ்த்திர நகரக்கட்டுமான வரைபடம்

அகலமாக்கலாமா - இல்லையா என்ற மேலோட்டமான 'பட்டிமன்ற விவாதம்' ஆக்கக் கூடாது. பதிலாக வீதி அபிவிருத் திச் செயற்பாடுகள் நிகழ வேண்டும் - ஆனால் அதன் மத்தியில் மேற்படி பண் பாட்டு இடங்களும் பேணப்பட வேண்டும். அதற்கு மாற்று வழிகளைச் சிந்திக்கத் தயாரான மனநிலைகள் வேண்டும். உலகம் அவ்வாறுதான் இயங்குகின்றது. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களும் கூட அவ்வாறுதான் இயங்குகின்றது. ஆனால்....

ம.திருக்குமார்

# சாம்பல் நகரில் உதிர்ந்துபோன கனவுகள் -

ஈழத்துக் கவிதைகள் ஈழ மக்களின் நெருக்கடி மிக்க வாழ்வில் அதன் தாங்கொணாத் துயரத்திலிருந்து மக்கள் பேரெழுச்சியிலிருந்து எழுகின்றனர். வன்முறையும் யுத்தமும் இடப்பெயர்வும் அவலமும் அச்சமும் என்று இயல்பான வாழ்வை இழந்து விட்ட சாபகரமான துயரத்தையும் இயல்பு கொண்ட வாழ்வுக்கான பேரவாவையும் கொண்டு ஈழ மக்களின் இரத்தமும் சதையுமான அனுபவங்களைப் பாடுகின்றன. வெற்றியும் தோல்வியும் ஏமாற்றங்களும் இழப்பும் கவனங்களை ஈர்ப்பதுமாக நிகழ்ந்த முப்பது வருட காலப் போராட்டத்தையும் இன்று விளைந்திருக்கின்ற கையறு நிலையையும் மிக அப்பட்டமாக ஏனைய இலக்கியங்களைப்போல் கவிதைகளும் பேசுகின்றன. சொற்களின் வாசனை என்ற இந்தத் தொடரில் இத்தகைய வாழ்வின் பாரம் மிக்க கவிதைகளை பற்றி வாசிப்பது மிகுந்த அவசியமாகப் படுகிறது.

ஆமிராபாலி எனப்படும் ஹரிகரசர்மாவின் 'சாம்பல் நகரம்: சில கவிதைகள்' சாம்பல் படிந்த நகரமொன்றில் நிகழ நேர்ந்த வாழ்வொன்றை அதன் வடிவமைப்பை மிகச் சரியாக பதிவு செய்திருக்கிறது. 2006 ஆம் ஆண்டு யுத்தம் திடீரெனத் தொடங்கி ஏ-9 பாதை மூடப்பட்டபொழுது யாழ்ப்பாணம் யுத்தத்தின் பெரு அபாயம் பொருந்திய நாடாகியது. பாதைகளற்று மரணம் மட்டுமே ஆட்சி கொள்ளும் தெருக்களாகின. அச்சமும் அவலமும் பசியும் இருட்டும் நிறைந்த அந்த நாள்களில் இங்கும் மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதையும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதையும் ஹரிகரசர்மாவின் 'சாம்பல் நகரம் : சில கவிதைகள்' என்ற கவிதை தெளிவாகப் பதிவு செய்திருக்கிறது.

நகரின் வடிவவியல் புதிரானது
சந்துக்கள், குறுக்குத்தெருக்கள்,
முடுக்குகள் மரணம் அலைவதற்கென
வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. மரணம்
அலைகிறது.



மரணம் நடந்துகொண்டிருக்கும்
ஆட்சியில் அது தான் தெருக்களை அறிந்து
வைத்திருக்கிறது. மனிதர்களைப் பற்றிய
குறிப்புக்களை எடுத்து வைத்திருக்கிறது.
அலைந்து திரிவதையும் செங்கனவின்
இழைகளில் அலைந்து திரிதலையும்
மரணம் கட்டுப்படுத்துகிறது. வாழும்
கனவையும் வழிகளுக்கான கனவையும்
மரணம் பிடுங்கிக் கொள்கிறது. அச்சம்
தரும் கனவுகளையும் அபாயகரமான
வாழ்வையும் தந்திருந்தது.




## 'பள்ளிக்கூடம் போகமாட்டேன்!'



''அம்மா நான் இனிமேல் பள்ளிக்கூடமும் போகேல, ரியுசனுக்கும் போகேல என்று சலிப்புடன் கூறிக்கொண்டி ருந்தாள்.

'ஏன் பிள்ளை உனக்கு என்ன நடந்தது என்று பதற்றத் துடன் பரபரப்புடன் விசாரித்துக்கொண்டிருந்தாள் தாய்.

இல்லையம்மா நான் இனிப் படிக்கேல ஓ எல் பாஸ் பண்ணி, ஏ.எல் வரைக்கும் படிச்சிட்டன்தானே இனி காணும். ஓ.எல் வரை யும் படிச்சாச்சரிதானே என்று மீண்டும் அழுத்திக் கூறினாள்.

'என்னடா ஏ.எல் படிச்சு கம்பஸ் போய் உத்தியோகம் பார்த்து அம்மாவைக் கவனிப்பேன் என்று அடிக்கடிக் கூறிக்கொள்பவள். இப்படித்திடீரென்று மாறிவிட்டாள்' என்று தனக்குள்ளே நினைத்தவாறு மீண்டும் துருவித்து ருவி விசாரித்தாள்.

தாயின் விசாரணை கடுமையாக இருந்ததால் அவள் உண்மையைச் சொல்லத்து ணித்தாள்.

அம்மா ஒரு பெடியன் என்ன 'லவ்' பண்ணுறன் என்று அடிக்கடி பின்னால முன்னால திரியுறான்.

அண்டைக்கு கடிதம் தந்தவன் நான் அவனுக்கு முன் னால் கிழிச்செறிஞ்சு போட்டேன்.

அதனால போன சனிக்கிழமை நான் கிளாஸ் முடிஞ்சு வரேக்க 'ஹயஸ்' கொண்டு வந்திட்டாங்கள்.

'ஹயஸ்' கதவு திறந்திட்டாங்கள் நான் உடன பக்கத்தில இருந்த வீட்டுக்குள்ள ஒடிப்போட்டன்'

மகள் சொல்வி முடித்ததும் தாய் அதிர்ந்துபோனாள். ''இதை ஏன் எனக்கு இவ்வளவு நாளும் சொல்லேல...''

''அம்மா இப்ப பெடியள் படுமோசம். தங்கட பிரச்சினையை வீட்டுக்குச் சொன்னால் அகோரம் கொள்கிறாங்கள். அதனால்தான் சொல்லேலை'' என்று அழத்தொடங்கினாள்.

பார்த்தீர்களா? சம்பவத்தை இதுவொன்றும் கற்பனையல்ல. யாவும் யதார்த்தம் வலிகாமப்பகுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவம்!

''தட்டிக்கேட்க ஆளில்லையென்றால் தம்பி சண்டைப்பிரசண்டன்'' என்று சொல்லிக் கொள்வார்களே அது போலதான் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இளைய சமூகம் தாம் செல்லும் வழிதெரியாமல் கொள்கையற்றுக் காட்டுமிராண்டித்தனமாக தமது செயற் பாடுகளை முன்னெடுக்கிறார்கள். இத்தகையவர்களை இனம்கண்டு களைந் தெறிய வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரி டமும் உள்ளது. தீமைகள் தீவிரமாகும்முன் நாம் விழிப்படைவோம்.

கவிநேசன்

17.04.2010 பார்த்தீர்களா? கேட்டீர்களா? பத்தியில் வெளியான விடயம் தொடர் பாக குறித்தபாடசாலையின் அதிபர் விளக்கக்கடிதம் ஒன்றை எமக்கு அனுப்பியுள் ளார். அதில் வெள்ளைத்தாளில் கையால் எழுதப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப் பட்ட மாணவர் தேர்ச்சி அறிக்கை 2009 ஆம் ஆண்டு 3 ஆம் தவணையின் போது இரு மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டதெனவும், எதிர்பாராத விதமாக இடம் பெயர்ந்த மாணவர்கள் பலர் பாடசலையில் இணைந்துகொண்டதால் தேர்ச்சி அறிக் கைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டதாலேயே வெள்ளைத்தாளில் தேர்ச்சி அறிக்கையை தயாரித்து வழங்கியதாகவும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லது. புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் இரண்டு தேர்ச்சி அறிக்கை களே வழங்கப்பட்டதாக அதிபர் தெரிவிக்கிறார். எமக்குக் கிடைத்த தகவல்களின் பிர [illegible]வர்களுக்கு இவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதே போன்று [illegible]லைகள் மாணவர்களுக்கும் தேர்ச்சிப்புத்தகம் வழங்கப்படக் கூடாது என்ற நோக்கத்துடனேயே இவ்விடயம் பத்தியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள் - ஆமிராபாலி கவிதை

மரணம் அறிந்திருக்கிறது
எச்சந்தில் கனவுகள் தனித்துத் திரியுமென எப்பொழுதில் கனவுகள் துண்டாய்ச் சிதறுமென இங்கு மரணம் என்பது மனிதர்களைப் பின்தொடரும் அபாய மிருகமாகவும் எல்லாவற்றையும் அழித்துக்கொண்டிருக்கும் சூழ்ச்சிகரமான ஆக்கிரமிப்பாகவும் இயல்பான எல்லாவற்றையும் பிடுங்கித் தின்னும் துப்பாக்கியாகவும் உணர்வுகளை தாங்கியிருக்கின்றன.

சாம்பலாகிய சாம்பல் படிந்த சாம்பல் கொட்டிக்கொண்டிருந்த நகரத்தின் காட்சிகளையும் அதன் உள்ளொழுங்கைகளின் காட்சிகளையும் அந்த வடிவமைப்புகளில் அச்சம் பதுங்கியிருக்கும் துர்பாக்கியத்தையும் முழுமையாக இந்தக் கவிதையில் எங்கும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இளங்காலையில் மூட்டப்பனியெனக் கலங்கிச் சிதைந்த நகரின் காட்சிகளுடே பிணைந்து நெளியும் நிராசையும் வலியும் தெருக்களின் ஓரமெங்கும் மலர்ந்திருக்கிறது. பயம் - குருதி நிறத்தில் நிராகரிக்கப்பட்ட ஆசையின் வலி என்பது நிராகரிக்கப்பட்ட வாழ்வைப் பற்றியும் அதை மூடிவிட்ட அச்சத்தைப் பற்றியும் சொல்கிறது. எல்லா விதமான கனவுகளுடனும் அன்றைய மக்கள் காத்திருந்தார்கள். ஆனால் எல்லாமே முற்றிலும் குருதியால் சூழப்பட்டிருந்தது. அதன் பாதிப்பிலிருந்தது.

எலும்பின் வீச்சமடிக்கும் மலர்களைச் சூடியிருப்பவளே நில் அப் பூவில் தூய குருதியின் வாசனை வீசுகிறதர்வெனப் பார்க்க வேண்டும் நான்.

எந்தக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படாமல் அன்றைய கனவுகள் கடைசிவரை நிராணிக்கப்பட்டன. ஏக்கமும் ஏமாற்றத்துடனும் இந்தக் கவிதையும் கனவுகளுக்காய் அலையும் மனமும் அடங்கிப்போனது. அதிகாரத்தால் காவு கொள்ளப்பட்ட வாழ்வை அதனால் கொண்டு செல்லப்பட்ட இயல்பை கோரிக்கொண்டே இந்தக் கவிதை பெரு ஏக்கத்துடன் முடிகிறது.

அதிகாரத்தின் ஆண்குறி அதன் வாய் பிளந்து துப்பும் குண்டுகள் சிதைந்த நம் எல்லோரதும் குருதிக்கறைகளை தேய்த்துக் கழுவுவார்கள் நாளை அரூபங்களாய் அலையும் கனவுகளை சேர்த்து ஊளையிட்டுக்கொள்ளட்டும் இந்த நிலம். உதிக்கும் சூரியனில் கிரகணங்கள் நிலத்துக்கடியில் வருமா தெரியவில்லை.

குருதியும் இருளும் பசியும் நிறைந்த இந்தக் குடாநாட்டில் இப்படியொரு வாழ்வு நடக்கிறது என்பதே அன்றைய நாள்களின் அதிசயமாக இருந்தது. யாரையும் நம்ப முடியாதபடி மனிதர்களுக்கு மனிதர்கள் அச்சம் கொள்ளும்படியும் யாரையும் யாரும் தேற்ற முடியாதபடி வலி நிரப்பப்பட்ட கணங்களும் யாருக்கும் யாரும் உதவ முடியாதபடி கையறு நிலைக்கு தள்ளப்பட்ட துயரமும் காணப்பட்டது. அப்பொழுதிருந்த மனிதர்களை அவர்களுக்கிருந்த ஏக்கங்களை அவர்கள் வாழ்ந்த ஆறாதிருந்த பொழுதுகளை மூடப்பட்ட நீண்ட இரவுகளை எழுதியவர்களில் ஹரிகரசர்மாவுடன் சித்தாந்தன், துவாரகன், த.அஜந்தகுமார், ந.விணோதரன், கல்வயல் குமாரசாமி, சோ.பத்மநாதன் போன்றவர்களும் முக்கியம் பெறுகிறார்கள்.

தீபச்செல்வன்



தொகுப்பு: ஒளண்யன்

## ஹைக்கூ கவிதைகள்

மண்ணிலே
கண்டபடி துள்ளாதே
உள்ளே மூதாதையர்.

★★★★★★★★

அகதியானது
மூட்டைப் பூச்சி
கதிரை யுத்தம்.

★★★★★★★★

விறகினை
மெத்தையாக்கிய ஏழை
பிணம்.

★★★★★★★★

தொலைக்காட்சி
தலைகீழாய்த் தெரிகிறது
அது தமிழ்ப்படம்.

★★★★★★★★

பொலிகையூர்
பொன்.சுகந்தன்

# கவிதைமொழி கொண்டு நாடகம் படைத்த ஷேக்ஸ்பியர்

உலக மகாகவி - நாடக ஆசிரியர் - தலைசிறந்த நடிகர் - அவர்தான் ஷேக்ஸ்பியர்.

''ஷேக்ஸ்பியர்'' என்ற பெயரை செகப்பிரியர் என்று கூறியும் எழுதியும் மகிழந்தார் விபுலானந்த அடிகள். இந்த செகத்திலுள்ள அனைவராலும் விரும்பப்பட்டவர் என்பதை அவரது பெயரே குறித்து நிற்கின்றது என்பதைக் காட்டுவதாக இவ்வாறு அவர் குறித்தார் போலும்.

15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிறந்து ஆங்கில மொழியின் சிறப்பினை உலகின் உச்சத்துக்கு உயர்த்தி மகிழ்ந்த ஷேக்ஸ்பியரைப் பற்றி அறியாதவர்கள் இன்று எவரும் இல்லை என்று கூறலாம்.

ஷேக்ஸ்பியரின் கவிதை நாடகங்கள் பலவும் இன்று உலக மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு வாசிக்கப்படுகின்றன - நடிக்கப்படுகின்றன. தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கன்று.

வெனிஸ் நகர வணிகன், லூசியஸ் சீசர், ஹெம்லட் - டென்மார்க் இளவரசன், ரோமியோ அன்யூலியற் போன்ற நாடகங்கள் பிரசித்தமானவை.

இந்த அளவில் உலகப் புகழும் மதிப்பும் பெற்ற ஒரு கவிஞன் - அல்லது நாடக ஆசிரியன் இதுவரை வேறு எவரும் எந்த மொழியிலும் பிறந்திருந்ததாகத் தெரியவில்லை. அப்பெருங் கவிஞனைப்பற்றி நமது வாசகர்களாகிய இளைஞர்களும் ஓரளவு அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தக் கட்டுரைத் தொடரை வழங்குகின்றோம்.

ஷேக்ஸ்பியர் பிறந்து வளர்ந்த ஊர் ஸ்ராற்போர்ட் - ஒன் - அவொன் (Strat ford- on - Avon) என்பதாகும். இங்கிலாந்தின் மத்திய பகுதியில் இந்தப் பழம்பெரும் கிராமம் அமைந்துள்ளது. இங்கிலாந்து முழுவதிலுமே இவ்வளவு அழகான கிராமிய காட்சிகளைக் கொண்ட மகிழ்ச்சிகரமான ஊர் வேறெதுவும் இருக்க முடியாது என்று அங்கு சென்று வந்தவர்கள் கூறுகிறார்கள்.

சிற்றாறுகளும் பழைய நகரங்களும் விசாலமான வீதிகளும் கொண்ட பிரதேசத்தில் இந்த சிறு கிராமம் அமைந்துள்ளது. மதுபானம் வடிக்கும் தொழிலும், செங்கல் தயாரிக்கும் - தொழிலும் மட்டுமே அங்கு பெரிய தொழில்களாக அந்தக் காலத்தில் இருந்துள்ளன. இருந்தாலும் வருடம் தோறும் இந்தக் கிராமத்துக்கு உலகின் நாகரிகம் படைத்த நாடுகளிலிருந்து 43,000 பேருக்கும் அதிகமானோர் வருகை தருகிறார்கள்.

இவர்களின் வருகை எதற்காக என்று நினைக்கின்றீர்கள்?

உலக மேதையான ஒரு கவிஞனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே இவ்வாறு நூற்றுக்கணக்கான மக்கள் - அறிஞர் பெருமக்கள் ஸ்ட்ராட்போர்ட் - ஒன் - அவோனுக்கு வருகை தருகிறார்கள்.


ஸ்ட்ராட்போர்ட் ஷேக்ஸ்பியரின் நகரம் - அங்குதான்

ரம்யன்



அவர் பிறந்தார், வளர்ந்தார், கல்வி கற்றார், இளமைத் துடிப்புடன் அவ்வூரின் இயற்கை வனப்புகளில் எல்லாம் தன்னைபறிகொடுத்து நின்றார் - தன்னைவிட வயதில் கூடிய பெண்ணைக் காதலித்து மணந்தார் - இறுதிகாலத்தில் நகரவாழ்க்கையிலிருந்து விடைபெற்றுத்திரும்பி மீண்டும் அங்கேயே அமைதியாக காலம் கழித்தார் - கடைசி மூச்சையும் அங்குதான் அவர் விடுத்தார் - அவரது உடல் அங்குள்ள தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

ஸ்ட்ராட் போர்டில் அங்குள்ள ரயில் நிலையத்திலிருந்து சில நூறுயார் தூரம் சென்றால் அங்கொரு திறந்த வெளி



இருக்கிறது. ஷேக்ஸ்பியர் காலத்தில் இங்குதான் கால்நடைச் சந்தை இடம் பெற்றது. இந்த இடத்தின் மத்தியில் ஒரு நவீன நீர் ஊற்றுக் காணப்படும். ஷேக்ஸ்பியரின் நினைவாக அமெரிக்க பிரஜை ஒருவரால் வழங்கப்பட்டது அது. அங்கோர் மூலையில் ''ஷேக்ஸ்பியரின் வீட்டை நோக்கி...'' என்று எழுதப் பட்டிருக்கும். அதன் வழியே சென்றால் ஷேக்ஸ்பியர் பிறந்து வாழ்ந்து மறைந்த இல்லம் புலப்படும்.

இந்த வீடு இப்பொழுது பெரிதும் புனரமைக்கப்பட்டுவிட்டது. என்றாலும் 16 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த மனிதவாழ்வின் தன்மையை எடுத்துக் காட்டும் அடையாளங்கள் பலவும் அங்கு தென்படுவதாய் உள்ளன.

இந்த வீட்டை ஷேக்ஸ்பியரின் தந்தை வாங்கிய போது அங்கு இரண்டு வீடுகளும் ஒரு பூங்காவும் இருந்தனவாம். அதனை ஒரே வீடாக இணைத்து இடது பக்கத்தை குடியிருப்புக்கும், வலது பக்கத்தைத் தமது வணிகத் தொழிலை நடத்துவதற்கும் பயன்படுத்தினாராம்.கோதுமை, கம்பளி நூல், பாற்கட்டி, இறைச்சி, மிருகத் தோல் மற்றும் பாடம் செய்த தோல் வகைகளில் அவர் பெரும் வணிகராகத் திகழ்ந்துள்ளார்.

இந்த வீட்டில்தான் 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி மகாகவி ஷேக்ஸ்பியர் அவதரித்தார். இது ஒருமிக எளிமையான வீடு. ஆனால் அப்பகுதியில் இருக்கும் வேறு எந்த ஒரு கட்டடமும் இந்த விதமாக மனிதர்களின் கௌரவத்துக்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டுக்கும் உரியதாக இல்லை.

உலகின் பல பாகங்களில் இருந்தும் மகாகவிகள், மேதைகள், எழுத்தாளர்கள் என்று ஆயிரக் கணக்கான புகழ் பூத்த மனிதர்கள் கடந்த காலங்களில் இங்கு விஜயம் செய்து தம்மைக் கௌரவப்படுத்தக் கொண்டுள்ளார்கள். அந்த மகாகவியை வழிபட்டுத் திரும்பியிருக் கின்றார்கள், இந்த வீட்டின் ஷேக்ஸ்பியர் பிறந்த அறையின்



அவர்கள் முழுவதிலும் மட்டுமல்ல வீட்டின் பல இடங்களிலும் அங்கு வந்து சென்றுள்ள மகா புருஷர்களின் கையெழுத்துக்கள் இருக்கக் காணலாம்.

அக்கட்டடம் இப்போது அரும்பொருள் காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது. ஷேக்ஸ்பியரின் நினைவுச் சின்னங்கள், நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், ஆவணங்கள், அவர் பாவித்த பொருள்கள் என பல்வேறு பொருள்களும் காடசிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ் வீட்டின் கீழ் மாடியில் ஓக் மரத்திலான ஒரு மேசை (Desk) இருக்கிறது. இந்த மேசையின் அருகில் அமர்ந்து தான் ஷேக்ஸ்பியர் தமது பாடசாலை பாடப் பயிற்சிகளை எழுதியிருப்பார் என்று கருதப்படுகிறது. அவ்வூர் (பிரீ கிராமர் ஸ்கூஸ்) பாடசாலையில் இருந்து இந்த மேசை கொண்டவரப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

இன்னொரு இடத்தில் ஷேக்ஸ்பியரின் முத்திரை மோதிரம் (Signet ring) காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதில் W.S என்ற பெயரின் முன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர் வழக்கமாக இருந்து படித்த கதிரையும் வைக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் அவரது உடை வாளையும் காணலாம்.

வீட்டின் பின்புறத்தில் சிறு பூந்தோட்டமொன்று மிக அழகாகப் பேணப்பட்டு வருகின்றது. இத்தோட்டத்தில் ஷேக்ஸ்பியர் மிகவும் விரும்பிய மற்றும் தமது நாடகங்களில் வர்ணித்த மலர்ச் செடிகளும் மரங்களும் காணப்படுகின்றன. அருகில் தேவாலய வீதியில் அவருடைய பாடசாலை காணப்படுகின்றது. அந்தக் கட்டடத்தின் பின்பக்கத்தில் ஷேக்ஸ்பியர் அமர்ந்து படித்த அறை அதே விதத்தில் பேணப்பட்டு வருகின்றது.

கிராமர் ஸ்கூஸ் (இலக்கண பாடசாலை) மாணவர்கள் அன்று கல்வி பயின்ற அதே ஒக் மரங்களின் நிழலில் இருந்து இன்றும் பயில்கின்றார்கள். அவரது நினைவை இன்றும் கொண்டாடுகின்றார்கள். ஒவ்வொரு ஆண்டும் அவருடைய நாடகங்களில் ஒன்றை அரங்கேற்றவும் செய்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவரான ஆன்ஹதாவே (Anne Hathaway), அம்மையாரின் இல்லம் சிறிது தூரத்தில் ஹொட்டரி என்ற பகுதியில் இருக்கின்றது. சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையிலேயே அந்த வீட்டின் சில பகுதிகள் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. பழங்காலத்துப் பூக்களைக் கொண்ட சிறுபூங்கா ஒன்று முன்னால் தென்படுகின்றது.

இந்த வீட்டில் ஷேக்ஸ்பியரும் அவர் மனைவியும் பிள்ளைகளும் பாவித்த பல பொருள் பேணப்பட்டு வருகின்றன. இருவரும் அமர்ந்து உரையாடிய இடமும் காணப்படுகின்றது. ஷேக்ஸ்பியர் பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்கியபோது இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து குடும்பத்துடன் ஓய்வைக் கழித்து விட்டுச் சென்றதாகக் கருதப்படுகின்றது.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மக்களின் கடற்பயணம்

நெடுந்தீவு மக்களின் கடற்பயணம் குறித்து உதயனில் "நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்ற தலைப்பில் வெளியான விமர்சனக் கட்டுரை தொடர்பாக-

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அனுப்பிய கடிதமும்-

கட்டுரையை எழுதியவரின் தகவல்களும் நிலைப்பாடும் இங்கே தரப்படுகின்றன.

மக்கள் நலன்கருதியே கட்டுரை வெளியிடப்பட்டது என்பதனையும் எவருக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்குடன் அது பிரசுரிக்கப்படவில்லை என்பதனையும் சம்பந்தப்பட்ட சங்கத்தினருக்கும் அப்பகுதிப் பயணிகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இரு தரப்புக்களினதும் விளக்கம் மற்றும் நிலைப்பாடுகளை வாசித்து, வாசகர்களே எது சரி, எது தப்பு என்பதனை நிர்ணயித்துக் கொள்ளட்டும்.

(ஆ-ர்)

10.04.2010 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் "நம்பி"யால் "நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாக, நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

நெடுந்தீவு மக்களின் கடல் பிரயாணத்திற்கென சேவையில் ஈடுபட்டு வந்த அரச படகான "குமுதினி" பழுதடைந்த தினம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அவர்களினால் நெடுந்தீவில் உள்ள தனியார் படகு உரிமையாளர்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான படகுப்பணியர்ளர்கள், முகாமையாளர்கள், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான படகுப் பணியாளர்கள், முகாமையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு குமுதினிப் படகு திருத்தம் செய்யப்பட்டு சேவையில் ஈடுபடும் காலம் வரை பயணிகள் படகுச் சேவையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைவாக நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கான படகு மட்டுமே பயணிகள் சேவையினை நடத்தி வந்தது.

இப் படகானது பயணிகள் சேவையினை மட்டும் அல்லாது நெடுந்தீவு மக்களுக்கான உணவுப் பொருள்கள், நிவாரணப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், எரிபொருள்கள், மின்சார சபைக்குச் சொந்தமான எரிபொருள்கள் ஏற்றுவது என்ற பல தரப்பட்ட சேவைகளையும் மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இவ் வேளையில் தனியார் படகின் உரிமையாளர் தனது படகு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பயணிகள் சேவையை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு உள்ளது என்றும் எனவே தானும் தமது படகினைச் சேவையில் ஈடுபடுத்தச் சம்மதம் தெரிவித்தமையால் ஒன்று விட்ட நாள்களில் தமது சேவையைத் தொடர்ந்தது. 07.04.2010 ஆம் திகதியன்று தனியார் படகின் சேவை முறையாகும். இதற்கமைவாக இப்படகு சேவையில் ஈடுபட்டது.

அளவுக்கு மிஞ்சிய பயணிகள் மற்றும் பொருள்கள் வருமிடத்து சேவையில் ஈடுபடும் படகில் அளவோடு ஏற்றிய பின்னர் எஞ்சிய பயணிகளையும் பொருள்களையும் ஏனைய படகில் ஏற்றிச் செல்வது வழமையானது. சம்பவதினம் போரூட் நிறுவனத்திற்கு பொருள்கள் ஏற்றுவதற்கு வாடகைக்கு அமர்த் தப்பட்ட 'சமுத்திர தேவா' படகு குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு இருந்தது. இவ்வேளையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் அளவுக்கு மிஞ்சிய பயணிகளும் பொருள்களும் காணப்பட்டமையால் சங்கப்படகின் பணியாளர்கள் தனியார் படகின் உரிமையாளரிடம் குறிப்பிட்ட அளவு பயணிகளையும் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு செல்லுமாறு கோரியபோது அனைத்துப் பொருள்களையும் பயணிகளையும் தாமே தம் படகில் ஏற்றிச் செல்வார் எனவும் சங்கப் படகில் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்க மாட்டார் எனவும் கூறியதனால் சங்கப்படகின் பணியாளர்கள் போரூட் நிறுவ னத்திற்குரிய பொருள்களை ஏற்றிக் கொண்டு நெடுந்தீவுக்குத் திரும்பியுள்ளார்கள்.

ஆனால் தாங்கள் இச் செய்திக்கு மாறாக எழுதியுள்ளதுடன் சங்கத்தின் நிர்வாகத்தினரையும் சங்கப் பணியாளர்களையும் குறைகூறுவது போல் செய்தி வெளியிட்டமையானது சங்கத்தின் மேல் அபகீர்த்தி ஏற்படுத்துவது போன்று உள்ளது. அத்துடன் மக்கள் மனதில் தப்பான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்துகின்றது.

**குறிப்பு:**

இச்செய்தியை வழங்கியிருந்த நம்பி பின்வரும் விளக்கத்தைத் தருகின்றார்:-

கடந்த 10 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான "நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்ற கட்டுரை தொடர்பாக -

போரூட் நிறுவனத்தின் பொருள்களே ஏற்றிச் செல்வதற்காக கடந்த 7ஆம் திகதி பிற்பகலில் குறிகாட்டுவான் வந்த 'சமுத்திர தேவா' படகில் பொருள்களையும் பயணிகளையும் தாங்கள் ஏற்றிச் செல்வதாகக் கூறியதாகவும் பின்னர் பொருள்களும் பயணிகளும் காணப்படவில்லை எனவும் கூட்டுறவுச் சங்கக் கடிதத்தில் கூறுப்பட்டிருக்கிறது.

'சமுத்திரதேவா' குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டதும் பொது மக்கள் சிலர் மிகக் கூடுதலான பயணிகள் நிற்பதால் சங்கப் படகில் ஏற்றிச் செல்லுமாறு சம்பந்தப்பட்ட படகு ஊழியர்களிடம் கேட்டபோது அவர்கள் தாங்கள் போரூட் பொருள்கள் ஏற்ற வந்ததாகவும் பயணிகளை ஏற்ற முடியாது எனவும், போரூட் பொருள்கள் வந்ததும் தான் புறப்படுவோம் எனவும் தெரிவித்து துறைமுகத்தில் இருந்த படகை வேறு ஒரு பகுதிக்குக் கொண்டு சென்று நங்கூரமிட்டனர்.

பின்னர் பயணிகள் படகை விட்டால் பிரயாணம் செய்ய முடியாது போகும் என்பதால் ஏற்கனவே பயணிகள் படகில் இருந்தவர்களுடன் துறைமுகத்தில் நின்ற பயணிகள் தமது பொருள்களுடன் பயணிகள் படகில் ஏறிக் கொண்டனர். அதன் பின்னர் துறைமுகத்தில் பயணிகளையும் பொருள்களையும் காணவில்லை என்று கூறினால் ஏற்புடையதாகாது.

நெடுந்தீவு துறைமுகத்தில் படகிற்காக நீண்ட நேரம் காத்திருந்தும் அங்குள்ள சங்கப் படகுகள் பல தடவைகளில் மக்களுக்கு உதவ முன்வரவில்லை என்பதையும் பயணிகளும் படை அதிகாரிகளும் எடுக்கும் முயற்சிகளின் பின்னரே ஏதாவது ஒரு படகு பயணிகளை ஏற்றிக்கொள்ள வருகின்றது என்பதும் அனைத்து மக்களும் அறியாததல்ல.

அடுத்து சங்கப் படகுகள் என்பது தனியாக ப.நோ.கூ சங்கத்திற்கு மட்டும் பொருத்தமானதல்ல கடற்றொழிலாளர் சங்கத்திற்கும் அது பொருந்தும். இந்த வகையில் இரு தரப்பாரது படகுகளுமே மக்களுக்கான சேவையை நடத்த முன்வரவில்லை என்பதே சுட்டிக்காட்டப்பட்டது. தவிர சங்கத்திற்கு அவப்பெயரை உண்டுபண்ண வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. நெடுந்தீவு மக்களுக்கு உரிய சேவை கிடைக்க வேண்டும். அதற்கு சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதே மேற்படி தகவல் வெளிப்படுத்தப்பட்டதன் நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்**



பயணங்களால் அலைச்சல்கள், செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம். எந்த விடயத்திலும் மனம் தளராமல் பிடிவாதமாக செயற்படுவீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். எதிர்பாராத பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் உண்டு.

**இடபம்**



அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலைமை காணப்படும். புதிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உங்கள் வீட்டிற்கே இதுவரை வராத ஒருவர் இன்று திடீரென வரலாம். சிலர் உங்களை வெளியிடங்களில் சந்தித்து உதவி கேட்கலாம்.

**மிதுனம்**



துன்பங்கள் விலகி ஓடும் நாள். தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று கூடுவர். தாய் வழியில் உருவான தொல்லைகள் நீங்கி மகிழ்ச்சி அடைவீர்கள். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு இப்போது பதில் உதவி செய்வீர்கள்.

**கடகம்**



தடை, தாமதங்களுக்கு பின்னர் திட்டமிட்ட காரியங்கள் முடியும். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணங்களை இன்று மேற்கொள்ளலாம். மறைமுக போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். பெண்கள் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டியது அவசியம். மலைபோல் வந்த பிரச்சினை பனி போல விலகி விடும்.

**சிங்கம்**



உங்களை பெரிய மனிதராக நினைத்து சிலர் உதவி கேட்கலாம். புத்திசாலித்தனம், சாமர்த்தியம் வெளிப்படும். சக ஊழியர்கள் வழியில் கடன் உதவி செய்வீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு உண்டு. தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். காலையில் செய்ய மறந்த வேலை ஒன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**



மறதியால் அவதிகளுக்கு ஆட்படலாம். வரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். குடும்பத்தினருடன் கோயில்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். வேலையாட்கள் திடீர் விடுப்பில் சிரமங்களுக்கு ஆளாகலாம்.

**துலாம்**



பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நாளைய சில வேலைகளை கருத்தில் கொண்டு இன்றே முன்னேற்பாடுகள் செய்வீர்கள். உறவினர்களை நம்பி ஒப்படைத்த சில வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**விருச்சிகம்**



தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். மனைவி வழி உறவினர்கள் சிலர் வீட்டிற்கு வரலாம். பல நாள்களாக முயற்சித்தும் நடக்காமல் இருந்த காரியம் ஒன்று இன்று நல்ல விதமாக நடக்கலாம். நீங்கள் எதிர்பார்த்த போது கிடைக்காத ஒன்று, இன்று எதிர்பாராமலேயே கிடைக்கலாம். ஆனந்தமான நாள்.

**தனுசு**



இரண்டு நாள்களாக தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று நடக்கலாம். பிள்ளைகள் கல்வி விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் சில செயற்பாடுகளால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். கூட்டுத் தொழிலில் கூடுதல் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகும். சிலரின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம்.

**மகரம்**



புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டிய நாள். எப்படியும் நடந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று நடக்காமல் போகலாம். பஸ் பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். சபலங்களால் பிரச்சினைகள், சிரமங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத விரயச் செலவுகளைச் சந்திக்கலாம்.

**கும்பம்**



நேரம் பார்த்து சில வேலைகளை சாமர்த்தியமாக முடிப்பீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கலாம். குடும்பத்தினருடன் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லலாம். அயலார் விவகாரங்களில் மூக்கை நுழைக்காமல் இருப்பது நல்லது.

**மீனம்**



கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். பெண்கள் அல்லது ஆண்கள் வழியில் நல்ல உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகள் ஓய்வின்றி பரபரப்பாக செயற்படலாம். வியாபாரிகள் இருப்பு பொருள்கள் மூலம் கூடுதல் லாபம் பெறலாம். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத் தமிழர்களின் கடந்த ஐம்பது ஆண்டு கால சட்ட விடயங்களிலும் தமிழ்த் தலைவர்களுடனும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டு செயலாற்றிய சட்ட விற்பன்னர் ஸி.வி.விவேகானந்தன்.**

**ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவை நோக்கி அவர் எழுப்பும் கேள்விகணைகளில் அர்த்தம் நிறைந்த பல விடயங்கள் பொதிந்துள்ளன. அடுத்த சில தினங்கள் இந்தக் கட்டுரை தொடர் தொடர்ந்து பிரசுரமாகும். (ஆ-ர்)**

# பாரத தேசத்துக்கு ஒரு பகிரங்க மடல்....!

சிரேஷ்ட சட்டத்தரணி
ஸி.வி.விவேகானந்தன்

டில்லி பேரரசே!

பத்து வருடங்களுக்குள் வல்லரசாக வருவதற்காக கனாக்காணும் இந்திய குடியரசே!

உனக்கொரு திறந்த மடல் எழுதுகிறேன். 'தேரா பேரரசே! செப்புவது கேள்!' என்ற கண்ணகியின் குமுறல் அல்ல இது. யார் சொல் கேட்டு எங்களை அழித்தாய் என்று உன் மீது நான் குற்றம் சுமத்தவில்லை. கலிங்கத்தை அழித்த அசோகனுக்கு கலிங்கத்தின் அழிவு, பாடம் புகட்டவில்லையா? அவ்வாறு நான் கூறவில்லை. அடுத்துக் கெடுத்த கதையின் துயரத்தால் துடிக்கின்றோம். அதன் கண்ணீரின் கதையை வடிக்கின்றேன்.



'நீ யார்?' என்று நீ என்னைப் பார்த்துக் கேட்பது எனக்குக் கேட்கின்றது. இலங்கை மட்டுதான் எனது தாய் நாடு. வேறு தாய் நாடு எனக்கில்லை. இலங்கை வீழ்வதை நான் விரும்பவில்லை. இலங்கைத் தமிழர் நாதியற்றவர்களாக ஆக்கப்படுவது கண்டு துயர் அடைகின்றேன். அதனால் இந்த திறந்த மடல்.

சரி, சுற்றி வளைக்காமல் விடயத்திற்கு வருகின்றேன். இலங்கைத் தமிழரின் நன்மைக்காக ஓர் உடன்படிக்கை கைச்சாத்திட்டீர்கள். அதுதான் 1987, ஜூலை மாதம் 29 ஆம் திகதி கையெழுத்திட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்படிக்கை. 'இந்தோ - சிறிலங்கா உடன்படிக்கை' (INDO - SRI LANKA AGREE MENT) என்று அது கூறப்படுகின்றது.

தமிழ் நாட்டில் பேசப்படும் மொழியில் கூறப்போனால், அந்த உடன்படிக்கையில் கூறப்பட்டவைக்கு நீங்களே 'அண்ட றைட்டஸ்' (UNDER WRITERS) ஆனால், நீங்கள் 'அண்டரேக்கேஸ்' (UNDER TAKERS) ஆக மாறுவீர்கள் என்று எவ்விடத்திலும் அந்த உடன்படிக்கையில் கூறப்படவே இல்லை.

அந்த உடன்படிக்கையின் பிரிவு 2:14 என்ன கூறுகின்றது? The Government of India will underwrite and guarantee the resolutions and co-operate in the implementation of these proposals "இந்திய அரசாங்கம் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ளது. அத்தோடு உத்தரவாதமும் அளிக்கின்றது. இந்த பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பும் வழங்குகின்றது" எனக் கூறப்பட்டுள்ளது.

உடன்படிக்கையின் பிரிவு 2:14 பிரகாரம் நீங்கள் 'அண்ட றைட்' செய்வதாகக் கூறியுள்ளீர்கள். உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுக் கேளுங்கள். உண்மையில் நீங்கள் 'அண்ட றைட்' செய்தீர்களா? உண்மையை இப்பொழுதாவது கூறுவீர்களா?

உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு சட்டங்கள் இலங்கை அரசாங்கத்தால் இயற்றப்பட்டன. ஒன்று - 13 ஆவது அரசமைப்புத் திருத்தம். மற்றது - மாகாணசபை சட்டம்.

அவ்விரு சட்டங்களுக்கான சட்ட மூலங்கள் (BILLS) நாடாளுமன்றத்தில் சொற்ப நாட்களில் சமர்ப்பிக்கப்பட்டன. உடன்படிக்கை கையெழுத்தான சில நாட்களுக்குள் அவசர அவ்சரமாக இவ்விரு சட்ட மூலங்களும் கொண்டுவரப்பட்டன. ஏன் அவ்வாறு நடைபெற்றது? இந்திய அரசாங்கத்திற்கு தெரிவிக்காமல் சட்ட மூலங்கள் கொண்டுவரப் பட்டனவா? அல்லது, இந்திய அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் கொண்டு வரப்பட்டனவா? எது உண்மை? டில்லிப் பேரரசே இப்போதாவது உண்மையைக் கூறுவாயா?

உடன்படிக்கை கைச்சாத்தான ஐந்து நாள்களுக்குள், 03.08.1987 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதினார். அக் கடிதத்தை பிரதமரோ அல்லது உயர் அதிகாரிகளோ பார்த்தார்களா? பார்க்கவே இல்லை. பதில் கொடுக்கவே இல்லை. இப்போது அக்கடிதத்தின் சுருக்கத்தை அறிவீர். 'என் அருமைப் பிரதமரே!' என விளித்து அவர் எழுதுகின்றார்.

'அதிகாரப் பகிர்வுத் திட்டத்தில் சில முக்கிய விடயங்கள் இன்னும் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். கைச் சாத்திட்ட உடன்படிக்கையிலும் அவ்விடயம் பற்றி குறிக்கப்பட்டுள்ளது' - என்று அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அக்கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பின்வருமாறு விவரிக்கின்றார்.

'ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அவரது அமைச்சர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் 1986 ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் கலத்தாலோசனை செய்தனர். அவ்வேளையில், இலங்கை அரசாங்கத்தால், 1986 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4 ஆம், 23 ஆம் திகதிகளில் புதுடில்லிக்கு நகல் பிரேரணைகள் அனுப்பப்பட்டன. அந்நகல் பிரேரணைகளில் விவரிக்கப்பட்ட கீழ் கண்ட நிலைப்பாடுகளை எட்டியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



1. சில விடங்கள் இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

2. மேலே குறித்த நகல் பிரேரணைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில விடயங்கள் தீர்விற்காக இன்னும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

3. மற்றைய [illegible] விடயங்கள் தீர்மானிக்க முடியாததினால், சில விடயங்களான நிதி, மாகாண பொதுச் சேவை (PROVINCIAL PUBLIC SERVICE) போன்றவை தீர்மானிக்கப்படவில்லை.

4. இந்திய வெளியுறவு அமைச்சருக்கு ஒக்டோபர் 4 ஆம் திகதி கொண்ட கடிதம் மூலம் தெரிவிக்கப் பட்ட சில விடயங்கள் கதைக்கப்படவேயில்லை.

(a) திருகோணமலைத் துறைமுகம்,

(b) படையில், அரசாங்க சேவையில் தமிழர்களைச் சேர்ப்பது

(c)மத்திய அரசின் கீழ் தமிழர்களின் தொழில் வாய்ப்பு

(d) மத்திய அரசிலுள்ள மற்றைய விடயங்கள் - ஆகியவை பற்றி எதுவும் கதைத்து முடிவெடுக்கப்படவில்லை.

உடன்படிக்கையை முழுமையாக செயல்படுத்துவதற்கு நியாயமான அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இன்னும் தீர்க்கப்படாத விடயங்கள் யாவும் தீர்க்கப்பட வேண்டும் என கூட்டணி செயலாளர் நாயகம் அமரர் அமிர்தலிங்கம் உருக்கமான வேண்டு கோளை 03.08.1987 லேயே விடுத்தார். அவரின் வேண்டுகோளை நிராகரித்து விட்டீர்கள். தமிழர்களை காப்பாற்ற வந்ததாக பறைசாற்றிய டெல்கி பேரரசே ஏன் இந்த நிலைப்பாட்டை எடுத்தாய்? அதிகாரப் பகிர்விற்காகவே உடன்படிக்கை எழுதப்பட்டது என்று கூறிய டில்லிப் பேரரசே ஏன் இந்த இரட்டை வேடம்? இது அரைகுறைத் தீர்வாகும் என்று சொல்லாமல் சொல்கின்றாரே அண்ணன் அமிர்தலிங்கம், ஏன் அவரது கடிதத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை? அரைகுறைத் தீர்வை? ஏன் திணித்தீர்கள்?

இந்திய குடியரசே! இது மட்டுமா நீங்கள் செய்தீர்கள்? இன்னுமோரு விடயத்தை உடன்படிக்கையில் வெளிப்படையாகக் கூறியுள்ளீர் கள். கூறியவற்றை 'அண்டறைட்' செய்துள்ளீர்கள். ஆனால், அதனை நீர் மேல் எழுத்துப் போல் அழிய விட்டீர்கள். ஏன் அவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பதனை இப்போழுதாவது கூறுவீர்கள்?

உடன்படிக்கையின் பிரிவு 2:15 என்ன கூறுகின்றது? இன்னுமொரு விடயம் என்றனே. நீர் மேல் எழுத்துப் போல அழியவிட்ட விடயம் தான்.

04.08.1986 தொடக்கம் 19.12.1986 வரையும் கலாந்தாலோசிக்கப்பட்டு, தீர்மானம் எடுக்காத மிகுதிப் பிரேரணைகள் முடிவெடுக்கப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்வதென்ற நிபத்தனைக்கமைய இப்பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படு கின்றன. உடன்படிக்கை கையெழுத்திட்ட ஆறு கிழமைக்குள் மேற்குறித்த காலத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட ஆலோசனை களுக்கு ஏற்ப இந்தியாவும் இலங்கையும் தீர்க்கமான முடிவை எட்டுவார்கள். இலங்கை அரசாங்கம் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தனது நேரடி ஒத்துழைப்பை வழங்கும். மேற்குறித்த காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப் படுத்துவதற்கமைவாகவே இந்திய ஒத்துழைப்பும் இருக்கும்.



2:15 - " These proposals are also conditional to an acceptance of the proposals negotiated from 4.5. 1986 to 19.12.1986. Residual matters not finalised during the above negotiations shall be resolved between India and Sri Lanka within a period of six weeks of signing this agreement. These Pro posals are also conditional to the Goverment of India co-operating directly with the Govenment of Sri Lanka in their implementation"

04.05.1986 தொடக்கம் 19.12. 1986 வரையுள்ள காலப்பகுதிக்குள் கலந்து ஆலோசித்து தீர்வு எடுக்க முடியாமல் போன விடயங்களுக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்ட ஆறு கிழமைக்குள் தீர்வு எட்டப்படும் என்று கூறுகின்றீர்கள். ஆறு கிழமைக்குள் தீர்க்கமான தீர்வு எட்டிய பின் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கலாம் தானே? அமரர் அமிர்தலிங்கம் 3.8.1987 ஆம் திகதி கொண்ட கடிதம் மூலம் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின் உடன்படிக்கை எழுதப் பட்டிருக்கலாம் தானே? ஏன் டில்லிக்கு இந்த அவசரம்? ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறுக்கக் கூடாதா?

அதுசரி, உடன்படிக்கையின் பிரிவு 2:15 இல் கூறியவாறு 04.05. 1986 தொடக்கம் 19.12.1986 வரையும் கலந்தாலோசிக்கப்பட்ட பிரேரணைகளுக்கு குறிக்கப்பட்ட ஆறு கிழமைகளுக்குள் ஏதாவது தீர்வு எடுக்கப்பட்டதா? தொடர்ந்தும் ஆலோசிக் கப்பட்டதா? உடன்படிக்கையில் கூறப்பட்ட ஆறு கிழமை 13.09.1987 இல் முடிவிற்கு வருகின்றது. 13.09.1987 வரையும் ஒருவித செயற்பாடும் நடைபெற வில்லை. அதற்குப் பிண்பும் டில்லி மௌனம் சாதித்தது. அது ஏன்?

அண்ணன் அமிர்தலிங்கத்தின் 03.08.1987 திகதி கொண்ட கடிதத்தில் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் சேர்த்தீர்களா? உடன்படிக்கையின் பிரிவு 2: 15 கூறியவாறு 13 ஆவது திருத்ததில் அவை சேர்க்கப்பட்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாகம் மூடப்பட்டது

திருமலை, ஏப். 24

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் கடந்த புதன்கிழமை மாலை 4 மணி முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது என வளாகத்தின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று தமது வளாகத்தின் கோணேசர்புரியில் அமைந்துள்ள விரிவுரை மண்டபங்கள், மற்றும் திருகோணமலை நகரில் அமைந்துள்ள ஆண்கள் விடுதி ஆகியவற்றில் உள்ள அடிப்படை வசதிக்குறைவுகளைச் சீர்செய்து தருமாறு மாணவர்கள் வளர்கத்தின் நிர்வாகி என்.லோகேஸ்வரன் மற்றும் பதிவாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோருடன் பேச்சுகளை நடத்தினர்.

அப்போது பதிவாளருக்கும், மாணவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இதனையடுத்து, செவ்வாய்க்கிழமை முதல் மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காததையடுத்து மாணவர்கள் கடந்த புதன்கிழமை திருகோணமலைக் கடற்கரை முன்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு 7 தினங்களுக்கு முன்பதாக பொது இடங்களில் கூட்டம் நடத்துவது, ஆர்ப்பாட்டம் செய்வது என்பன தடைசெய்யப்பட்டள்ளது. எனவே, மாணவர்கள் அமைதியாகக் கலைந்து செல்ல வேண்டும் என்று பொலிஸார் கூறியதை அடுத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு மாணவர் விடுதிக்குத் திரும்பினர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் பல்கலைக்கழகம் மற்றும் ஆண்கள் விடுதி என்பன மூடப்படுகின்றன என நிர்வாகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

மேற்படி நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகத் தமது மாணவர் சங்கத் தலைவர் புத்திக மற்றும் உப தலைவர் சித்தக்க ஆகியோர் நேற்று முன்தினம் மாலை பல்கலைக்குழு மானியங்கள் ஆணைக்குவைச் சந்திக்க கொழும்புக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு துறைகளையும், நான்கு திணைக்களங்களையும் பிரிவுகளாகக் கொண்ட இந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் தென்பகுதி, மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், கிழக்குப் பகுதியைச் சேர்ந்த12இற்கும் மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதேவேளை, வளாகம் திடிரென மூடப்பட்டதால், அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, கண்டி, அனுராதபுரம், அம்பாறை, பொல நறுவை, மன்னார், நுவரெலியா, யாழ்ப்பாணம், புத்தளம் போன்ற தூரப் பிரதேச மாணவர்கள் குறிப்பாக பெண் மாணவிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு மாகாணத்தில் தொடர்கின்றது உஷ்ணம்

கொழும்பு, ஏப். 24

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் தொடர்ந்தும் கடும் வெப்பமான சூழல் நிலவி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பகல் வேளைகளில் சூரியன் சுட்டெரிப்பதோடு, இரவு வேளைகளிலும் உஷ்ணமான காலநிலை நிலவுகின்றது எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இந்த வெப்பக் காலநிலை தொடர்ந்து வருவதால், அங்கு மக்கள் உட்படத் தொழிலாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் பகல் வேளைகளில் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியப் பெண்கள் சங்கப் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம்

முதற் தடவையாக யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில், இந்தியாவில் 15இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட இந்திய சுயதொழில் பெண்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்.

'சேவாலங்கா' நிறுவனத்துடன், கிழக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் இணைந்து இந்தப் பிரதிநிதிகள் விஜயத்திற்குப் பங்களிப்பு வழங்கியிருந்தன்.

மட்டு. மாவட்டத்திற்கு விஜயம் செய்த இந்தக் குழுவினர் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனை அவரது மட்டக்களப்பு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இந்தியச் சுயதொழில் பெண்கள் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி உமாதேவி சுவாமிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

முதலமைச்சரின் மீள்குடியேற்றப் பணிப்பாளர் அ.செல்வேந்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசாந்தன், ஊடகச் செயலாளர் ஏ.தேவர்ாஜன் உட்படக் கிழக்கு மாகாணசபை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தியப் பெண்கள் பிரதிநிதிகள் தரப்பில், இந்தியச் சுயதொழில் பெண்கள் சங்கத்தின் இணைப்பாளர்களான திருமதி மேகாதேவி, வீனா சர்மா உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

யுத்தம் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த விதவைகளின் பிரச்சினைகள், பெண்களின் சுயதொழில் வாய்ப்பு, பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப நிலைவரம் குறித்தும் முதலமைச்சர் சந்திரகாந்தன் இந்தியப் பிரதிநிதிகள் குழுவிடம் எடுத்துக் கூறினார். அத்துடன், மேலும் பல இடங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மு.காங்கிரஸ் ஆதரவாளரின் மோட்டார் சைக்கிள் எரிப்பு

அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இனந்தெரியாதவர்களால் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

ஐ.எல்.சம்சுதீன் என்பவரது மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிவதைக்கண்ட வீட்டிலுள்ளவர்கள் சத்தமிட்டதைத் தொடர்ந்து அயலவர்களால், தண்ணீர் ஊற்றி தீ அணைக்கப்பட்டது. எனினும், மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரான இவரது கார் மீது ஒரு தடவை தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது. பின்னர் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டன. இது மூன்றாவது தாக்குதல் சம்பவமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரத தேசத்துக்கு...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னவா? மாகாணசபை சட்டத்தில் சேர்க்கப்பட்டனவா? இவற்றிற்கு தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்காமல், இலங்கை அரசாங்கம் மேற்கூறிய இரு சட்டமூலங்களையும் வெளியிட்டதை ஏன் இந்தியா அனுமதித் தது?

உடன்படிக்கையின் பிரிவு 2:15 இல் விவரிக்கப்பட்டவை உடன்படிக்கையின் ஒரு பகுதியும் பாகமுமாக அமைக்கப்பட்டுள்ளன. அவை யாவற்றையும் உடன்படிக்கை யிலிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. அது மட்டுமல்ல, அவைகள் யாவையும் நடைமுறைப் படுத்துவதற்கு இந்தியா 'அண்ட றைட்' செய்துள்ளது. அவ்வாறு உண்மை தெளிவாகத் தெரிகின்ற பொழுது, இந்தியாவிற்கு ஏனோ இந்த அசமந்த போக்கு? இந்தியக் குடியரசே நீயே எங்களை இவ்வாறு நசுக்கினால், நாங்கள் யாரிடம் முறைப்படுவது? உன்னைத் தவிர வேறு யார் உளர்? அதனால் தான் உனக்கு இந்த திறந்த மடல் எழுதுகின்றேன். பழிக்குப் பழி எடுத்து முடிந்தாயிற்று. இப்போழுதாவது சரியான திசைக்கு திரும்புவாயா? கலிங்கத்தை அழித்த அசோகன் சிந்தித்து திருந்தியது போல, இலங்கைத் தமிழரை, அப்பாவித் தமிழர் ஆயிரக் கணக்கில் அழித்தபின் உனது தவறை உணர்ந்து திருந்திக் கொண்டாயா?

இந்தியாதான் நேரு. நேருதான் இந்தியா. நேருவின் வழித் தோன்றல்களும் இதற்குள் அடங்குகின்றனர். இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாத செல்வங்கள். இந்தியாவின் தவப்புதல்வர்கள். அவர்களில் எவருக்கும் தீங்கு இழைத்தால் இந்திய மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார். சர்வதேசமும் அவர்கள் பக்கமே நிற்கும். இந்த உண்மையைப் பிரபாகரன் கவனத்திற்கு எடுக்க மறுத்து விட்டார். அதனால் விளைந்தது வினை.

அழுத்தத்தின் மேல் அழுத்தம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு கொடுக்கப்பட்டது. இந்திராகாந்தி அன்னையின் சிந்தனையிலிருந்து வேறுபட்டாலும், பிரதமர் ராஜீவ் காந்தி தொடராகக் கொடுத்த அழுத்தங்களால் தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனா உடன்படிக்கையில் 29.07.1987 இல் கைச்சாத்திட்டார். இந்த உண்மையையும் பிரபாகரன் ஏற்க மறுத்துவிட்டார்.

இலங்கை கடற்படைவீரரின் துவக் கடிபட்டு வீழ்ந்தெழுந்த பிரதமர் ராஜீவ் காந்திக்கு தீங்கு விளைவிக்கலாமா? விடுதலைப்புலிகளுக்கு தொடக்கத்தில் ஆதரவாக இருந்தார். விடுதலைப் புலிகளின் எதிர்மறை நடவடிக்கையில் பிரதமர் ராஜீவ் காந்தி விடுதலைப் புலிகளின் நடவடிக் கைகளுக்கெதிராகச் சிந்திக்கத் தொடங்கினார். தவறான கருத்துக்களை விலக்கிச் சரியான பாதைக்குச் சென்றிருக்கலாம். அதனை விடுதலைப் புலிகள் செய்யவில்லை. பிரதமர் பதவியை இழந்து சாதாரண எம்.பியாக இருந்த பொழுதும் அவர் மீது வைத்திருந்த வர்மத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்தனர். அதன் முடிவு ராஜீவ் காந்தி மரணித்தார். மரணித்த நிகழ்வுகள் வரலாறாகிவிட்டன. பழி வாங்கப்பட்டது. இந்தியாவிற்கான யுத்தத்தை இந்தியாவின் துணை கொண்டு இலங்கை முடித்தது. பிரபாகரனும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பூண்டோடு அழிக்கப்பட்டனர். அத்தோடு அப்பாவித் தமிழரும் அழிக்கப்பட்டனர்.

மதுரையை எரித்த கண்ணகி சில பகுதியினரை எரிக்காது விதிவிலக்குக் கொடுத்தார். வன்னி மக்கள் எல்லோரும் புலிகள் என்று நினைத்தீர்கள். கடைசி நாள் யுத்தத்தில் பெரும் அனர்த்தம் நடைபெற்றது எனச் செய்திகள் கசிந்து கொண்டிருக்கின்றன. உங்கள் பொறுப்பிலேயே நடந்து முடிந்தது யுத்தம். ஏன் அப்பாவித் தமிழரை காப்பாற்றத் தவறினீர்கள்? இலங்கைத் தமிழரை நடு வீதிக்கு கொண்டு வந்தீர்கள்? இப்பொழுது நாதியற்றவர்களாக ஆக்கிவிட்டீர்கள்.

இலங்கைத் தமிழர் என்ன செய்தார்கள்? இந்தியாதான் எங்கள் தாய் நாடு என்று பகிரங்கமாகவே சொல்கிறார் கள். செயற்பாடும் அவ்வாறே. ஆங்கிலேயர்தான் ஆஸ்திரேலியாவில் குடியேறிவர்கள். நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட குடியேற்றம். இங்கிலாந்தைத் தாய் நாடு என்று அவர்கள் சொல்வதில்லை; செயல்படுவதில்லை. அமெரிக்கரும் அப்படித்தான். கனேடியரும் அவ்வாறே. ஏன் கன தூரம் செல்ல வேண்டும்? எமது சிங்கள சகோதரர்களின் மூதாதைகள் வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள். புத்த மதமும் அவ்வாறே. என்றாலும், இக்கட்டான நிலையிலும் இந்தியாவை தாய் நாடு என்று சிங்களவர் ஒருபொழுதும் சொன்னதில்லை, செயல்பட்டதில்லை. இலங்கைத் தமிழர்களின் மூதாதையர்கள் விஜயன் காலத்திற்கு முந் தியவர்கள் இந்தி யாவின் உறவை மறக்கவில்லை. இலங்கைத்தமி ழர்களு க்குத் தான் இரண்டு தாய் நாடுகள் உண்டு. தெற்கில் மழைபெய்தால் யாழ்ப்பாணத்தில் குடை பிடிப்பார்கள். தமிழ் நாட் டில் வயிற்று வலி என்றால் இவர் கள் மருந்து சாப் பிடுவார்கள். உலக அதிசயங்களில் இதுவும் ஒன்று. ஏன் என்று என்னைக் கேட்காதீர்கள். கலைஞரைக் கேளுங்கள். கலைஞர் தொப் புள் கொடி உறவு என்ற பெரிய நாடாகம் எழுதுவார். கதை வசனமும் அவரே. நடிகரும் அவரே. டைக்டரும் அவரே. அழகாக அரகேற்றி விடுவார். யுத்தத்தின் கடைசி நாட்களில் நீங்கள் நெறிப்படுத்த அவர் அரங்கேற்றிய நாடாகம் அமோக வெற்றி கொடுத்தது. உச்சகட்ட கதை அம்சம் அவரது சாகும் வரை இருந்த உண்ணாவிரதக் காட்சி. கலைஞரையே கேளுங்கள். அவரே உகந்தவர். தொப்புள் கொடி உறவின் பிதாமகன்.

டில்லிப் பேரரசே! மன்னிக்க வேண்டுகிறேன். உங்களைப் போல வழி தவறிச் சென்றுவிட்டேன். 29.07.87 இல் கைச்சாத்திட்ட இந்தோ - சிறிலங்கா உடன்படிக்கைக்கும் அதன் மூலம் கொண்டு வரப்பட்ட இரு சட்ட மூலங்களுக்கும் மீண்டும் வருகின்றேன்.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 04 - 1944



உதிர்வு 28 - 04 - 2007

அமரர் செல்லையா சின்னத்துரை (கிளாக்கர்)

திதி: ஏகாதசி

அருந்தவங்கள் பலபலவாய் அரவணைத்து
கண்ணிமைப் பொழுதெல்லாம் கண்ணெதிரே நிறைந்தவரே!
துடித்தன இதயம் உங்கள் நினைவால்
மூன்றாண்டுகள் உருண்டோடி விட்டதப்பா
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாது உம் நினைவு
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(97243)

என்றும் உம் நினைவில்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**16.08.1990**

* ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ் இயக்கம்) இன்றுமுதல் உத்தியோகபூர்வமாக கலைக்கப்படுவதாக அந்த அமைப்பின் பிரமுகர் வே.பாலகுமாரன் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவிப்பு.
* இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான-அமைதியான தீர்வொன்றைக் காண மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி இந்திய மத்திய அரசை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

**17.08.1990**

* வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து ஏற்கனவே வெளியேறியிருக்கும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தோருக்கு ஆயுதம் மற்றும் ஆயுதப் பயிற்சிகளை வழங்கி அவர்களை ஊர்காவல் படையென்ற பெயரில் கிழக்கிற்கு அனுப்ப அரசு முடிவு செய்துள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.
* இன்று தமிழ் மக்களைக் கொல்ல சிங்கள அரசு உங்களுக்குத் தரும் ஆயுதங்கள் நாளை உங்களையும் அழிக்கப் பயன்படுத்தப்படுமெனவும் முஸ்லிம்களாகிய உங்களது உண்மையான நண்பர்கள் எவரென உணர்ந்து சரியான முடிவை மேற்கொள்ளுமாறும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முஸ்லிம் மக்களை வேண்டிக்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**18.08.1990**

* யாழ்.மாவட்டத்துக்குப் போதுமான உணவு அரசால் அனுப்பப்படாததால் அகதிகள் உட்பட யாழ்.குடாநாட்டு மக்கள் பட்டினிச் சாவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும், வாராந்தம் 5ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை அனுப்பிவைத்து உதவுமாறும் யாழ்.அரச அதிபர் அன்ரன் அல்பிரட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிப்பு.
* கிழக்கில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க தமிழர்களைக் கொண்ட ஊர்காவல் படையை அமைப்பது பயன்தராது. அதிக தமிழர்களை இராணுவத்தில் சேர்த்து தமிழ்க் கிராமங்களைப் பாதுகாக்க அவர்களை அனுப்புவதே சிறந்த வழி என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவிப்பு.

**19.08.1990**

* அம்பாறை மாவட்டம் வீரமுனைப் பகுதியில் உள்ள ஊர்காவல் படையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு ஒரு சில மணி நேரத்துள் அப்பகுதியைச் சேர்ந்த அப்பாவித் தமிழர்கள் 91 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு.
* தமிழகம் செல்லும் ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தல்களிலிருந்து காப்பாற்றும் பணியில் இந்தியக் கடற்படை ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**20.08.1990**

* கிளிநொச்சி செயலக திட்டமிடல் பிரிவுக்குள் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள் அடங்கிய பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப் படைகளுக்கும் இடையில் தற்போது வெடித்திருக்கும் சண்டையில் இதுவரை விடுதலைப்புலிகளின் கண்ணிவெடிக்கு இலக்காகி சுமார் ஆயிரம் படையினர் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

**21.08.1990**

* யாழ்.குடாநாட்டில் பரவலாக பல இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 12இற்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
* வவுனியாவில் தங்கி நிற்கும் தமிழ்க்குழு ஒன்றைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் ஆயுதம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

**22.08.1990**

* யாழ்.மாவட்டத்துக்கு எரிபொருள் எடுத்து வருவதற்கு அரசு முற்றாகத் தடை விதித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* வடக்கு, கிழக்கு யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்குத் தேவையான மருந்து மற்றும் வைத்திய உதவிகளுக்கென அமெரிக்க அரசு யுனிசெவ் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

**23.08.1990**

* காரைநகர் கடற்படை முகாமில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை குடிமனைப் பகுதியை நோக்கி சுமார் ஒரு மைல்தூரம் முன்னேறியிருப்பதாகத் தெரிவிப்பு.
* கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களுடன் நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்த 'லங்கா சிறி' கப்பல் பொருள்களை இறக்காமலேயே நேற்றுக் கொழும்புக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிப்பு.

**24.08.1990**

* ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று முன்தினம் தரையிறங்கிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்று வருவதாகத் தெரிவிப்பு.
* யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு ஆரம்பித்துள்ள தாக்குதல்கள் ஒரு முடிவு காணப்படும் வரை தொடரும் என பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**25.08.1990**

* யாழ். குடாநாட்டின் மீது இலங்கை அரசுப் படைகள் நடத்திய விமானத் தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் ஏராளமாகக் கொல்லப்படுவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவிப்பு.
* மாங்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் உக்கிரத் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

**26.08.1990**

* அல்லைப்பிட்டியில் நேற்று தரையிறக்கப்பட்ட இராணுவத் துருப்புகள் அங்கிருந்து மண்டைதீவுப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சிப்பதாகத் தெரிவிப்பு.
* பரந்தனில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நேற்று அங்கிருந்து வெளியேறி ஆனையிறவு முகாமைச் சென்றடைந்து விட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு.

**27.08.1990**

* இலங்கை இராணுவத்தினர் கடந்த வாரம் ஊர்காவற்றுறைக் கரையிலிருந்து அல்லைப்பிட்டிப் பகுதிவரை மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையினால் 70 இற்கும் அதிகமான பொதுமக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.
* யாழ். குடாநாட்டில் கண்மூடித்தனமாக விமானத் தாக்குதல்களை நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதை நிறுத்தும்படி 20 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் அரசுக்குக் கூட்டாக வேண்டுகோள் விடுத்தள்ளதாகத் தெரிவிப்பு.

**28.08.1990**

* இலங்கை அரசு உடனடியாகத் தனது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென இந்தியப் பிரதமர் வி.பி. சிங் நேற்று இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* வடக்கு , கிழக்கு மாகாணத்தில் தொடரும் மோதல்களை நிறுத்துவதுபற்றி ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசுவதென 20 அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

**29.08.1990**

* நெல்லியடிச் சந்தையில் கூடியிருந்த பொதுமக்கள் மீது நேற்று குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல்களில் சிக்கி 8 பேர் பலியானதாகவும் 30 பொதுமக்கள் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிப்பு.
* இலங்கைத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் வி.பி. சிங்குக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்து.

**30.08.1990**

* முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திவரும் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை மீட்டெடுக்க முடியாது இராணுவத்தினர் திணறுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.
* மண்டைதீவில் பொதுமக்கள் 45 பேரின் சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு இராணுவத்தினரால் நேற்று முன்தினம் எரிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

**31.08.1990**

* இலங்கை அரசுப் படைகள் தமிழ்ப் பகுதிகளில் பொதுமக்கள் மீது விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்துவதை நிறுத்தச் செய்ய இந்திய அரசு ராஜீக வழியில் இலங்கை அரசை நிர்ப்பந்தித்து வருவதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ராஜ்ய சபையில் தெரிவிப்பு.
* யாழ்.மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் பட்டினிநிலை உருவாகியிருப்பதாகவும், முகாம்களைப் பராமரித்து வந்த அரச சாா்பற்ற நிறுவனங்களின் கையிருப்பு முடிவடைந்து விட்டதாகவும் தெரிவிப்பு.

# இலங்கையருக்கான புதிய முகாமை பார்வையிட்டார் ஆஸி. அமைச்சர்

சிட்னி, ஏப்.24

இலங்கை, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு அரசியற் தஞ்சம் கோரி வருபவர்களை தடுத்து வைப்பதற்காக மீண்டும் திறக்கப்பட இருக்கும் 'கேக்டின்' தடுப்பு முகாமை ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஈவன்ஸ் நேற்று முன்தினம் திடீரென நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் 'கேக்டின்' தடுப்பு முகாம் ஓரிரு கிழமைகளுக்குள் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அரசியற் தஞ்சம் கோரி வருபவர்களை தடுத்து வைப்பதற்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இம்முகாம் சுமார் எட்டு வருடங்களுக்கு முன் மூடப்பட்டது.

கைதிகளின் கலக நடவடிக்கைகள், உண்ணாவிரதங்கள், தற்கொலை முயற்சிகள் ஆகியன இங்கு அதிகம் இடம்பெறத் தொடங்கியமையே அதற்கான காரணமாகும். இந்நிலையில் தற்போது மீண்டும் திறக்கப்பட இருக்கும் முகாமுக்கு நேற்று திடீர் விஜயம் செய்த அமைச்சர் அங்கு ஒரு மணித்தியாலம் வரை செலவு செய்தார்.

இவ்விஜயம் குறித்து ஊடகங்களுக்கு பேசிய அவர் கைதிகளின் நலன்களை பேணும் வகையில் முகாமில் சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. சுமார் 260 கைதிகளை இங்கு தடுத்து வைக்கப்பட முடியும். அவசியம் ஏற்பட்டால் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றார். (சி)

# முதலாவது பொலிஸ் கல்லூரி எதிர்வரும் 26 ஆம் திகதி திறப்பு

கொழும்பு,ஏப்.24

நாட்டின் முதலாவது பொலிஸ் கல்லூரி எதிர்வரும் 26 ஆம் திகதி நீர்கொழும்பு கட்டானை பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பொலிஸ் சேவையை மேலும் செயற்றிறன் மிக்கதாக மாற்றியமைக்கும் நோக்கில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப பொலிஸ் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைக்கும் இக்கல்லூரி ஊடாக பொலிஸ் சேவையில் உள்ளவாகளுக்கு அவாகளின் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் வகை செய்யப்படுகிறது.

தோந்தெடுக்கப்பட்ட 100 பொலிஸ் உத்தியோகத்தாகள் 26 ஆம் திகதி முதல் சிரேஷ்ட துப்பறியும் பாடநெறி மற்றும் கனிஷ்ட துப்பறியும் பாடநெறியை இக்கல்லூரி ஊடாக மேற்கொள்ள உள்ளனர். (சி)

# வாழைச்செய்கையில் ஆர்வம் காட்டும் வன்னியில் மீளக்குடியமர்ந்த விவசாயிகள்

கோப்பாய்,ஏப்.24

வன்னிப் பிரதேசத்தில் அண்மையில் குடியேறிய மக்கள் மீண்டும் விவசாய முயற்சிகளை படிப்படியாக ஆரம்பித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அக்கராயன் மற்றும் முழங்காவில் பிரதேசங்களில் விவசாயிகள் வாழைச் செய்கையில் படிப்படியாக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலிருந்து பெருமளவு வாழைக் குட்டிகள் நடுகைக்காக அங்கு எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது வாழைக்குட்டி ஒன்று 20 ரூபா முதல் 30 ரூபாவரை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

முழங்காவில் மற்றும் அக்கராயன் பிரதேசங்கள் வாழைச் செய்கைக்கு சிறந்த இடங்களாக முன்னர் விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-72)

# 'எங்களிடமிருந்து நாட்டுக்கு-நாட்டின் எழுச்சிக்கு' இறுதிப் போட்டியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம்,ஏப்.24

ஜனாதிபதி செயலக ''மதர் சிறிலங்கா'' மன்றத்தினர் கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தும் வடமாகாண ''எங்களிடமிருந்து நாட்டுக்கு -நாட்டின் எழுச்சிக்கு'' என்ற போட்டிகளின் இறுதிப் போட்டியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் முற்பகல் 8 மணி முதல் பி.ப.1.30 மணிவரையும் போட்டி நிகழ்வுகளும், அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ் வாழங்கும் வைபமும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களும்,பொறுப்பாசிரியர்களும் 29 ஆம் திகதி காலை 7.45 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு போட்டிகள் சிறப்பாக நடைபெற உதவுமாறு, அதே வேளை யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய வலயங்களிலிருந்து (வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு, துணுக்காய்) இப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் யாழ். மத்திய கல்லூரியில் தங்குமிட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வருகைதரும் வெளி மாவட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் 28 ஆம் திகதி மாலை 6 மணிக்குத் தமது பதிவுகளை யாழ்.மத்திய கல்லூரியில் மேற்கொள்ளுமாறும் தங்குமிட ஒழுங்குகள் தொடர்பாக 024 222 5818 என்ற தொலைபேசி இலக்கத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் உடன் தொடர்புகொண்டு உறுதிப் படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (50-16)



நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் சேவையில் புதிதாக இணைக்கப்பட்ட உதயதாரகை படகைப் படத்தில் காணலாம். மேற்படி படகு யாழ்.அரச அதிபரின் முயற்சியை அடுத்து 78 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டதாகும்.

(படம்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் தெற்கு, அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தால் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாடசாலை வேலைகள் பிரிவுப் பொறியியலாளர் க.சிவபாலன் போட்டிகளில் வெற்றி யீட்டிய வீரர்களுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும், அருகில் பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட வீர, வீராங்கனைகளுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# வலி. வடக்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளின் தேசிய இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலி.வடக்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் நடைபெற்ற தேசிய இலக் கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவு**

**பாடலாக்கம் ( கனிஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- செ.யசோதா( துர்க்காபுரம் மகளிர் இல்லம்), 2ஆம் இடம்- விஜிதா சுரேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி), 3ஆம் இடம்- சோபிதா சுரேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி).

**(சிரேஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- பா.கெஸ்ரன் ( மல்லாகம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- வசுதா சுரேஸ்குமார்( மகாஜனக் கல்லூரி).

**(திறந்த பிரிவு)**

முதலாமிடம்- பரராஜசிங்கம் கபிலன் (அளவெட்டி மத்தி),2ஆம் இடம்- பசுபதி உதயகுமார்( அளவெட்டி வடக்கு), 3ஆம் இடம்- நாகலிங்கம் குலசிங்கம் (அளவெட்டி மத்தி).

**சிறுகதை( கனிஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- ஈஸ்வரானந்தம் நவிஷா ( கணேசா அறநெறிப் பாடசாலை), 2ஆம் இடம்- விஜிதா சுரேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி), 3ஆம் இடம் - மோகனராஜி சத்தீஸ்வரன் (மகாஜனக் கல்லூரி).

**(சிரேஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- சிறிவாணி இரத்தினராசா (கணேசா அறநெறிப் பாடசாலை).

**(திறந்த பிரிவு)**

முதலாமிடம்- பசுபதி உதயகுமார் (அளவெட்டி வடக்கு),2ஆம் இடம்- நடராசா சிறிஸ்கந்தராசா (அளவெட்டி மத்தி), 3ஆம் இடம்- நர்கலிங்கம் குலசிங்கம் (அளவெட்டி மத்தி).

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- வினிஸ்ரா மகாதேவன் (மகாஜனக் கல்லூரி), 2ஆம் இடம்- மேதுஷா துரைசிங்கம் ( மகாஜனக் கல்லூரி),3ஆம் இடம்- நவிஷா ஈஸ்வரானந்தம் ( கணேசா அறநெறிப் பாடசாலை).

**( சிரேஸ்ட பிரிவு)**

முதலாமிடம்-பூ செல்வதியம்மா (துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலை), 2ஆம் இடம்- சிறிவாணி இரத்தினராசா ( மகாஜனக் கல்லூரி).

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

முதலாமிடம்- சோபிதா சுரேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி), 2ஆம் இடம்- விஜிதா சுரேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி), 3ஆம் இடம்- மோகனாராஜி சத்தீஸ்வரன் (மகாஜனக் கல்லூரி).

**( சிரேஷ்ட பிரிவு)**

முதலாமிடம்-ஈஸ்வரானந்தம் றோகீசன் (கணேசா அறநெறிப் பாடசாலை), 2ஆம் இடம்- பா.கெஸ்ரன் (மல்லாகம் மகா வித்தியாலயம்), 3ஆம் இடம்- பூ.செல்வதியம்மா (துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலை).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்- சாரங்கபாணி தணிகாசல தேவி ( அளவெட்டி), 2ஆம் இடம்-பசுபதி உதயகுமார் (அளவெட்டி வடக்கு),3ஆம் இடம்- நாகலிங்கம் குலசிங்கம் (அளவெட்டி மத்தி).

**வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவு**

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- தே.காயத்திரி ( சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), 2 ஆம் இடம்- க. துஷாரா (சங்கானை சிவப்பிரகாச ம.வி.), 3 ஆம் இடம் - போ.கஜீபன் (மூளாய் சைவப் பிரகாச ம.வி.).

**கட்டுரை ஆங்கிலம் கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்-ரி.காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்- சி.கோபிகா (வட்டு. மத்திய கல்லூரி), 2ஆம் இடம் - சா.கோமதி (வட்டு. மத்திய கல்லூரி), 3ஆம் இடம் - சு.சுஜித்தா (வட்டு. மத்திய கல்லூரி).

**கவிதை கனிஷ்டப்பிரிவு**

முதலாமிடம்- த.சிவகங்கா (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), 2 ஆம் இடம் - க. காயத்திரி (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), 3 ஆம் இடம் - த.துளஸ்சி (சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்- சி.சிந்துஜா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), 2 ஆம் இடம் - இ.கீர்த்தனா (யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை), 3ஆம் இடம் -விஜீவிதா(பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்- க.நல்லதம்பி (பாடசாலை வீதி துணைவி), 2 ஆம் யோ.ஜினித்தா (தேவாலய வீதி, சங்கானை), 3ஆம் இடம்- ந.உதயலதா (சங் கானை மேற்கு).

**கவிதை- ஆங்கிலம் கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- ரி.துவாரகன் ( சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), 2 ஆம் இடம்- ரி. காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), 3 ஆம் இடம் - ரி.வர்சனா ( சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

**சிறுகதை- கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- உ.சானுகா (சங்கானை வெவ்வில் அறநெறிப் பாடசாலை), 2 ஆம் இடம் - யோ.நிஜந்தா (சங்கானை வெவ்வில் அறநெறிப் பாடசாலை), 3 ஆம் இடம் - யோ.கஜிதா (சங்கானை வெவ்வில் அறநெறிப் பாடசாலை).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்- உ.கார்த்திகா (சங்கானை வெவ்வில் அறநெறிப் பாடசாலை), 2 ஆம் இடம் -இ.கீர்த்தனா (யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை), 3 ஆம் இடம் - சி.டினோதினி (வட்டு. மத்திய கல்லூரி).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்-க.நல்லதம்பி (பாடசாலை வீதி துணைவி), 2 ஆம் இடம் -நா.அகிலன் (மூளாய் வீதி, வட்டுக்கோட்டை), 3 ஆம் இடம் -யோ.ஜினித்தா (தேவாலய வீதி, சங்கானை)

**பாடலாக்கம்- கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- மோ.உதயராஜ் (சங்கரத்தை முருகமூர்த்தி அ.நெ.பா), 2 ஆம் இடம் - சி.அனோஜிதா (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), 3 ஆம் இடம் -சி.அனோஜிதா (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி).

(50-201)

## சித்திரத்தேர் வெள்ளோட்டமும் சிறப்பு மலர் வெளியீடும்

கோப்பாய்,ஏப்.24

அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் சிறப்பு மலர் வெளி யீட்டு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழ சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி தலைமையில் இடம்பெறும் மலர் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரைகளை பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், தெல்லிப்பழை துர்கா தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

மலரின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்கவுள்ளனர். (50-72)

## திருவள்ளுவர் தினவிழா கோண்டாவிலில் நாளை

யாழ்ப்பாணம், ஏப்ரல்.24

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபை நடத்தும் திருவள்ளுவர் தினவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் மகாசபையின் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சன சமூக நிலைய பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருக்குறள் பற்றிய பல்வேறு தலைப்புக்களில் பொன்.கனகரட்ணம், சைவப்புலவர் எம்.சிவலிங்கம், எஸ்.சிவச்செந்தூரன், த.தேவராஜன், க.சுரேஸ்நேசன், ச.குமாரசாமி, செ.செல்வநாயகம், ஐ.மாணிக்கவாசகர் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இறுதியாக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கல்வி ஊக்குவிப்பு வழங்கல் நிகழ்வும் இடம் பெறவிருக்கின்றன.

(க-23)

# ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

சோ.நிசாந்தன்-9ஏ, சு.கெரித்தி-8ஏபி, நா.அனுசுதன்- 8ஏசி, பு.டிசாந்த்- 8ஏசி, த.மனோஜன்- 8ஏசி, கி. அன்ரனி சஜீவன்- 7ஏபிசி, சு.விதுர்சன்- 7ஏபிசி, ஜோன் மரியதாஸ் விதுஷன் நிக்கலஸ்- 7ஏபிசி, யோ.ஜனுஸ்- 7ஏசிஎஸ், செ.பிரவீன்- 6ஏ2பிஎஸ்.

ச.கௌமாறன்- 6ஏபிசிஎஸ், தே.பிறெயன் எரிக்- 5ஏ3பிசி, சி.யசோத கிருஷ்ணா- 5ஏ3பிசி, பா.மதுசுதன்- 5ஏபி3சி, சி.சஞ்சீபன்- 5ஏ3பிசி, பா.ஹரிசக்தி- 5ஏ.

**ஆங்கில மொழி மூலம்**

ஜோசப் அன்ட்ரூ வசந்தன்-9ஏ, ஹரிதரன் சொலமன் ராஜாராம்- 9ஏ, கி.டசின்ற கிருஷ்ணா- 8ஏபி, தே. பேர்டினன் ஷைலோ-8ஏபி, இ.கௌஷன்-8ஏபி, சா.லெஸ்லிலவன்- 8ஏபி, கி.கஜந்தன்-8ஏசி, ஹில்வாட் குணம் சச்சர்ரியா ஜெரோபர்-8ஏசி, ம.சிவரோஷன்- 7ஏபிசி, கு.விபூஷன்- 7ஏபிசி, தே.ரகுசாந்தன்- 6ஏ2பிசி, தே.பிரசன்னா- 5ஏ3பிசி, சி.அனோ முத்துக்குமார்- 5ஏபி3சி, ப.சகேவன்- 5ஏ2பிசிஎஸ், ம.வித்தகன்- 5ஏபி2சிஎஸ்.

**தெண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி.**

அ.நிவேதிகா- 4ஏபி3சிஎஸ், ஸ்ரீ.ஸ்ரீலக்சனா- 2ஏ3பி2சி2எஸ், வ.மாதுகா- 2ஏ5சி2எஸ், ப.கம்சத்வனி- ஏபி2சி2எஸ், க.கவித்திரா- 2ஏபி2சி2எஸ், யோ. ஜோதினி- ஏ2சி6எஸ், வ.கஜானா- ஏபி4சி2எஸ், தி.கீர்த்தனா- ஏபி2சி3எஸ்.

க.கவிந்தன்- 2ஏ3சி2எஸ், இ.இரகுநாதன்- ஏ2சி5எஸ், உ.தேசிகன்- ஏ2பி3சி2எஸ், தி.ஜெப்பிரசாந்- ஏபி5சிஎஸ்,ஸ்ரீ. சுரேன்-2ஏபிசி4எஸ், த.தனுசன்- ஏ3சி4எஸ், ஸ்ரீ.யுவகாந்-2ஏபி2சி3எஸ், யோ.சிந்துராஜ்- ஏ6சிஎஸ், பா.சரவணபவன்-ஏபிசி3எஸ்.

**செங்குந்தா இந்துக் கல்லூரி**

பு.மீரா- 5ஏபி2சிஎஸ், இ.ரஜீனா- 3ஏ3பி2சி, ச.சாமினி- 2ஏ2பி2சி2எஸ், ர.சிறிசந்திரிகா- 2ஏபி2சி4எஸ், ஜெ. தர்சிகா-2ஏ2பி2சி2எஸ், ந.பவித்தா- 2ஏ3பிசி3எஸ், ஜெ.அங்கயன்- ஏ3பி3சி2எஸ்.

**நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்**

வி.வினோத்- 6ஏ2பிஎஸ், க.சாயினி- 6ஏபி2சி, கே. துஷ்யந்தன்- 6ஏபிசிஎஸ், இ.நிரோசா- 2ஏ4பிசிஎஸ், மு.நி.நிஸ்மியாபர்வின்- ஏபி3சி2எஸ், ப.நிருசா- ஏபிசி4எஸ்.

**யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்**

சி.கமலபவானி- 2ஏ4பிசிஎஸ், ம.கம்சிகா- 2ஏ3சி2எஸ், சி.விவேகா- ஏ3சி4எஸ், ஜெ.தினேஸ்வரி- ஏ2சி3எஸ். (188)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 30 . 07 . 1931



உதிர்வு 24 . 04 . 2009

**அமரர் பிரகாசம் வலத்தி (பொன்னையா)**

உயிரே உனை நாம் இழந்து ஓராண்டு உருண்டதுவோ?
உணர்வில் நிறைந்தவரே உமை நாம் மறப்போமா?
இறப்பே இல்லை உமக்கு எங்கள் மன மாளிகையில்
கணமும் பிரியாது வாழ்ந்திருப்பீர் அமைதி கொள்க!

வ.நூயன்,
நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை. (97138) குடும்பத்தினர்.




**அருள்முருகன் திருமண சேவை**

Doctors, Engineers மற்றும் மணமக்கள்

தெரிவு அருள்முருகனின் கௌரவ சேவைகளே!

021 222 9334 (97316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# நெருக்கடியான காலகட்டத்திலும் எமது வீரர்கள் தேசிய, மாகாண போட்டிகளில் சாதித்தனர்

## கௌரவிப்பு நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்

வலி.வடக்கு, ஏப்.24

2008 ஆம் ஆண்டு நெருக்கடியான காலகட்டத்தில் கூட யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் தேசிய மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு பல சாதனைகளைப் படைத்துள்ளனர்.

இவ்வாறு புகழாரம் சூட்டினார் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன்.

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற பெருவிளையாட்டுக்கள், தடகளப் போட்டிகள் உட்பட மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய அவர் மேலும் கூறியதாவது:

2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாம் கடலினால் பயணம் மேற்கொண்டு இருந்தோம். நடுக்கடலில் சென்று கொண்டு இருந்த போது எம்மை மீண்டும் யாழ்ப்பாணம் செல்லுமாறு கூறப்பட்டது.

பின்னர் திருகோணமலைக்கு நாம் சென்ற போது துறைமுகத்தில் நாம் இறங்க விடாது தடுக்கப்பட்டோம்.

வீரர்கள் சத்தியெடுத்துக் களைத்திருந்தனர். நாம் இறங்கி இளைப்பாறி விட்டுத் திரும்புகின்றோம் என்று கூறிய போதிலும் கூட எம்மை இறங்க அனுமதிக்கவில்லை. கப்பலில் நின்றவாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டோம்.

அவர் உரியவர்களுடன் பேசி எம்மைப் போட்டிகளில் பங்கேற்க உதவினார். இதனாலேயே எம் வீரர்கள் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு பல சாதனைகளைப் படைக்க முடிந்தது - என்றார். (50-6-86)

## சங்கானைப் பிரதேச செயலகத்தின் தடகளப் போட்டி நாளை

வலி.வடக்கு, ஏப்.24

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (50-6-86)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த 24 பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க பிரதம விருந்தினராகவும் பிரிகேடியர் பிராங்கிளின் றொட்டிக்கோ, லெப்டினன்ட் கேணல் சமன் ஜெயமகமுதலி, இலங்கைத் துடுப்பாட்ட சங்க மத்தியஸ்தர் முகாமையாளர் றொனி குணரட்ண ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

சான்றிதழ் பெறுபவர்களை சீருடையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (50-6-23-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை நாளை சென்.ஜோன்ஸ் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.24

கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டிலும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஒழுங்கமைப்பிலும் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு 30 பேர் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான செயலமர்வுகள் இலங்கை கிரிக்கெட் சபையின் மத்தியஸ்தர் றொனி குணரட்ண தலைமையிலான குழுவினரால் 3 நாள்கள் நடத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (50-6-23-86)

# கற்கோவளம் உதயதாரகையின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மோதும் அணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் கற்கோவளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதுகின்ற அணிகளின் விவரம் வருமாறு:-

* ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணி சென்.தோமஸ் (பி) விளையாட்டுக் கழகம் எதிர் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழ கம்.
* பிற்பகல் 4.30 மணி பருத்தித்துறை ஐக்கியம் (ஏ) விளையாட்டுக் கழகம், எதிர் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.
* திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணி நவசக்தி (ஏ) விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம்பன்ஸ் (ஏ) விளையாட்டுக் கழகம்.
* பிற்பகல் 4.30 மணி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் (பி) எதிர் அண்ணா சிலையடி (பி) விளையாட்டுக் கழகம்.

(50-6-23)

# நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் வெற்றியீட்டியோர்

வலி.வடக்கு, ஏப்.24

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

### 100 மீற்றர் ஓட்டம்

என். ஆதித்தன்( கொக்குவில் இந்திரா வி.க), பி.லோகநாத் ( அரியாலை ஐக்கிய வி.க), ஜி. சிலேந்திரன் ( யாழ்.ஜொலிஸ்ரார் வி.க),

### 200 மீற்றர் ஓட்டம்

ஜி. சிலேந்திரன் ( யாழ்.ஜொலிஸ்ரார் வி.க), வி.பிரதாப் ( நல்லூர் இராஜா வி.க.), கே. பிரதீசன் ( கொக்குவில் இந்திரா வி.க.)

### 400 மீற்றர் ஓட்டம்

ஆர் சேந்தன் ( அரியாலை ஐக்கிய வி.க), ஜி. சிலேந்திரன் (ஜொலிஸ்ரார் வி.க.), ரி. சாருகேசன் ( கொக்குவில் இந்திரா வி.க.)

### 800 மீற்றர் ஓட்டம்

ஆர். சேந்தன்( அரியாலை ஐக்கிய வி.க.), எஸ். கஜேந்திரன்( அரியாலை ஐக்கிய வி.க.),ரி. சாருகேசன் ( கொக்குவில் இந்திரா வி.க.)

### 1500 மீற்றர் ஓட்டம்

ஆர். சேந்தன்( அரியாலை ஐக்கிய வி.க.),ரி. லக்சன்( கொக்குவில் பொற்பதி இந்து வி.க.), கே. வினோதன் ( கொக்குவில் இந்திரா வி.க.).

### 5000 மீற்றர் ஓட்டம்

எம். பிரகாஸ் ( கோண்டாவில் சித்தி விநாயகர் வி.க.), ஆர்.ருக்ஸ்மன் ( கொக்குவில் பொற்பதி இந்து வி.க.), ரி. சத்தியன் (கொக்குவில் பொற்பதி இந்து வி.க.).

### 10,000 மீற்றர் ஓட்டம்

எம். தமிழ்ச்செல்வன் ( அரியாலை ஐக்கிய வி.க.), ஆர்.சதீசன் ( வண்ணார் பண்ணை நண்பர்கள் வி.க.), வி. சிரஞ்சீவி( கோண்டாவில் சித்தி விநாயகர் வி.க.)

### நீளம் பாய்தல்

எ. ஸ்ரீநிவாஸ் ( கொக்குவில் மத்திய சன சமூக நிலைய வி.க.), கே. கண்ணராஜ் ( அரியாலை ஐக்கிய வி.க.), கே. றொசாந் ( நல்லூர் இராஜா வி.க.).

### ஈட்டி எறிதல்

கே. றொசாந் ( நல்லூர் இராஜா வி.க.), என். றெஜினோபன் ( நல்லூர் இராஜா வி.க.),என். சுதாகரன் ( கொக்குவில் இந்திரா வி.க.).

### உயரம் பாய்தல்

ஈ. ஜெயரூபன் ( வண்ணார்பண்ணை காமாட்சி அம்பாள் வி.க.),பி. பாலசங்கர் ( அரியாலை ஐக்கிய வி.க.), பி.பிரகாஸ் (அரியாலை ஐக்கிய வி.க.), எஸ். சிவதரன் ( நல்லூர் இராஜா வி.க.).

### குண்டு போடுதல்

ஜி. பிரகாஸ் ( கோண்டாவில் குமரன் வி.க.), என். சுதாகர் ( கொக்குவில் இந்திரா வி.க.), வி.நிசாந் ( அரியாலை ஐக்கிய வி.க.).

### தட்டெறிதல்

என்.சுதாகரன் ( கொக்குவில் இந்திரா வி.க.), வி.நிசாந் ( அரியாலை ஐக்கிய வி.க.) எஸ். விஜயரூபன் ( வண்ணார் பண்ணை நண்பர்கள் வி.க.),

### முப்பாய்ச்சல்

கே. கண்ணராஜ் ( அரியாலை ஐக்கிய வி.க.), எ. ஸ்ரீநிவாஸ் ( கொக்குவில் மத்திய சன சமூக நிலைய வி.க.), கே. றொசாந் (நல்லூர் இராஜா வி.க.).

### 4x100 மீற்றர் அஞ்சலோட்டம்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், நல்லூர் இராஜா வி.க., யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் வி.க.

### 4x400 மீற்றர் அஞ்சலோட்டம்

அரியாலை ஐக்கிய வி.க,யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் வி.க., கொக்குவில் இந்திரா வி.க. (50-6-86)



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் முதன் முறையாக நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற உடுப்பிட்டி/உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி வீராங்கனைகள் பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

பூச்சி நீக்கிய, தடை ஊசிகள் போடப்பட்ட இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ச.சிவராசா
'சிவபதி', 14/1, விதானை வீதி, யாழ்ப்பாணம்.



**ஆசிரியர் தேவை**

வவுனியாவில் இயங்கும் AJAPE சர்வதேச பாடசாலைக்கு B.Sc. விஞ்ஞான ஆசிரியர் தேவை. தொடர்பு: 0244921999


# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்
1962.06.03

மறைவு
2010.03.25

## அமரர் தனபாலசிங்கம் விக்னேஸ்வரி

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே
எங்கள் ஆருயிர் தாயே
உம்மைப் பிரிந்து வாடி நிற்கின்றோம்

இன்று (24.04.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

(97452)

# சமய சந்நிதியில்

கொழும்புத்துறை ஏப் 24

அரியாலை புனித யூதாததேயு ஆலய பெருவிழா நடைபெற்று வருகிறது. இன்று மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூபவனியும் இடம்பெறும் (1-135)

★ ★ ★

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி தீமிதிப்பு விழாவும் 6ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் பத்து தினங்கள் மகேஸ்வர பூசை யும் நடைபெறும். (1-188)

★ ★ ★

கந்தரோடை கோட்டன்கட்டு ஞான வைரவர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் அட்டோத்திர சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதிவலம் வருவார். இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (க-204)

யாழ்ப்பாணம், ஏப்.24

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவில் மாம்பழத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் விஷேட அபிஷேக ஆராதனையும் பி.ப. 3 மணிக்கு மாம்பழத் திருவிழாவும் இரவு கயிலாய வாகனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (1-72)

★ ★ ★

ஏழாலை, ஏப்.24

ஏழாலை சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான நூதன வசந்த மண்டப கும்பாபிஷேக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் சிவஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள் தலைமையில் இந்த விழா நடைபெறும்.

நண்பகல் 12 மணியளவில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.(க)


**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: NEW R.S.K. FARM,
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.



**பெண் வேலையாள்கள் தேவை**

பிஸ்கட் கம்பனிக்கு பெண்கள் வேலைக்குத் தேவை.
தொடர்புக்கு: சேகர் குளிர் ஊற்று
இல. 400, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 0212226634



**தவறிவிட்டது**

மின்சாரநிலைய வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடைய நடராசா மகிந்தன் என்பவரது தே.அ.அட்டை (892451710 V) யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P. உடன் தொடர்புகொள்ளவும்.
0770782258, 0779403754, 0778658532


# அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி கோயில்

**மாம்பழத்திருவிழா உபயம்**

இன்று (24.04.2010) சனிக்கிழமை நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் மாம்பழத் திருவிழா நடைபெறுகிறது. பகல் சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் காவடி எடுத்தலும், மாலை 3.00 மணிக்கு மாம்பழத் திருவிழாவும், இரவு கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெறும்.

**மங்கா சுவை மாங்கனி**

சம்போ மகாதேவா, சம்போ மகாதேவா
சரணம் சரணம் பரமேஸ்வர உமா
முக்கனியெனும் மா வாழை பலாவில்
மங்காசுவை மாங்கனி அர்ப்பணித்தேன்
(சம்போ)

கங்கை தட்கு சடை பிறை சூடிக் கடவுளே
முழுமுதற்பொருளே பரம்பொருளே ஏற்றருள்வீர்
பக்குவம் பேணிஅன்பு பொங்கிட கொணர்ந்தேன்
முத்தியருளும் முதல்வா முக்கண்ணா ஏற்றருள்வீர்
(சம்போ)

இக்கனி தக்கவர் ஒருவருக்கே தரவேண்டும்,எனவே
கைலைமலை நாதா, சக்தியுமைபாகா உமக்கே தந்தேன்
ஏற்றருள்வீர்,எனைக்காத்தருள்வீர் சரணம்
ஐயா சரணம் ஐயா சம்போ மகாதேவா (சம்போ)

நீரூர் முருகதாசன்

பிரசுர அனுசரணையாளர்:


**திருமுருகன்**
**திருமணமண்டபமும் (AC/Non AC)**
**பல்பொருள் அங்காடியும்**

தற்போது திருமண மண்டபத்திற்கு புதிய கதிரைகள் போடப்பட்டுள்ளன.
நீர்வேலி - கரந்தன் வீதி (கந்தசுவாமி கோயில் பின்வீதி)
தொலைபேசி: 0776660211, 0217201523
hot mail. thirumurugan neerwely @hot mail.com

(அ/567149)

# 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு: 06.05.1993
இறப்பு: 14.03.2010



திதி: மாசிமாத தேய்பிறை சதுர்த்தசி

கடந்த 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வம்

## அமரர் திருச்செல்வம் கபிலநாத்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 27.04.2010 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்
அருள் விநாயகர் ரேடர்ஸ்

அமரர்
திருச்செல்வம் கபிலநாத்

பெரிய அரசடி, சாவகச்சேரி.

(சி-567151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவியேற்பு

கொழும்பு,ஏப்.24

புதிய அமைச்சரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பிற்பகல் பதவியேற்றது.

பதவியேற்ற அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சு விவரங்களும் வருமாறு-

| அமைச்சர்கள் | அமைச்சுக்கள் |
|---|---|
| பிரதமர் டி.எம்.ஜயரட்ண | - புத்தசாசனம், மத அலுவல்கள் |
| ரட்ணசிறி விக்கிரமநாயக்க | - பொது நிர்வாக சீர்திருத்தம் |
| நிமால் சிறிபால டி சில்வா | - நீர்ப்பாசனம், நீர்வளங்கள் |
| ஏ.எச்.எம்.பௌஸி | - அனர்த்த முகாமைத்துவம் |
| மைத்திரிபால சிறிசேன | - சுகாதாரம் |
| சுசில் பிரேமஜயந்த | - பெற்றோலிய முகாமைத்துவம் |
| தினேஷ் குணவர்த்தன | - நீர் விநியோகம் |
| டக்ளஸ் தேவானந்தா | - பாரம்பரிய கைத்தொழில், சிறுகைத்தொழில் அபிவிருத்தி |
| ஏ.எல்.எம். அதாவுல்லா | - மாகாணசபை, உள்ளூராட்சி |
| டியூ குணசேகர | - புனர்வாழ்வு |
| ரிஷாத் பதியுதீன் | - கைத்தொழில் அபிவிருத்தி |
| விமல் வீரவன்ஸ | - பொறியியல், வீடமைப்பு, பொதுவசதிகள் |
| பஸில் ராஜபக்ஷ | - பொருளாதார அபிவிருத்தி |
| சம்பிக்க ரணவக்க | - மின்சக்தி, எரிசக்தி |
| பி.தயாரட்ண | - அரசவளங்கள், தொழில்துறை அபிவிருத்தி |
| ஜி.எல்.பீரிஸ் | - வெளிவிவகாரம் |
| ஜோன் செனவிரத்ன | - பொதுநிர்வாகம் |
| சுமேதா ஜி.ஜயசேன | - நாடாளுமன்ற விவகாரம் |
| மில்ரோய் பெர்னாண்டோ | - மீள்குடியேற்றம் |
| ஜீவன் குமாரதுங்க | - தபால், தொலைத்தொடர்பு |
| பவித்திரா வன்னியாராய்ச்சி | - தேசிய மரபுரிமை, கலாசாரம் |
| அநுர பிரியதர்ஷன யாப்பா | - சுற்றாடல் |
| திஸ்ஸ கரலியத்த | - சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி |
| அதாவுட செனவிரத்ன | - நீதி |
| காமினி லொக்குகே | - தொழில்உறவுகள், கமத்தொழில் ஊக்குவிப்பு |
| பந்துல குணவர்த்தன | - கல்வி |
| மஹிந்த சமரசிங்க | - பெருந்தோட்டம் |
| ராஜித சேனாரத்ன | - கடற்றொழில் |
| பியசேன கமகே | - சுதேச வைத்தியம் |
| எஸ்.பி.நாவின்ன | - தேசியமொழி, சமூக நல்லிணக்கம் |
| ஜனக பண்டார தென்னக்கோன் | - காணி |
| பீலிக்ஸ் பெரேரா | - சமூகசேவைகள் |
| சி.பி.ரட்ணாயக்க | - விளையாட்டுத்துறை |
| மஹிந்த யாப்பா அபயவர்த்தன | - விவசாயம் |
| குமார வெல்கம | - போக்குவரத்து |
| டலஸ் அழகப்பெரும | - இளைஞர் விவகாரம் |
| ஜோன்ஸன் பெர்னாண்டோ | - கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகம் |

| பிரதி அமைச்சர்கள் | அமைச்சுக்கள் |
|---|---|
| சாலிந்த திஸாநாயக்க | - பெருந்தோட்டம் |
| டிலான் பெரேரா | - பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் |
| சுசந்த புஞ்சிநிலமே | - கடற்றொழில் |
| லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன | - பொருளாதார அபிவிருத்தி |
| சந்திரசிறி கஜதீர | - நிதி |
| ஜெகத் புஷ்பகுமார | - விவசாயம் |
| டி.பி.ஏக்கநாயக்க | - கல்வி |
| மஹிந்த அமரவீர | - சுகாதாரம் |
| ரோஹித அபேகுணவர்தன | - துறைமுகங்கள், விமானசேவைகள் |
| எஸ்.எம்.சந்திரசேன | - நீர்ப்பாசனம், நீர்வளங்கள் |
| குணரத்ன வீரக்கோன் | - கலாசாரம் |
| மேர்வின் சில்வா | - ஊடகம் |
| பந்து பண்டாரநாயக்க | - சுதேசிய வைத்தியம் |
| ஜயரட்ண ஹேரத் | - வர்த்தகம், தொழிற்றுறை |
| தயாசிறித்த திசேரா | - துறைமுகங்கள், விமானசேவைகள் |
| சுமிந்த திஸாநாயக்க | - துறைமுகங்கள், தொடர்பாடல் |
| ரஞ்சித் சியாம்பலபிட்டிய | - பொருளாதார அபிவிருத்தி |
| லஸந்த அழகியவண்ண | - பொறியியல், நிர்மாணம், வீடமைப்பு |
| ரோஹண திஸாநாயக்க | - போக்குவரத்து |
| எச்.ஆர். மித்திரபால | - கால்நடைகள் |
| நிர்மல கொத்தலாவல | - பெருந்தெருக்கள் |
| பிரேமலால் ஜயசேகர | - மின்சக்தி, எரிசக்தி |
| கீதாஞ்சன குணவர்தன | - வெளிவிவகாரம் |
| விநாயகமூர்த்தி முரளிதரன் | - மீள்குடியேற்றம் |
| இந்திக பண்டாரநாயக்க | - உள்ளூராட்சி |
| முத்து சிவலிங்கம் | - பொருளாதார அபிவிருத்தி |
| சிறிபால கம்லத் | - காணி |
| டபிள்யூ. டி. எக்கநாயக்க | - அனர்த்த முகாமைத்துவம் |
| சந்திரசிறி சூரியாராய்ச்சி | - சமூகசேவைகள் |
| நியோமல் பெரேரா | - கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகம் |
| சரத் குணரட்ண | - அரசவளங்கள், தொழில்துறை அபிவிருத்தி |
| நந்தமித்திர எக்கநாயக்க | - உயர்கல்வி |
| நிருபமா ராஜபக்ஷ | - நீர்விநியோகம், வடிகால் அமைப்பு |
| லலித் திஸாநாயக்க | - தொழில்நுட்பம் |
| சரண குணவர்த்தன | - பெற்றோலியம், தொழிற்றுறை |
| றெஜினோல்ட் குரே | - நீதி |
| விஜித் விஜயமுனி டி சொய்ஸா | - புனர்வாழ்வு, சிறை சீர்திருத்தம் |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா | - சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி |
| வீரகுமார திஸாநாயக்க | - பாரம்பரிய கைத்தொழில், சிறிய கைத்தொழில் அபிவிருத்தி |

## மேர்வினுக்கு ஊடகத்துறையா? செய்தியாளர்கள் அதிர்ச்சியில்!

கொழும்பு,ஏப்.24

ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் போன்ற தரப்புகளுடன் தீவிர - கடும் - போக்கை வெளிப்படுத்தி [illegible] மேர்வின் சில்வாவுக் [illegible] கப் பிரதி அமைச்சர் [illegible] வழங்கப்பட்டமை ஊடக வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

'சிரச' ஊடகவியலாளர்கள், 'ரூபாவாஹினி' ஊடக நிறுவனம் ஆகிய தரப்புகள் தொடர்பில் வன்மத்துடன் நடந்துகொண்டு ஊடகத்துறையினரின் அதிருப்திக்கும், ஆட்சேபத்துக்கும் உள்ளாகி வந்தவர் மேர்வின் சில்வா என்பது வெளிப்படையான விடயம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடக அமைச்சைத் தம்வசமே வைத்துக்கொண்டு, பிரதி அமைச்சர் பொறுப்பை மேர்வின் சில்வாவிடம் வழங்கியுள்ளமை குறித்து ஊடக வட்டாரங்களில் பெரும் விசனம் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மனோ கணேசனின் கட்சியின் [illegible]

கொழும் [illegible] .24

ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகிக்கொண்டுள்ள மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி தனது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான இறுதி முடிவை இன்று வெளியிடவுள்ளது.

அரசிற்கு ஆதரவளிப்பதா அல்லது தனித்து செயற்படுவதா என்பதைத் தீர்மானிப்பதற்காக கட்சியின் மத்திய குழுவும் அரசியல் பீடமும் இன்று கூடவுள்ளன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-சி)

# அன்னை பார்வதியிடம் மத்திய அரசு வருத்தம் தெரிவிக்கவேண்டும் - வைகோ

சென்னை,ஏப்.24

பிரபாகரனின் தாயார் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவத்துக்கு மத்திய அரசு வருத்தம் தெரிவிக்க வேண்டும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் ஆகியோர் வலியுறுத்தினர்.

மேலும், தமிழீழ விடுதலை போராட்டம் அழியாது. எங்களை விட வீர உணர்ச்சி மிக்க இளைஞர்கள் எதிர்காலத்தில் வருவார்கள் - என்று வைகோ தெரிவித்தார்.

மருத்துவ சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு வந்த பிரபாகரனின் தாயாரை திருப்பி அனுப்பியமையைக் கண்டித்து ம.தி.மு.க. சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் நடைபெற்றது. உண்ணாவிரதத்திற்கு தமிழர் உரிமை கூட்டமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார்.

உண்ணாவிரதத்தைத் தொடக்கி வைத்து வைகோ பேசியவை வருமாறு -

மருத்துவ சிகிச்சைக்காக வந்த பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பிய சம்பவம் வேதனைக்கு உரியது மட்டும் அல்ல, தமிழர்களின் வரலாற்றிலேயே துடைக்கப்படமுடியாத அவமான சம்பவம் ஆகும்.

விமான நிலையத்தில் நாங்கள் எந்த ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. விமான நிலையத்திற்கு வெளியே என்னையும், பழ.நெடுமாறனையும் பொலிஸ் அதிகாரிகள் வழி மறிக்கவேண்டிய அவசியம் என்ன?

பார்வதி அம்மாள் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்று இருந்தால் எப்படி அவருக்கு விசா வழங்க முடியும். மனித நேயம் இருந்திருந்தால், பார்வதி அம்மாளை விமானத்தில் இருந்து இறங்க அனுமதித்து ஓர் அறையில் படுக்கவைத்திருக்கலாம் அல்லவா? இதை ஏன் செய்யவில்லை. பார்வதி அம்மாளை வைத்து தமிழ் ஆதரவு பிரசாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் துளி அளவும் எமக்குக் கிடையாது.

மனிதாபிமான செயல் குழிதோண்டி புதைக்கப்பட்ட இந்த சம்பவத்திற்கு மத்திய அரசு வருத்தம் தெரிவிக்கவேண்டும். தவறு நேர்ந்துவிட்டது வருந்துகிறோம். இந்தியாவுக்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றும் நீங்கள் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் இந்திய அதிகாரிகள் மூலமாக பார்வதி அம்மாளுக்கு தகவலை அனுப்பவேண்டும் - என்றார்.



நெடுமாறன் பேசியவை வருமாறு:-

பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்க அனுமதி மறுக்கப்பட்டமை குறித்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என்று அத்வானி கூறியிருக்கிறார். இதைத்தான் நாங்களும் கேட்கிறோம்.

நடந்த சம்பவத்திற்கு மத்திய அரசு பார்வதி அம்மாளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவரது விசாவைப் புதுப்பிக்க வேண்டும். அப்போதுதான் அவர் வருவார் - என்றார்.

## கால்நடை அமைச்சை ஏற்க ஆறுமுகன் மறுப்பு

கொழும்பு,ஏப்.24

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான ஆறுமுகன் தொண்டமான் நேற்று அமைச்சரவைப் பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்குபற்றினார். ஆனால் அமைச்சுப் பதவி எதையும் அவர் ஏற்கவில்லை.

அவருக்குக் கால்நடை அமைச்சை வழங்க ஜனாதிபதி தயாராக இருந்தார் என்றும், ஆனால் அது தமக்குத் தேவையில்லை என ஆறுமுகன் தொண்டமான் மறுத்து விட்டார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இ.தொ.காவுக்கு இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி.நியமனத்துக்குப் பதிலாக ஒரு எம்.பி.பதவியே அரசுத் தரப்பால் வழங்கப்பட்டதால் ஏற்கனவே சீற்றமுற்றிருந்த ஆறுமுகன் தொண்டமான், காத்திரமான அமைச்சு தமக்கு வழங்கப்படாதமையால் மேலும் சீற்றமும் விசனமும் அடைந்தார் எனவும் -

இதனாலேயே கால்நடை அமைச்சை ஏற்க மறுத்தார் எனவும் -

சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (அ-சி)

# வேறு சிறைக்கு நளினி மாற்றம்; 'ஏ' வகுப்பிலிருந்து, 'பி'க்கு!

சென்னை, ஏப்.23

கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்ட விவகாரத்தில் ராஜீவ்காந்தி கொலை வழக்கின் ஆயுள் கைதி நளினி வேலூர் பெண்கள் சிறையில் இருந்து வேறு சிறைக்கு மாற்றப்படுகிறார்.

மேலும் சிறையிலும் அவருக்கு இனிமேல் 'ஏ' வகுப்பு வழங்கப்படமாட்டாது என்றும், 'பி' வகுப்பில் அவர் அடைக்கப்படுவார் என்றும் தெரிகிறது.

சிறை நன்னடத்தைத் விதிக்கு மாறாக கைத்தொலைபேசியைப் பதுக்கிய குற்றத்திற்காக நளினி மீது 4 சட்டப்பிரிவின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கைத்தொலைபேசி பதுக்கிய குற்றத்திற்காக நளினி மீது சில நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது. முதல் கட்டமாக அவரை வேலூர் பெண்கள் சிறையில் இருந்து வேறு சிறைக்கு மாற்றுவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது எனக் கூறப்படுகிறது. விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நளினி எம்.ஏ. பட்டதாரி என்பதால் அவர் தற்போது சிறையில் 'ஏ' வகுப்பில் அடைக்கப்பட்டுள்ளார். கட்டில், மெத்தை, மின்விசிறி வசதி, தரமான சாப்பாடு போன்றவை 'ஏ' வகுப்பில் வழங்கப்படுகின்றன.

கைத்தொலைபேசி பதுக்கிய குற்றத்திற்காக நளினி இனிமேல் 'பி' வகுப்புக்கு மாற்றப்படுவார் என்று தெரிகிறது. 'பி' வகுப்பில் தனி அறை கிடையாது. மற்ற [illegible] பெண் கைதிகளோடு தான் இருக்க வேண்டும். கட்டில், மெத்தை வசதியும் இல்லை. தரையில்தான் தூங்க வேண்டும்.

## ஐ.பி.எல்லை விளையாட்டுத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வருக!

### ஜெயந்தி நடராஜன் வலியுறுத்து

புதுடில்லி,ஏப்.24

ஐ.பி.எல். அமைப்பை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் - என்று டில்லி மேல் சபையில் ஜெயந்தி நடராஜன் வலியுறுத்தினார்.

ஐ.பி.எல். விவகாரம் தொடர்பாக டில்லி மேல் சபையில் நேற்று விவாதம் நடந்தது. அதில் பங்கேற்ற ஆளும் கூட்டணி மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவருமே ஐ.பி.எல்லின் செயற்பாடுகள் குறித்துக் கடுமையாக விமர்சித்தனர்.

சிவசேனா கட்சியைச் சேர்ந்த மனோகர் ஜோஷி பேசும்போது, ஐ.பி.எல். அமைப்பை மூன்று ஆண்டுகளுக்கு தடை செய்ய வேண்டும் என்றும், லலித்மோடி மீது சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியையும், நலன்புரி கழகத் தலைவியுமான திருமதி ஜெகதாம்பாள் நவலோகநாதன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இலக்குமிப்பிள்ளை கந்தசாமி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

(97408)

**நலன்புரிக் கழகம்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தீவக வலயப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழித்திறன் விருத்திச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. செயலமர்வு கர்லை 8.30இற்கு ஆரம்பமாகும் எனவும், அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் உரிய நேரத்திற்கு சமுகந்தரவேண்டும் எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள் ளார்.

(50-267)

## .Shakespeare Seminar 2010



We cordially invite you to the Shakespeare Seminar 2010 to be held at the Library Auditorium, University of Jaffna on the 26th of April 2010 from 9.30 a.m. to 1.30 p.m.

**Linguistics and English Society, University of Jaffna.**

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள்: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்/பெண்கள்)

**தகைமைகள்:** க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இருதடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(a) இளைப்பாறிய பொலிஸ்/படை உத்தியோகத்தர்கள், சாரணர், செண்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**குறிப்பு:** மேற்கூறப்பட்ட தகைமைகளில் a+b உள்ளவர்களுக்கு கல்வித் தகைமையில் விலகல் அளிக்கப்படும். மேலும் தகுதியானவர்கள் மேற்பார்வையாளர் தரத்திற்கு தெரிவு செய்யப்படுவர். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும். உயரம் 5'4'', மார்பு 32''

**வயதெல்லை:** 22 வயதிற்கு மேற்பட்டோர்.

**நேர்முகப்பரீட்சை:** 28.04.2010 புதன்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறும். கீழ்குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

1) கிராமசேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6மாதத்திற்குட்பட்டது)
2) வதிவிடச் சான்றிதழ்
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4) கல்வித் தராதரப்பத்திரங்கள்
5) தேசிய அடையாள அட்டை
6) குடும்ப அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப்பிரதியுடன், போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

(சி/567154) **பணிப்பாளர்.**

## வரவேற்பு உபசார விழா கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஏப்.24

வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரண சங்கத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நடத்தப்படவிருக்கும் வரவேற்பு உபசாரவிழா தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணியளவில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் வலி.வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட சகல பொது, அரசாங்க உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொள்வதுடன், விழா ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளிலும் பங்கு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)


**புதிய இடத்தில் புதிய தலைமையில் எமது சேவைகள்**



பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை.
உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.
S.S.பரோதரன் ஆட்ஸ், 381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோவில் அருகில்) (சி/566993)


## மரண அறிவித்தல்

### இராசையா மயில்வாகனம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மயில்வாகனம் நேற்று (23.04.2010) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வதியின் அன்புக் கணவரும் ராதாகிருஷ்ணனின் அன்புச் சகோதரரும் ஸ்ரீதரன், ஸ்ரீவாணி, ஸ்ரீகாந்தன், சிவானந்தினி, வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தெய்வேந்திரம், இராமச்சந்திரன், மனோகர[illegible] காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் பாஸ்கரன், பவானி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ரிஷோக்கின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17, சந்தானமாதா கோவில் ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (97407)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கந்தப்பு குருசாமி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கரந்தனை புகுந்த இடமாகவும், லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு குருசாமி 18.04.2010 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் லட்சுமி (றஞ்சி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம், நவமணி, நடராசா, அன்னலட்சுமி, மார்க்கண்டு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கமலாஜினி (கமலா- லண்டன்), கமலேஸ்வரன் (ஈசன், கனடா), லங்கேஸ்வரன் (லகு- சுவிற்ஸர்லாந்து), கங்காஜினி (கங்கா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகனேசன் (லண்டன்), நகுலேஸ்வரி (கீதா, கனடா), குணநாதன் (குகா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி குணவதி (பாலு- பிரான்ஸ்), காலஞ்சென்ற V.K.குணரத்தினம், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, நற்றவமலர் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதுசா, சிந்து, இராகர், காவியா, விதுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை LONDON இல் உள்ள HENDON CREMATORIUM (NORTH CHAPEL) HOLDERS HILL ROAD, MILL HILL LONDON NW7 1NB என்ற முகவரியில் பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேலதிக விவரங்களுக்கு:**
கமலா-லண்டன்: 0208 575 3769,
ஈசன்-கனடா: 416 287 5804,
லகு-சுவிற்ஸர்லாந்து: 079 423 4856.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டவேளை...

# தாம் எம்.பி. பதவி ஏற்று மஹிந்த அரசுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தினாராம்!

## நாடாளுமன்ற அமர்வை ஒட்டி பொன்சேகா பேட்டி

கொழும்பு, ஏப்.24

அரசின் சகல தடைகளையும் மீறி நாடாளுமன்ற உறுப்பினராகத் தான் பதவியேற்றுள்ளதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

'ரொய்ட்டர்' செய்திச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் [illegible]னைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'ரொய்ட்டர்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினராகத் தான் பதவியேற்றதன் மூலம் தன்னை சிறைவைத்துத் தனது அரசியல் வாழ்க்கையை நசுக்க நினைத்த மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு பெரும் அவமானத்தைத் தாம் ஏற்படுத்திவிட்டார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

''அவர்கள் எனது அரசியல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு முயன்றனர். எனினும் சகல தடைகளையும் மீறி நாங்கள் நாடாளுமன்றத்திற்கு வந்துள்ளோம்.'' - என ரொய்ட்டருக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

''நான் ஒரு வெற்றியை இதன்மூலம் பெற்றுள்ளேன். இது அரசிற்கு அவமானத்தை ஏற்படுத்தும் விடயம்.''- என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி இராணுவத் தடுப்புக்காவலில் இருந்தபடி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

அவர் இராணுவ நீதிமன்ற விசாரணையையும் எதிர்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதன் அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு அவருக்கு உரிமையுள்ளது.

பெப்ரவரியில் கைதுசெய்யப்பட்ட பின்னர் கடந்த வியாழக்கிழமையே அவர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தார்.

பின்னர் அவர் மீண்டும் கடற்படைத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

''இந்த அரசு மக்களினதும், நாட்டினதும் நலன்களில் அக்கறை கொள்ளாது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். மேலும் அரசு ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தையும் மீறுகின்றது.'' - என்றும் சரத் பொன்சேகா 'ரொய்ட்டருக்கு' தெரிவித்தார்.

''ஆகவே நாங்கள் அனைவரும் இந்த அரசைத் தோற்கடிப்பதற்கு இணைந்துள்ளோம்.'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அதனை விமர்சித்த பத்திரிகையாளர்களைத் துரோகிகள் என சரத் பொன்சேகா குற்றம்சாட்டினார் எனத் தெரிவிக்கப்படுவது பற்றியும் அவர் கருத்து வெளியிட்டார்.

நாட்டின் பாதுகாப்பிற்கும் யுத்தத்தின் வெற்றிக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் சில அறிக்கைகள் வெளியாகின என 'ரொய்ட்டருக்குத்' தெரிவித்த பொன்சேகா, ''அவ்வேளை அந்த அறிக்கைகளைத் துரோகத்தன்மை என்றே நான் குறிப்பிட்டேன். அனைவரையும் நான் துரோகிகள் என முத்திரை குத்தவில்லை'' - என்றும் தெரிவித்தார் என 'ரொய்ட்டர்' மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

# குடாநாட்டில் இன்னும் ஒரு வாரத்தில் மின்சார விநியோகம் சீராகிவிடும்

## திருத்தப் பணி நடக்கின்றது என்கிறார் சபை அதிகாரி

யாழ்ப்பாணம்.ஏப்.24

குடாநாட்டில் தற்சமயம் இடையிடையே தடைப்படும் மின்விநியோகம் ஒரு வார காலத்துக்குள் சீராகிவிடும் என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுன்னாகத்தில் உள்ள 'நோத்பவர்' மின் நிலையத்தின் இயந்திரம் ஒன்று பழுதடைந்ததன் காரணமாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு இடங்களிலும் மாறிமாறி மின்வெட்டு அமுல் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போது திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இன்னும் ஒரு வார காலத்தில் இப்பணிகள் பூரணமடைந்துவிடும். அதுவரையும் குடாநாட்டின் சில பகுதிகளில் குறிப்பிட்டளவு நேரம் மின்வெட்டு அமுலில் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் திடீர் மின்வெட்டினால் மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் சிரமத்துக்குள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

தென்மராட்சிப் பகுதிக்கான மின்விநியோகம் நேற்று முன்தினம் இரவு முழுவதும் தடைப்பட்டது. (ஒ-1-16)

# மட்டுவிலில் நேற்று மின்னல் தாக்கியதில் குழந்தை கருகிப்பலி; தாய் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 24

சாவகச்சேரி, மட்டுவில் கிழக்கில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் மின்னல் தாக்கி இரண்டு வயதுக் குழந்தை சம்பவ இடத்திலேயே உடல் கருகி மரணமானது. அந்தக் குழந்தையின் தாய் படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சாந்தகுமார் அபிநயா (வயது-2) என்ற குழந்தையே மரணமானது. அவரது தாயாரான சாந்தகுமார் வாசுகி (வயது-30) என்பவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருபவை வருமாறு:

பிரஸ்தாப பெண் சமையல் அறையில் அடுப்பில் இரும்புச் சட்டியில் மா வறுத்துக்கொண்டிருந்தார். அச்சமயம் மின்னல் அருகில் உள்ள பலா மரத்தைத் தாக்கியது. அதே சமயம் சமையல் அறையில் இருந்த அந்தப் பெண்ணையும் குழந்தையையும் தூக்கிவீசியது. குழந்தையையும் மனைவியையும் கணவர் காப்பாற்ற முனைந்தார். ஆனால் குழந்தை அந்த இடத்திலேயே மரணமானது. மனைவி உடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து உடனடியாக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

யாழ்.ஆஸ்பத்திரி அவரச சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் அபாய கட்டத்தில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வீட்டில் இருந்த சமையல் அறையை மின்னல் தாக்கியது எனக் கூறப்பட்டது. (ஒ-1-6-207)

## விபத்தில் சிக்கியவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 24

கடந்த புதன்கிழமையன்று அளவெட்டி, கந்தரோடையைப் பகுதியில் இடம்பெற்ற ஹையஸ் வான் - லாண்ட் மாஸ்ரர் விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் செல்வரட்ணம் சிவரூபன் (வயது-27) என்ற லாண்ட் மாஸ்ரர் சாரதியே மரணமானார். அதில் பயணம் செய்து காயமடைந்த க. சயந்தன் (வயது-16), தேவராசா யசோதரன்(வயது-15) ஆகிய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வான்சாரதி கைது செய்யப்பட்டு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார். (ஒ-16)

## மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நாளை

கைதடி, ஏப். 24

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 54ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மாவட்ட ரீதியாக மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நிலைய முன்றலில் இருந்து ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்தப்போட்டிகளில் பங்குபற்றவிருக்கும் வீரர்களை அன்று காலை 6 மணிக்கு நிலையத்துக்கு வருமாறு நிலையத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-1-288)

# யாழ்.சிறைச்சாலை கைதிகளின் உண்ணாவிரதப்போர் தொடர்கிறது

யாழ்ப்பாணம்.ஏப்.24

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கைதிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதைக் கண்டித்தே 16பேர் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் ஐந்து சிறைக் கைதிகள் அண்மையில் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர் என்றும் மேலும் கைதிகள் சிலரை அனுராதபுரம் சிறைக்கு மாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியமுடிகிறது என்றும் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே தாங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க நேர்ந்ததாக கைதிகள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, இந்த உண்ணாவிரதப் போராட்டம், நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு எதிரானது என்பதால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சிறைச்சாலைத் திணைக்களம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது. அதேசமயம், அடுத்தகட்ட விசாரணைகளுக்கு முன்னிலைப்படுத்தும் வரை தடுத்து வைப்பதற்காக குறித்த கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்ல [illegible] அவர் குறிப்பிட்[illegible] (ஒ-[illegible])

# அன்னை தெரேஸா சபையின் பெயரிலும் நிதி மோசடியில் ஈடுபட்டுவரும் ஆசாமிகள்!

கொழும்புத்துறை, ஏப். 24

ஏழை மக்களுக்காகவே வாழ்ந்து மரணித்த அன்னை தெரேஸாவின் பெயரிலும் ஆசாமிகள் சிலர், நிதிமோசடியில் ஈடுபட்டு வருவது குறித்துத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கோப்பாயில் இயங்கிவரும் அன்னை தெரேஸா அன்பு பரப்புக் கன்னியர் சபையின் பெயரில் சமூகவிரோதக் கும்பல் ஒன்று பொதுமக்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களிடம் பணம் சேகரித்து வருவதாகச் சபையினர் கவலை தெரிவிக்கின்றனர்.

எமது சபையினர் எங்கும் சென்று அன்னையின் பெயரில் ஒருபோதும் நிதி சேகரிப்பில் ஈடுபடுவதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எமது சபை ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோரின் நலன் சார்ந்ததாகும். இதற்குரிய நிதியை நாங்கள் எங்கும் சென்று சேகரிப்பதில்லை. அதேசமயம் பரோபாகாரிகள் நேரடியாகத் தரும் உதவிகளை மறுப்பதில்லை. எமது சபையின் பெயரால் சில மோசடி நபர்கள் பணம் திரட்டுவதை அறிந்து கவலை அடைகிறோம். எனவே இவ்விடயத்தில் மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும் என்று சபைச் சகோதரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான மோசடியில் ஈடுபடுவோர் குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்குமாறும் சபையினர் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,



# நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலில் அமெரிக்காவில் தேசிய வேட்பாளராக உருத்திரகுமார்

வாஷிங்ரன், ஏப். 24

எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெற வுள்ள நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலில் அமெரிக்காவின் தேசிய வேட் பாளராக பிரபல சட்டத்தரணியான விசுவ நாதன் உருத்திரகுமாரன் போட்டியிடவுள்ளார்.

அமெரிக்காவில் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலானது பிராந்தியரீதி யாகவும் தேசியரீதியாகவும் நடத்தப்படவுள் ளது. தமிழர்கள் வாழும் பகுதிகள் 8 பிராந் தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் ஒருவர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படும் அதே வேளை தேசியரீதியிலும் இருவர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பிராந்தியந்திய அடிப்படையில் போட்டி யிடும் வேட்பாளர்களுக்கு அக் குறிப் பிட்ட பிராந்தியத்தில் வாழ்ந்து வரும் தகைமை யுள்ள வாக்காளர் மட்டுமே வாக்களிக்க முடியும். வாக்களிக்கத் தகைமையுள்ள அனைத்து வாக்காளர்களும் தேசிய மட்டத் தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடியும். ஒரு வாக்காளர் தமது பிராந்தியத்தில் போட்டியிடும் ஒரு வேட் பாளருக்கும் தேசிய மட்டத்தில் போட்டி யிடும் இரு வேட்பாளர்களுக்கும் வாக்க ளிக்க முடியும்.

அமெரிக்காவின் நாடுகடந்த அரசாங் கத்தின் தேர்தலைப் பொறுப்பேற்று நடத் தும் தேர்தல் ஆணையத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில வெளியிடப் பட்டுள்ள வேட்பாளர் பெயர் விவரங்கள் பின்வருமாறு: பிரதேச ரீதியாகப் போட்டி யிடும் வேட்பாளர் விவரம்:

நியூ இங்கிலன்ட்: சுபா சுந்தரலிங்கம், நியூயோர்க்: டாக்டர் செல்லத்துரை, கே. தயாபரன், சிவஞானம் கணேசன், ஜெயபர காஷ், ஜெயலிங்கம், மிட் அட்லான்டிக்: பிரபாரன் பொன்னத்துரை, சவுத்: டாக்டர் போல் குறொசெற், மிட் வெஸ்ற்: டாக்டர் தவே தவேந்திரராஜா, நோர்த் வெஸ்ட்: சிவ சங்கரி, சவுத் வெஸ்ட்: அலெக்ஸ்

டொஸ் தேசிய ரீதியாக போட்டியிடும் வேட்பாளர்கள்: டாக்டர் ஜெராட் பிரான் சிஸ், விஸ்வநாதன் உருத்திரகுமாரன்.

# இலங்கை வைத்தியருக்கு நியூஸிலாந்தில் கௌரவிப்பு

கொழும்பு, ஏப். 24

இலங்கையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் நியூஸிலாந்தில் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

நாகலிங்கம் இராசலிங்கம் என்ற 73 வயதான வைத்தியரே இவ்வாறு நியூஸி லாந்து அதிகாரிகளால் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

அகதிகள் மற்றும் புலம்பெயர் சமூகத் திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையை கௌரவிக்கும் நோக்கில் நியூஸிலாந்து இந்த விருதை வழங்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டின் சிறந்த சேவை யாளர்களுக்கான விருது வழங்கும் பட்டிய லில் நாகலிங்கம் இராசலிங்கத்தன் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் மக்கள் நியூஸிலாந்து சூழ் நிலைக்கு ஏற்ற வகையில் வாழ்வதற்கு பல்வேறு வழிகளில் குறித்த வைத்தியர் கடந்த 25 ஆண்டுகளாக ஒத்துழைப்புக் களை வழங்கி வருகிறார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

நியூஸிலாந்து, வாழ்வதற்கு மிகவும் பொருத்தமான இடங்களில் ஒன்று என வும், இந்தக் கௌரவமளிப்பு மகிழ்ச்சிய ளிக்கும் வகையில் அமையப் பெற்றுள் ளது எனவும் இராசலிங்கம் கூறினார்.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் இராச லிங்கம் நியூஸிலாந்தில் வைத்திய சேவை ஆற்றி வருகின்றார்.

வைத்தியர் ராசலிங்கம் நியூஸிலாந்து அகதிகள் பேரவையின் தலைவராக நீண் டகாலம் சேவையாற்றி வருவது குறிப்பி டத்தக்கது. (அ-சி)

## கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயனாக இருவரும் மீட்கப்பட்டனர். கடத் தல் சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய் யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த ஒருவரும் நாவாந்துறையைச் சேர்ந்த இரு வரும் மல்லாகம் நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப் பட்டனர்.

மூவரையும் ஒருமாத காலத்துக்கு தடுத்து வைக்கும் உத்தரவை நீதிவான் பிறப்பித்தார். ( அ-1)


## ஐடியல் அக்கடமி

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.இந்துக்கல்லூரி மைதானம் அருகில்)

O/L DAY CLASS - 2010

பிரிவு - II ஆரம்பம் 26.04.2010 திங்கள் 8AM

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | V.N.பத்மநாதன் B.குகதாசன் | விஞ்ஞானம் | K.நிரோஜன் |
| தமிழ் | S.மதன் | வரலாறு | R.S.சந்திரன் |
| ஆங்கிலம் | K.மனோகரன் | சமயம் | S.கவிதரன் |
| வர்த்தகம் | S.சிவம் | புவியியல் | ஆனந்தராஜ் |

* ஒழுக்கத்துடன் இணைந்த கல்விச் சேவையில் நாம் என்றும் மாணவர் நலனுக்காக.
* எம்மோடு இணைந்தால் வெற்றி நிச்சயம்! அதை கடந்த வருடப் பெறுபேறுகளில் நிரூபித்துள்ளோம்.

★ இம் மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(பி/567152) நிர்வாகி.



## தேவை

ஓவ்செற் மெசின் மைண்டர்

அனுபவம் உள்ளவர்களும்,
பழக விரும்புவர்களும் தேவை.

கணனி ரைப் செற்றிங்

Corel Draw, Pagemaker, Photoshop
அனுபவம் உள்ள இருபாலரும்

யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ்

தொடர்பு : 15/2, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பேசி : 021 2229285



## SM CONSULTANT SERVICE

UK STUDENT VISA

GCE O/L English: C/S + GCE A/L 3 Passes உடன்,
உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும்
விண்ணப்பிக்க தகமைஉள்ளோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

STUDY IN POLAND

போலந்து (POLAND) நாட்டிற்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் ஆரம்பமாகியுள்ளன.
விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
ஏற்கனவே தொடர்புகொண்டவர்கள் விபரங்களுடன் வருகை தரவும்.

STUDY IN UKRAINE

Lungansk & Crimea State Medical University-(Ukraine)
இல் இணைந்து சிறீலங்கா medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பை எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

STUDY IN INDIA

B.E, B.Sc, B.Ed, B.C.A, BBM, B.Com, BPT, BA,LL.B, LL.M, M.Sc, MBBS, MBA போன்ற கற்கைநெறிகளை, இந்தியாவின்(# University of Madras # SRM University # Manipal University இன்னும் இது போன்ற) பிரபலமான பல்கலைக்கழகங்களில்கற்பதற்கு உடனடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.



அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 800 மணிமுதல் மாலை 500 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.



☎ 021 222 3818
☎ 021 567 3818
☎ 077 452 8818
E-mail: mg1404_2009@yahoo.com

தொடர்புகளிற்கு:

இல: 148,கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.


# ஒற்றுமையாகச் செயற்பட கோருகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 24

புதிதாக அமைச்சுப் பதவிகளை ஏற்றி ருக்கும் அமைச்சர்கள், இங்கு புதிய எம்.பிக் களுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண் டும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றும் வகையில் மிகவும் ஒற்றுமையு டன் செயற்படவேண்டும் என்று ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று அவரது தலைமையின் கீழ் இடம்பெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு வைபவத்தின் பின்னர் புதிய அமைச்சர்க ளிடம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறி யவை வருமாறு:-

புதிய அமைச்சர்கள் அனைவரும் ஒன் றுபட்டுச் செயற்படுவீர்கள் என்று நான் நம்புகிறேன். மக்களின் எதிர்பார்ப்பும் அதுதான். உங்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் அமைச்சுக்கள் அனைத்தும் மிக வும் சக்திவாய்ந்த அமைச்சுக்களாகும்.

உங்களது ஆற்றலைப் பயன்படுத்தி இந்த அமைச்சுக்களை மிகவும் பொறுப்பு வாய்ந்தவையாக மாற்றவேண்டும். மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் உங்களை அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை நிறை வேற்றும் விதத்தில் நீங்கள் செயற்பட வேண்டும்.

மக்கள் பல சந்தர்ப்பங்களில் தேர்தல்க ளின் ஊடாக அவர்களின் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். எதிர்க்கட்சிகள் அப்போ தெல்லாம் அதிக வாக்குகளைப் பெற்ற சந் தர்ப்பங்கள் உள்ளன. ஆனால், இம்முறை தேர்தலில் அரசுக்கு மக்கள் அதிக வாக்கு களை அளித்துள்ளனர். எமது நடவடிக் கைகளை ஏற்றே மக்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளி யேயும் மக்களின் நலனுக்காக நாம் செயற் படவேண்டும். ஒருவரையொருவர் குறை கூறாது, ஏசாது, ஓர் அரசின் கீழ், அமைச்சர வையின் கீழ், நீங்கள் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்படவேண்டும். புதிய எம்.பிக் களுக்கு முன்னுதாரணமாக நீங்கள் நடப்பீர் கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். - என்றார்.

## 37 அமைச்சர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசம்பாவிதங்கள் சம்பந்தப்பட்ட விசா ரணை இன்னும் நிலுவையில் இருப்பதால் இவர்களின் அமைச்சு நியமனம் தாமத மாகியிருக்கக்கூடும் என்ற கருத்து நிலவி யது.

இதேசமயம்,திஸ்ஸ விதாரண, ஆறு முகன் தொண்டமான் போன்றோரும் நேற்று அமைச்சுப் பதவி எதனையும் ஏற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த அரசில் அமைச்சரவை அந்தஸ் துப் பெற்ற அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்துப் பெறாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என 109பேர் பதவி வகித்த னர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசில் தற்போது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என 76பேர் பதவியேற்றுள் ளனர். (அ-சி)

## ஒருமித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத் தியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

பூட்டானில் நேற்று ஆரம்பமாகிய சார்க் சம்மேளன மாநாடு நிறைவடைந்த பின்னர் இந்தக் கலந்துரையாடல்கள் ஆரம் பிக்கப்படும் என்றும் யுத்தம் கொழுந்து விட்டு எரிந்த நாட்டில் மீண்டும் யுத்தம் நடைபெறாத பின்னணியை ஏற்படுத்த வேண்டியது எமது அனைவரினதும் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வரு மாறு -

எதிர்வரும் காலங்களில் ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சி பொதுத்தேர்தல்களில் வெற்றி பெறக் கூடாது என்பதற்காகவே ஜே.ஆர். ஜெயவர்தன 1977ஆம் ஆண்டு விகிதா சார முறையிலான தேர்தலை அரசமைப் பின் மூலம் உருவாக்கினார்.

அன்று அவர் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற கனவுடனேயே இதனை உருவாக்கியது.

ஆனால் அவர், அன்று கண்ட கனவு இன்று பலிக் காமல் போய்விட்டது. அரச மைப்பின் மூலம் விகிதாசாரத் தேர் தல் முறையை அறி முகப் படுத்தியதன் பின்னர் நடைபெற்ற 6 பொதுத் தேர்தல் களில் ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட் டமைப்பு 4 தடவை கள் வெற்றி பெற் றுள்ளது.

ஆக ஐக்கிய தேசி யக் கட்சியானது 1989 ஆண்டும், 2000 ஆம் ஆண்டும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் மாத் திரமே வெற்றி பெற் றது. இதன் மூலம் ஜே.ஆர். ஜெய வர்தன அன்று கண்ட கனவு பலிக் காமல் போய்விட்ட து - என்றார். (அ-சி)

## புலி உறுப்பின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் அந்த அறிக்கையில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட புலிகள் பற்றிய விவரங்கள் எவையும் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேநேரம், மலேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜி.வி.டி. யூ. ஏ. பெரேரா உள்துறை அமைச்சரின் இவ்வறிக்கை குறித்து கருத்துக்கூற மறுத்துள்ளார்.

ஆனால் பெயர் குறிப்பிட விரும்பாத மலேஷிய உயரதிகாரி ஒருவர் ஊடகங்க ளுக்குக் கருத்துக் கூறுகையில், புலிகளின் முக்கிய பெருந்தலைவர் ஒருவரும் கடந்த ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார் என்றார்.

இருப்பினும், அப்புலித் தலைவரின் பெயரைக் குறிப்பிட அவர் மறுத்துவிட் டார்.

புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான கே.பி. எனப்படும் கே. பத்ம நாதன் கடந்த ஒகஸ்ட் மாதம் கோலாலம் பூரில் வைத்து கைதுசெய்யப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டாரென நம் பப்படுகின்றது. (அ-சி)


## New Science Centre
Jaffna

A/L - Physics திரு. ம.கிப்பேர்மன் (B.Sc)

★ ஆரம்பம் 25.04.2010 ஞாயிறு

| | |
|---|---|
| * Paper Class | 11.30 - 12.30 |
| * பொறியியல் | 12.30 - 01.30 |
| * வெப்பவியல் | 04.30 - 05.30 |

★ ஆரம்பம் 26.04.2010 திங்கள்

| | |
|---|---|
| * இலத்திரனியல் | 03.00 - 04.00 |

(97421)



## 'தைரொயிட்' நோயாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்

Abbott நிறுவனத்தின் அனுசரணையுடன்
Lava Hospital நடத்தும் வைத்திய முகாமில்
தைரொக்ஸின் குறைபாட்டைக் கண்டறியும் இலவச
இரத்தப் பரிசோதனை (TSH) மேற்கொள்ளப்படும்.
மற்றும் இதர நோய்களுக்கான
வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும்.



இடம் : சென்.பற்றிக்ஸ் கல்லூரி
காலம் : நாளை(25.04.2010) 8.30 a.m



## A/L கருத்தரங்கு

2010ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் கலைத்துறை மாணவர்களுக்கான விசேட செயலமர்வு.

★ காலம் : 28.04.2010 புதன்கிழமை
★ இடம் : உயர்கலைக்கல்லூரி, மீசாலை.

| | | | |
|---|---|---|---|
| 01. வரலாறு | R.R.ஆனந்தன் | 08.00 - 10.00மணி | |
| 02. தமிழ் | R.வசீகரன் | 10.00 - 12.00மணி | |
| 03. புவியியல் | S.செல்வா | 12.30 - 02.30மணி | |
| 04. இந்துநாகரிகம் | S.சிவஞானம் | 02.30 - 04.30மணி | நிர்வாகி. |



" வெளி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "
கணக்கீடு D.Sam
A/L இரவுநேர வகுப்பு
ஏப்பிரல்- 27 இரவு 07 மணி
DMI JAFFNA
"நிபந்தனைகள் அற்ற அனுமதிகள்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.